www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

சிறப்பிதழ்
மகஇக மாத இதழ் - டிசம்பர் 2001
ரூ. 10

## அமெரிக்க பயங்கரவாதம்



படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


பக்க எண்

**ஆப்கான் - மத்திய ஆசியா - எண்ணெய் - இசுலாமியத் தீவிரவாதம்** 4



உலக வர்த்தக மையம் தாக்கப்பட்டிருக் காவிட்டால், ஆப்கானில் அமெரிக்கா தலையிட்டிருக்காதா? ''மத்திய ஆசியாவில் இராணுவ மேலாதிக்கம் - மத்திய ஆசிய எண்ணெய் வயல்கள் - அங்கிருந்து ஆப்கன் வழியே எண்ணெய்க் குழாய் - இவற்றுக்குத் தோதாக ஆப்கானில் அமெரிக்கா வளர்த்த இசுலாமியத் தீவிரவாதம்'' - இவற்றின் 20 ஆண்டு வரலாற்றை விளக்கும் கட்டுரை.

**சி.ஐ.ஏ. : அமெரிக்காவின் பயங்கரவாதப் படை** 13

அமெரிக்கா நடத்தும் பயங்கரவாதப் பயிற்சிப் பள்ளியின் பாடத் திட்டம், அங்கே பயிற்சிப் பெற்ற கொலைப் படைகள் மத்திய அமெரிக்க நாடுகளில் ஆற்றிய 'ஜனநாயகத் தொண்டு' - இவற்றை சி.ஐ.ஏ. அதிகாரி ஒருவரின் வாக்குமூலமும், சமீபத்தில் தணிக்கை செய்து வெளியிடப்பட்டுள்ள அமெரிக்க இராணுவத்தின் ஆவணங்களும் நிரூபிக்கின்றன.

**சாத்தானின் பேரரசு அப்பாவிக் குடிமக்கள்** 18

உலக வர்த்தக மையம் தாக்கப்பட்ட அடுத்த சில தினங்களுக்குள் ''புதிய கலாச்சாரம்'' சார்பில் இணையத்தளமொன்றில் வெளியிடப்பட்ட கட்டுரையும் அதற்கு உலகெங்கிலுமிருந்து வந்த எதிர்வினைகளும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க மிருகத்தின் அடிவயிற்றிலேயே கலகம் கருக்கொண்டு வருவதை அக்கடிதங்கள் காட்டுகின்றன.

**உலக பயங்கரவாதியின் குகைக்குள்ளே...** 22

பயங்கரவாதப் பேரரசான அமெரிக்காவின் சமூகமும், அதன் பண்பாடும், வன்முறை - தனிநபர்வாதம் - நிறவெறி - மேலாதிக்க வெறி ஆகியவற்றால் திணறும் சிறைச்சாலையாக இருப்பதை ஒரு குறுக்கு வெட்டுத் தோற்றத்தில் வாசகர்களுக்குக் காட்ட முயன்றுள்ளோம். அமெரிக்க சொர்க்கம் குறித்த மாயைகளை இக்கட்டுரை அகற்றும்.

- ஒரு திமிங்கிலமும் 5 லட்சம் ஈராக்கியக் குழந்தைகளும் — 22
- அமெரிக்காவில் கார்கள்: ஆடம்பரமா, அவலமா? — 23
- அமெரிக்க மாணவர்கள்: 'இளமையில் பொருளீட்டு' — 25
- 'வலிமையை வழிபடு' - விளையாட்டின் அரசியல் — 26
- தலை சுற்ற வைக்கும் போதை அரசியல், வியாபாரம் — 27
- துப்பாக்கியின் ஜனநாயகம் — 29
- நிறவெறிப் பயங்கரவாதம் — 30
- தேசமே சிறைச்சாலையாக — 32
- எங்கும் எப்போதும் பயமயம் — 33
- அமெரிக்க வாழ்க்கை மாயையும் - உண்மையும் — 34

**இசுலாமிய சர்வதேசியம்: ஒரு மாயமான்** 40



ஆப்கான் ஆக்கிரமிப்புக்கு எதிராக இசுலாமிய அமைப்புகள் உலகெங்கும் நடத்தும் ஆர்ப்பாட்டங்களை எப்படி மதிப்பிடுவது? சதாம் உசேன், பின்லாடன், தாலிபான் ஆகியோர் ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரர்களா? இசுலாமிய சர்வதேசியம் எனும் தவறான போக்கை விமரிசிக்கிறது இக்கட்டுரை

**அமெரிக்க பயங்கரவாதத்தின் வரலாறு** 46



போலீசு, ரவுடி, நீதிபதி ஆகிய மூன்று பாத்திரங்களும் ஒன்றாக இணைந்த உலகின் முதல்நிலை பயங்கரவாதியாக அமெரிக்கா வளர்ந்ததெப்படி? காலனியாதிக்க காலம் முதல் இன்றைய மறுகாலனியாக்கக் காலம் வரை அமெரிக்காவின் வரலாறே ஆக்கிரமிப்பு வரலாறாக இருப்பதை ஒரு பறவைப் பார்வையில் தொகுத்துத் தருகிறது இக்கட்டுரை.

**ஆக்கிரமிப்புப் பட்டியல்** 57

20-ஆம் நூற்றாண்டில் உலகெங்கும் அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்பின் ஆண்டு, நாடு, கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கையைப் பதிவு செய்யும் ஒரு குற்றப் பட்டியல்.


**அறிவிப்பு**

*அன்பார்ந்த வாசகர்களே,*

*இச்சிறப்பிதழ் காரணமாக அக், நவ இதழ்கள் வெளிவரவில்லை. அடுத்த ஜனவரி முதல் இதழ் வழமை போல் வெளிவரும். இவ்விதழ் 60 பக்கங்களுடன் வெளிவருவதால் இதற்கு மட்டும் விலை ரூ. 10 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*



படிப்பகம்

www.padippakam.com


கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

• போர்: **19**
• குரல்: **5-7**
• அக்., நவ., டிச. - 2001

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை, அசோக் நகர்,
சென்னை - 600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை


# அமெரிக்க பயங்கரவாதம்

தலிபான் அரசு வீழ்ந்து விட்டது. பின்லாடனை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்கிறது அமெரிக்க இராணுவம். ஒருவேளை பின்லாடனைக் கொன்றுவிட்டால் அத்துடன் போர் முடிந்து விடுமா? முடியப் போவதில்லை. "ஆப்கானில் அமெரிக்காவுக்குச் சாதகமான பொம்மை அரசொன்றை ஏற்படுத்த வேண்டும்; உலகெங்கிலுமுள்ள அல்காய்தா இயக்கத்தினரைத் தேடிப் பிடிக்க வேண்டும்; ஈராக், சிரியா போன்ற நாடுகளிலுள்ள 'ரவுடி அரசு'களை ஒழிக்க வேண்டும்; கொலம்பியாவின் அமெரிக்க எதிர்ப்புக் கொரில்லாக்களை ஒழிக்க வேண்டும்..." என்று அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக் 'கடமைகள்' நீள்கின்றன.

எது பயங்கரவாதம் என்பதைப் பற்றி ஐ.நா. மன்றத்தில் ஒரு பொதுக் கருத்துக்கு வந்தபின் ஆப்கான் போரைத் தொடங்கலாமே" என்று ஒரு நிருபர் கேட்டபோது "அதெல்லாம் ஆகக் கூடிய காரியமில்லை" என்று அலட்சியமாகப் பதிலளித்தார் ஒரு பிரிட்டிஷ் அமைச்சர்.

எந்தவிதமான சட்டம் ஒழுங்குக்கும் கட்டுப்படாமல் உலகின் போலீசுக்காரனாகவும் நீதிபதியாகவும் தன்னைத்தானே நியமித்துக் கொண்டுள்ள அமெரிக்க அரசுதான் உலகின் முதல் நிலைப் பயங்கரவாதி. "அச்சுறுத்தல் அல்லது வன்முறையின் மூலம் தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயல்வதுதான் பயங்கரவாதம்" என்று முதலாளித்துவ அரசுகள் கூறும் வரையறையின் படியே பார்த்தாலும் அமெரிக்க அரசைக் காட்டிலும் கொடிய பயங்கரவாதி யாரும் உலகில் இல்லை.

1987-இல் பயங்கரவாதத்திற்கெதிராக ஐ.நா.வில் ஒரு தீர்மானம் அறிமுகப் படுத்தப்பட்டது. பாலஸ்தீனத்தில் இசுரேலின் யூதவெறி பயங்கரவாதத்திற்கும் தென் ஆப்பிரிக்க அரசின் வெள்ளை நிற வெறி பயங்கரவாதத்திற்கும் புரவலனான அமெரிக்கா அத்தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தது.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக உலக நீதிமன்றத்தின் கண்டனத்துக்குள்ளான ஒரே நாடு அமெரிக்கா. 1980 முதல் பத்து ஆண்டுகள் அமெரிக்க அரசின் பயங்கரவாதக் கூலிப்படையின் தாக்குதலுக்கு பல்லாயிரம் மக்களை பறிகொடுத்த நிகராகுவா அமெரிக்க அரசின் குற்றங்களை ஆதாரபூர்வமாக நிரூபித்தது. நிகராகுவாவிற்கு அமெரிக்க அரசு நட்ட ஈடு வழங்க வேண்டுமென உத்திரவிட்டது உலக நீதிமன்றம். உலக நீதிமன்றத்தின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட முடியாதென்றது அமெரிக்க அரசு.

உண்மைகள் அமெரிக்க அரசுக்கு எதிராக இருந்தபோதும், தகவல் ஊடகங்கள் அனைத்தும் அமெரிக்க பயங்கரவாதத்திற்கு ஆதரவாக உள்ளன. அமெரிக்க வல்லரசின் கயமையை வெறுப்பதற்கும் எதிர்ப்பதற்கும் பதிலாக, அமெரிக்க வலிமையை வியப்பதற்கும் வழிபடுவதற்கும் மக்களைப் பயிற்றுவித்திருக்கின்றன தகவல் ஊடகங்கள்.

எது பயங்கரவாதம், யார் பயங்கரவாதி என்ற புரிதல் இல்லாமல், அமெரிக்கா யாரையெல்லாம் கைநீட்டுகிறதோ அவர்களெல்லாம் பயங்கரவாதிகள் என்று அங்கீகரிக்கும் இந்த நிலைமை விபரீதமானது. இந்த நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, உலகமயமாக்கம் - மறுகாலனியாக்கத்தை எதிர்ப்பவர்களையும் பயங்கரவாத முத்திரை குத்தி ஒடுக்கும் சட்டம் அமெரிக்காவில் நிறைவேறி விட்டது; இந்தியாவில் அது 'பொடோ' அவசரச் சட்டமாக அவதரித்திருக்கிறது.

ஆக்கிரமிப்புகள், ஆட்சிக் கவிழ்ப்புகள் போன்ற 'சட்டவிரோதமான' வடிவங்களில் இதுநாள்வரை செய்துவந்த அனைத்துக் குற்றங்களையும் 'சட்டப்பூர்வமாகவே' செய்யும் அதிகாரத்தை அமெரிக்கா கோருகிறது. இறையாண்மைக்கும் ஜனநாயகத்திற்கும் போராடுவோரை குற்றவாளிகளாகவும், பயங்கரவாதிகளாகவும் சித்தரிக்கிறது.

அமெரிக்கா தொடுத்திருக்கும் "பயங்கரவாதத்திற்கெதிரான உலகப் போர்" அமெரிக்காவுக்கெதிரான உலக மக்களின் போராக மாற்றப்பட வேண்டும். இரண்டு மாத இடைவெளிக்குப் பின் வெளிவரும் இந்த இதழ் அத்தகைய மக்கள் போரில் ஒரு படைக்கலனாகப் பயன்படும் என நம்புகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com





# ஆப்கான் - மத்திய ஆசியா எண்ணெய் - இசுலாமிய தீவிரவாதம்

ஒருவேளை உலக வர்த்தக மையம் தகர்க்கப்படாதிருந்தால் அமெரிக்கா ஆப்கானில் கால் வைத்திருக்காதா? 'ஆம்' என்று பலரும் சொல்லக்கூடும்.

ஆஸ்திரிய இளவரசனை ஒரு செர்பிய தீவிரவாதி சுட்டுக்கொல்லாமலிருந்தால் முதல் உலகப் போரே மூண்டிருக்காது; ஒரு கோடி மக்களின் மரணமும் தவிர்க்கப்பட்டிருக்கும் என்று நம்புகிறவர்கள் இதையும் நம்பலாம். உலகை மறுபங்கீடு செய்யத் துடித்துக் கொண்டிருந்த ஏகாதிபத்திய நாடுகளுக்கு போரைத் துவக்குவதற்கு அந்தத் தோட்டாச் சத்தம் அன்று ஒரு முகாந்திரம். அந்தக் கொலையின் முக்கியத்துவம் அவ்வளவுதான்.

உலக வர்த்தக மையத்தின் மீது நடந்த தாக்குதல் என்பது கோப்பை நிரம்பி வழிவதற்குத் தேவையான கடைசித்துளி. அவ்வளவுதான். ஒருவேளை இந்தத் தாக்குதல் நடந்திருக்காவிட்டாலும் ஆப்கானில் தலையிடுவதற்கான முகாந்திரமொன்றை அமெரிக்கா உருவாக்கியிருக்கும் என்பதுதான் இக்கட்டுரை முன்வைக்கும் வாதம்.

உலக வர்த்தக மையம் தகர்க்கப்பட்ட சில நாட்களுக்குப் பின் நீனா பர்லே என்ற பிரபல அமெரிக்க நிருபர் இணைய இதழொன்றில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தார்:

''சமீபத்தில் மேன்மக்கள் பங்கு பெறும் வாஷிங்டன் விருந்தொன்றிற்குச் சென்றிருந்தேன். பிரிட்டிஷ் கனவான்களும் அமெரிக்கப் பிரபலங்களும் அங்கே நிறைந்திருந்தார்கள். சவூதி அரேபியாவின் தூதர் இளவரசர் பந்தர் அவர்களுக்கும் புஷ் குடும்பத்தினருக்கும் உள்ள நெருக்கமான நட்பு பற்றியதுதான் அன்றைய விருந்து மண்டபத்தின் கிசுகிசு... சிறிது நேரத்தில் பேச்சு மத்திய ஆசியாவின் எண்ணெய் வயல்களை நோக்கித் திரும்பியது.''

''6000 அமெரிக்கர்கள் செத்தது எண்ணெய் வயல்களுக்காகவா, சவூதி இளவரசர் குடும்பத்துக்காகவா இரண்டுக்கும் சேர்த்தா என்று சிந்தித்தபடியே நான் மண்டபத்தை விட்டு வெளியேறினேன்''... என்கிறார் நீனா பர்லே.

இப்படித்தான் 1991-இல் சதாம் உசேன் குவைத்தை ஆக்கிரமித்தபோது குவைத் மருத்துவமனையிலிருந்து ஒரு நர்ஸை அமெரிக்க நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வந்தார் இன்றைய அதிபர் புஷ்ஷின் தந்தை சீனியர் புஷ்.

மருத்துவமனையிலிருந்து அப்போதுதான் பிறந்த பிஞ்சுக் குழந்தைகளை ஈராக் சிப்பாய்கள் எப்படித் தூக்கிக் கடாசினர் என்பதைக் கண்ணீர் மல்க விவரித்தார் அந்த நர்ஸ். வளைகுடாப் போரில் அணுக்கழிவு ஆயுதங்களை ஏவி, பிறக்கப் போகும் ஈராக்கியக் குழந்தைகளையெல்லாம் கொல்ல அந்த செண்டிமென்ட் பயன்பட்டது. நர்சின் கண்ணீர் ஒரு மோசடி நாடகம் என்பது பின்னர்தான் அம்பலமானது.

ஆனால், ஈராக்கின் பிரம்மாண்டமான ருமைலா எண்ணெய் வயல்களை ஆக்கிரமித்து குவைத்துடன் இணைக்க வளைகுடாப் போர் பயன்பட்டது. இவை அமெரிக்க, பிரிட்டிஷ் எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. இது வளைகுடாப் போரின் பொருளாதார ஆதாயம்.

சந்தர்ப்ப சாட்சியங்கள் பின்லாடன்தான் குற்றவாளி என்று காட்டுவதால், அத்தகைய பயங்கரவாதிக்குப் புகலிடம் அளித்திருக்கும் ஆப்கான் மீது போர் தொடுப்பதாகக் கூறுகிறது அமெரிக்கா. போர் தொடுக்கின்ற இந்த அமெரிக்கப் பயங்கரவாதிகளுக்கெதிரான சந்தர்ப்ப சாட்சியங்களை நாம் பார்ப்போம்.

## புஷ் குடும்பத்தின் வரலாறு

அமெரிக்க அதிபர் புஷ்ஷைப் பற்றி அமெரிக்க ஆளும் வர்க்கமே மறுக்க முடியாத மூன்று உண்மைகள் உள்ளன. ஒன்று - மரியாதைக்குரிய ஜனாதிபதி அவர்கள் அரசியல் அறிவற்ற ஒரு மாங்காய் மடையன். இந்தப் போர் தொடங்குவதற்கு முன்புவரை ஆப்கானிஸ்தான் என்பது ஒரு நாடா, ஊரா, கண்டமா என்பது கூட அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. தேர்தல் பிரச்சாரத்தின் போது நைஜீரியாவை ஒரு கண்டம் என்று குறிப்பிட்டு தனது பூகோள அறிவுக்காக உலகப் புகழ் பெற்றவர்.

அவரது தேர்தல் செலவுக்கு நிதியளித்தவர்களில் முதன்மையானவர்கள் அமெரிக்க எண்ணெய்க் கம்பெனி முதலாளிகள் என்பது இரண்டாவது உண்மை. கருப்பின மக்களைத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி ஓட்டுப் போட விடாமல் தடுத்துத்தான் 'மயிரிழைப் பெரும்பான்மை'யில் அவர் அதிபர் நாற்காலியில் அமர வைக்கப்பட்டார் என்பது மூன்றாவது உண்மை.

துணை அதிபர் **டிக் செனி**, ஹாலி பர்ட்டன் என்ற அமெரிக்க எண்ணெய் நிறுவனத்தின் தலைமை அதிகாரியாகவும், இராணுவத்துறைச் செயலாளராகவும் இருந்தவர்.

தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் **கண்டோலசா ரைஸ்** அம்மையாரும் இன்னொரு எண்ணெய்க் கம்பெனியின் இயக்குனர். ரசிய விவகாரங்கள் குறித்த வல்லுநர்.

தற்போதைய இராணுவத்துறைச் செயலர் **டொனால்டு ரம்ஸ்ஃபீல்டு** சியர்லே என்ற பன்னாட்டு நிறுவனத்தின் தலைமை அதிகாரி.

இன்றைய அரசுச் செயலர் **காலின் பாவெல்** ராஜதந்திரி (Diplomat) அல்ல; ஈராக் போரைத் தலைமையேற்று நடத்திய தலைமை இராணுவத் தளபதி.

www.padippakam.com



சென்ற மே-2000-த்தில் நடந்த ரசிய - அமெரிக்க முதலாளிகள் சங்கக் கூட்டத்தில் டிக் செனி, ரம்ஸ்ஃபீல்டு ஆகிய இருவரும் முக்கியப் பேச்சாளர்கள்.

இன்றைய அதிபர் புஷ்ஷின் தந்தையான முன்னாள் அதிபர் **சீனியர் புஷ்** அவர்கள் அதிபராவதற்கு முன் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. - இன் இயக்குனர். பல அமெரிக்க எண்ணெய் நிறுவனங்களில் முக்கியமான முதலீட்டாளர், பங்குதாரர்.

அது மட்டுமல்ல, கார்லைல் என்ற அமெரிக்க ஆயுதக் கம்பெனியின் ஆசியாவுக்கான அதிகாரபூர்வமான தரகர். இன்றைய புஷ் நிர்வாகத்திலுள்ள பிரமுகர்கள் பலரும் இதில் பங்குதாரர்கள். ஜார்ஜ் சோரோஸ் என்ற பிரபல யூத முதலாளியும் பங்குதாரர். கடைசியாக, பின்லாடன் குடும்பத்தினரும் இதில் பங்குதாரர்கள் என்கிறார் பத்திரிகையாளர் நீனா பர்லே.

பின்லாடன் குடும்பத்திற்கு அப்பன் தரகு வேலை செய்கிறார். மகனோ பின்லாடன் மீது போர் தொடுக்கிறார். இதற்குப் பெயர் பயங்கரவாதத்திற்கெதிரான உலகப்போர்!

இந்த அமெரிக்க பயங்கரவாதிகளுக்கு எதிரான மேற்கண்ட சந்தர்ப்ப சாட்சியங்களைத் தொகுத்துப் பார்த்தால் **சி.ஐ.ஏ. - ஆயுத வியாபாரம் - எண்ணெய் வியாபாரம் - முன்னாள் சோவியத் ஒன்றியம்** என்று முடிகிறது.

அதாவது முன்னாள் சோவியத் ஒன்றியத்தினைச் சேர்ந்த உஸ்பெக்கிஸ்தானில் அமெரிக்கா தற்போது அமைத்துள்ள இராணுவத் தளத்துக்கு நாம் வந்து சேருகிறோம்.

சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் ஆப்கானையும் மத்திய ஆசியாவையும் காலனியாக்குவதற்கு ஜாரின் ரசியாவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் நடத்திய மோதலை "மாபெரும் ஆட்டம்" என்று வரலாற்றாசிரியர்கள் கூறுவர். இன்றைய மறு காலனியாக்கக் காலத்தில் இந்த அழுகுணி ஆட்டத்தின் இரண்டாவது சுற்று தொடங்கியிருக்கிறது.

***

## மத்திய ஆசியாவின் எண்ணெய் வயல்கள்

**கி**ழக்கிலும் தெற்கிலும் பாகிஸ்தான், மேற்கே ஈரான், வடமேற்கே துர்க்மேனிஸ்தான், வடக்கே உஸ்பெக்கிஸ்தான், தாஜிகிஸ்தான், வட கிழக்கே சீனாவின் ஜின்சியாங் மாநிலம் ஆகியவற்றால் சூழப்பட்ட நாடு ஆப்கானிஸ்தான்.

இன்று ஆப்கானில் பின் லாடனைத் தேடி அமெரிக்க இராணுவம் படையெடுப்பதற்கு முன்னமே, மத்திய ஆசிய நாடுகளின் இயற்கை வளங்களை - குறிப்பாக எண்ணெய், எரிவாயுவைத் தேடி அமெரிக்க நிறுவனங்கள் படையெடுக்கத் தொடங்கிவிட்டன.

2000 மைல் நீண்டு அகன்ற ஸ்டெப்பி புல்வெளிகளும், பனிபடர்ந்த நெடிய மலைத் தொடர்களும் கொண்ட மத்திய ஆசிய நாடுகள் அமெரிக்க முதலாளிகளின் நாக்கில் எச்சில் ஆறாய்ப் பெருகுமளவு இயற்கை வளங்களைக் கொண்டிருக்கின்றன.

உலகின் மிகப்பெரிய தங்கச் சுரங்கம் உஸ்பெக்கிஸ்தானிலிருக்கிறது. உலகிலேயே மிக அதிகமான வெள்ளி தாஜிகிஸ்தானின் மண்ணில் புதைந்திருக்கிறது. உலகின் நான்கில் ஒரு பங்கு யுரேனியம் தாது கஜாக்ஸ்தானில் இருக்கிறது.

வளைகுடாவிற்கும் மேற்கு சைபீரியாவிற்கும் அடுத்தபடியாக மிக அதிகமான எண்ணெய் இருப்பு கஜாக்ஸ்தானிலும், துருக்மேனிஸ்தானிலும், அஜர்பைஜானிலும் உள்ளன. இந்த மத்திய ஆசிய நாடுகளில் மட்டும் சுமார் 6.6 டிரில்லியன் (66 இலட்சம் கோடி) கன மீட்டர் எரிவாயு நிலத்தினடியில் இருக்கிறது.

### சோவியத் ஒன்றியம் உடைகிறது எண்ணெய் முதலாளிகள் நுழைகிறார்கள்

சோவியத் ஒன்றியம் உடைந்து இவையனைத்தும் தனி நாடுகளானவுடனே, என்ரான், பிரிட்டிஷ் பெட்ரோலியம், மொபில், எக்ஸான், அமோகோ, செவ்ரான், யூனோகால் ஆகிய பன்னாட்டு நிறுவனங்கள் இந்நாடுகளை நோக்கிப் படையெடுத்தன. இந்த எண்ணெய் நிறுவனங்களுக்காக அந்நாடுகளுடன் வர்த்தக பேரம் பேசியவர்கள் இன்றைய அமெரிக்க ஆளும் கட்சியான குடியரசுக் கட்சியின் முக்கியப் பிரமுகர்கள், குறிப்பாக இன்றைய துணை அதிபர் டிக் செனி.

எண்ணெய் எடுப்பதற்கான பேரங்கள் படிந்தாலும் எண்ணெய் எரிவாயுவைக் கொண்டு செல்லும் குழாய்களெல்லாம் ரசியா வழியேதான் செல்கின்றன என்பதால் ரசியா கோருகின்ற வாடகையைக் கொடுக்க வேண்டும். அல்லது எண்ணெய் எரிவாயுவை ரசியாவுக்கு விற்றுவிட வேண்டும்.

கஜாக்ஸ்தானிலிருந்து பிரிட்டிஷ் காஸ் எடுக்கின்ற எரிவாயுவை ஆயிரம் கன மீட்டர் 8.74 டாலருக்கு ரசியாவுக்கு விற்க வேண்டியிருக்கிறது என்றும் உலகச் சந்தையில் இதையே 80 டாலருக்கு விற்று அதிக லாபம் பார்க்க முடியும் என்றும் கூறி வயிறெரிந்தது அந்த நிறுவனம். (எண்ணெய் எரிவாயு விற்பனையில் பன்னாட்டு நிறுவனங்கள் அடிக்கும் கொள்ளையை இதிலிருந்து வாசகர்கள் புரிந்து கொள்ளலாம்)

1993-இல் அமெரிக்காவின் செவ்ரான் நிறுவனம் கஜாக்ஸ்தானிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கு 10 பில்லியன் டாலருக்கு ஒப்பந்தம் போட்டது. ஆனால் ரசியாவோ கஜாக்ஸ்தானிலிருந்து கருங்




படிப்பகம்

www.padippakam.com







காலின் பாவெல், புஷ், ரம்ஸ்பீல்டு : எண்ணெய் ஆயுத முதலாளிகளின் கூலிப்படைத் தளபதிகள்.

அமெரிக்க அணு ஆயுதத்தால் கருவிலேயே சிதைந்த ஈராக்கியக் குழந்தை.

கடல் வரை புதிய குழாய் அமைக்கத் திட்டமிட்டது. செவ்ரானின் திட்டம் நொறுங்கியது. (நியூஸ் வீக், ஏப்ரல் 1995)

அமெரிக்க முதலாளிகளின் ஆத்திரத்தை உடனே பிரதிபலித்தது கிளிண்டன் அரசு. "யாருடைய செல்வாக்கு மண்டலத்தையும் அமெரிக்கா அங்கீகரிக்காது. அமெரிக்க நிறுவனங்களின் வர்த்தக உரிமைகளை அரசு பாதுகாக்கும்" என்று எச்சரித்தது.

என்னதான் எச்சரிக்கைகள் விடுத்தாலும் புவியியல் ரீதியாக மத்திய ஆசியாவைச் சூழ்ந்திருக்கும் ரசியாவைத் தவிர்த்து - ஐரோப்பியச் சந்தைக்குக் குழாய்ப் பாதை அமைக்க வேண்டுமானால் ஈரான் அல்லது ஜார்ஜியாவின் வழியே துருக்கியை இணைக்கும்படி பாதை அமைக்கப்படவேண்டும்.

ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்திருக்கிறது. மேலும் வளைகுடாவில் ஈரானைத் தனிமைப்படுத்துவதே அமெரிக்காவின் அரசியல் தந்திரம். ஈரானையும் துருக்கியையும் குழாய் மூலம் இணைப்பதன் மூலம் அந்நாடுகளுக்கிடையே நட்புறவு தோன்றிவிடக் கூடும் என்று அமெரிக்காவும் இசுரேலும் அஞ்சுகின்றன. ஜார்ஜியாவிலோ ஆயுதம் தாங்கிய மாஃபியாக் குழுக்களின் அபாயம்!

### எண்ணெய்க் குழாய் – ஆப்கான்

இந்தச் சூழ்நிலையில்தான் எண்ணெய் நிறுவனங்களின் பார்வையில் ஆப்கானிஸ்தான் முக்கியத்துவம் பெறுகிறது. பிரிச்சினைக்குரிய பல நாடுகளுக்கும் காஸ்பியன் கடலுக்கும் குறுக்கே எண்ணெய்க் குழாய் அமைப்பதைக் காட்டிலும், தூரம் குறைந்த, பாதி செலவு மட்டுமே ஆகக்கூடிய பாதை **ஆப்கான் – பாகிஸ்தான் - அரபிக்கடல்** எனும் குழாய்ப் பாதை.

அரபிக்கடலிலிருந்து இந்தியாவையும் பிற ஆசிய நாடுகளையும், வளைகுடாவையும் ஐரோப்பாவையும் எளிதாகச் சென்றடைய முடியும். மேலும் பாகிஸ்தானின் பாலைவனப் பகுதிகளில் கணிசமான அளவு எரிவாயு இருப்பதாகவும் ஒரு பிரெஞ்சுப் பத்திரிகை தெரிவிக்கிறது.

அமெரிக்க நாடாளுமன்றக் குழுவின் முன் சாட்சியமளித்த யூனோகால் நிறுவனம் "ஆப்கானில் அமைதியை நிலைநாட்டாமல் குழாய் பதிக்கும் வேலையைத் தாங்கள் துவங்க முடியாது" என்று வலியுறுத்துகிறது. ஐரோப்பாவைக் காட்டிலும் ஆசியாவின் எண்ணெய் எரிவாயுச் சந்தைதான் வேகமாக வளர்கிறதென்றும், 2010 ஆம் ஆண்டுக்குள் சந்தை இரண்டு மடங்கு அதிகரிக்கும் என்றும் கூறி அமெரிக்க அரசுக்கு நிலைமையின் அவசரத்தை உணர்த்துகிறது.

இதுவரை மத்திய ஆசிய நாடுகளில் பன்னாட்டு நிறுவனங்கள் முடக்கியிருக்கும் மூலதனம் 59 பில்லியன் டாலர்கள். அதாவது சுமார் 3 லட்சம் கோடி ரூபாய். பத்தாண்டுகளாகப் பாதை கிடைக்காமல் அவர்கள் தவித்தையில் கஜாக்ஸ்தானிலிருந்து ரசியா புதியதொரு எண்ணெய்க் குழாயை அமைக்கத் தொடங்கியிருக்கிறது. இது அமெரிக்காவின் வயிற்றெரிச்சலை மேலும் கூட்டும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

அமெரிக்க நிறுவனங்களின் எண்ணெய்த் தாகம் என்பது இந்தப் பிரச்சினையின் பொருளாதார முகம். அமெரிக்காவின் உலக மேலாதிக்கப் பசியும், மத்திய ஆசியாவை விழுங்குவதற்கான அதன் அரசியல் இராணுவ வெறியும் இந்தப் பிரச்சினையின் பிற முகங்கள்.

★★★

### ரசியா – மத்திய ஆசியா – சீனா

1991-இலேயே சோவியத் ஒன்றியத்திலிருந்து மத்திய ஆசிய நாடுகள் பிரிந்து விட்ட போதிலும், இன்னமும் அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியில் பல விதங்களில் அவை ரசியாவுடன் பிணைக்கப்பட்டுள்ளன. எண்ணெய் உள்ளிட்ட அவற்றின் பெரும்பான்மையான வர்த்தகங்கள் இன்னமும் ரசியாவுடன்தான்.

உஸ்பெகிஸ்தான் தவிர்த்து எல்லா நாடுகளிலும் ரசிய இராணுவம் இருக்கிறது. உஸ்பெகிஸ்தானின் இராணுவத்திலும் அதிகாரிகளில் பலர் ரசியர்கள். பனிப்போர் காலத்து அணு ஆயுதங்களும் எங்குமிருக்கின்றன. கஜாக்ஸ்தானில் அணு ஆயுத ஏவுகணைகள் இன்னமும் இருக்கின்றன. கஜாக்ஸ்தானின் இராணுவத்தை ரசிய இராணுவத்துடன் இணைத்து விடுவதற்கான பேச்சு வார்த்தையும் நடக்கிறது.

இப்போது "இசுலாமியக் குடியரசு" என்று இந்நாடுகள் தம்மை அழைத்துக் கொண்டாலும் ஷரியத் சட்டங்கள் போன்றவை அங்கே அமலில் இல்லை. தேர்தல்கள் நடத்தப்பட்டபோதும் நாட்டை ஆளும் அதிபர்கள் முன்னாள் ரசிய போலி கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர்கள்தான். பழைய மரபின் தொடர்ச்சியாக எண்ணெய் வயல்கள் எல்லாம் அரசுடைமையாகவே உள்ளன. ஆனால் இந்த அதிபர்கள் அனைவரும் ஊழல் சர்வாதிகாரிகள்.

பன்னாட்டு நிறுவனங்கள் வாரி வழங்கும் இலஞ்சத்தையும் வாங்கிக் கொண்டு, ரசியாவுடனான உறவுகளையும் துண்டித்துக் கொள்ள முடியாமல் தவிக்கும் சர்வாதிகாரிகள் இவர்கள்.

ரசியாவோ போலி கம்யூனிசம் வீழ்ந்து முதலாளித்துவ சர்வாதிகாரம் நிலைநாட்டப்பட்டுவிட்ட நாடு என்ற போதிலும், ஒரு அணு ஆயுத வல்லரசு என்ற முறையிலும், இராணுவ வலிமையிலும் அமெரிக்காவின் உலக இராணுவ மேலாதிக்கத்தை இன்னமும் அச்சுறுத்துகிறது. தேசிய வெறியனான ஜெரினோஸ்வ்கி முதல் அதிபர்

www.padippakam.com



புடின் வரை ரசியாவின் முதலாளித்துவ அரசியல்வாதிகள் யாரும் தங்கள் உலக மேலாதிக்கக் கனவைக் கைவிட்டுவிட வில்லை என்பதையும் அமெரிக்கா அறிந் தேயிருக்கிறது.

பல மத்திய ஆசிய நாடுகளுடன் பொது எல்லையைக் கொண்டுள்ள சீனா, அமெரிக் காவுடன் விரிவான வர்த்தக உறவுகளைக் கொண்டிருந்தபோதும் அதன் இராணுவ வல்லமையையும், தென்கிழக்காசியப் பொருளாதாரத்தில் அதன் செல்வாக்கையும் குலைப்பது அமெரிக்க உலகத் திட்டத்தின் நோக்கம். மத்திய ஆசிய நாடுகளுடன் வளர்ந்து வரும் சீன வர்த்தகம், சீனா அமைத் திருக்கும் சீனா - கஜாக்ஸ்தான் ரயில்பாதை ஆகியவை அமெரிக்காவை உறுத்தும் கூடுதல் பிரச்சினைகள்.

**அமெரிக்காவின்
மத்திய ஆசியத் திட்டம்**

இந்தப் புவியியல் - அரசியல் சூழலிலி ருந்து தான் அமெரிக்கா மத்திய ஆசியா வுக்கான தனது கொள்கையை வகுக்கிறது. ''சோவியத் பிடியிலிருந்து மத்திய ஆசிய நாடுகளை விடுவித்து, அமெரிக்க முதலா ளிகளுக்கு அங்கே வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதுதான் நமது மத்திய ஆசியக் கொள்கையின் நோக்கம்'' என்று அமெ ரிக்க நாடாளுமன்ற துணைக் குழுவின் ஆவணம் வெளிப்படையாகவே குறிப்பி டுகிறது.

அது மட்டுமல்ல, மத்திய ஆசியாவின் எண்ணெய் வயல்களைக் கைப்பற்றுவதன் மூலம் எண்ணெய் உற்பத்தியில் வளை குடா நாடுகள் பெற்றிருக்கும் ஆதிக்கத்தை உடைப்பது, உலக எண்ணெய் விலையைத் தீர்மானிப்பதில் தனது ஏக போக அதிகாரத்தை நிறுவுவது, 'ஒபெக்' என்ற எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடு களின் ஒன்றியத்தைப் பிளப்பது ஆகி யவை அமெரிக்காவின் நீண்டகாலத் திட்டங்கள்.

தெற்காசியா, சீனா, மத்திய ஆசியா, வளைகுடா நாடுகள் என ஆசியா முழுவ தையும் கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற இரா ணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருக்கிறது ஆப்கானிஸ்தான்.

''ஆசியா ஒரு விமானமென்றால் அதில் விமான ஓட்டியின் அறை ஆப்கா னிஸ்தான்'' என்றான் பிரிட்டிஷ் ஏகாதிபத் தியவாதி கர்சன். இப்போது விமான ஓட்டியின் அறையில் நின்று கொண்டிருக் கிறார்கள் - அமெரிக்க பயங்கரவாதிகள்.

***

**ரசியாவின் ஆப்கான் போர்**

1979-இல் இதே இடத்தில் ரசிய இரா ணுவம் நின்று கொண்டிருந்தது. ஆப்கானின் போலி கம்யூனிஸ்டு ஆட்சியைக் காப்பாற் றவும் அதன் மூலம் தெற்காசியாவில் தனது இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளவும் ஆப்கானில் நுழைந்தது ரசியா.

ரசியாவுடனான பனிப்போரை (cold war) பதிலிப் போராக (Proxy war) மாற்றும் வாய்ப்பை இது அமெரிக்காவுக்கு வழங்கி யது.

கம்யூனிசத்திற்கும், தேச விடுதலைப் போராட்டத்துக்கும் எதிராக இசுலாமிய பழமைவாதத்தைப் பயன்படுத்தும் தந்திரம் அமெரிக்காவுக்குப் புதியதல்ல. இரண்டாம் உலகப்போர் முடிந்தவுடன் அராபிய நாடுகளில் தோன்றிய கம்யூ னிஸ்டு எழுச்சியையும், மன்னர்களுக்கும் முல்லாக்களுக்கும் எதிரான ஜனநாயகப் போராட்டங்களையும், ஏகாதிபத்தியங்க ளுக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்தையும் நசுக்குவதற்கு 'இசுலா மிய மதவாதத்தைத்தான் அமெரிக்காவும், பிரிட்டனும் பயன்படுத்தின.

ஆப்கானில் ஆட்சியிலிருந்த போலி கம்யூனிஸ்டுகள் பெண் கல்வி, வேலை வாய்ப்பு, நிலச்சீர்திருத்தம், மதச் சீர்தி ருத்தம் போன்றவற்றை அமல்படுத்தத் தொடங்கியவுடனே பண்ணையார்களும், பழங்குடித் தலைவர்களும், முல்லாக் களும், பழமைவாதிகளும் அவற்றை எதிர்க்கத் தொடங்கினர். ஜனநாயகம் என்ற சொல்லுக்கே எதிரான இந்தச் சக்திகளை அமெரிக்கா திட்டமிட்டே ஊக்குவித்தது.

மதத்தால் இசுலாமியர்களாக இருந் தாலும் புஷ்டுன், தாஜிக், உஸ்பெக் என்று இன உணர்வால் பிளவுபட்டிருந்த மக்கள், ரசிய எதிர்ப்பு ஆப்கானிய தேசிய உணர் வுக்கு ஆட்பட்டுவிடாமல் கவனமாகப் பார்த்துக் கொண்டது அமெரிக்கா. ஆப்கன் மீதான ரசியாவின் ஆக்கிரமிப்பு இசு லாத்தின் மீதான நாத்திக - கம்யூனிஸ்டு களின் ஆக்கிரமிப்பாகச் சித்தரிக்கப்பட் டது.

**அமெரிக்கா உருவாக்கிய
இசுலாமிய சர்வதேசியம்!**

''இசுலாம் என்பது வெறும் மதமல்ல; அது ஒரு சமூக அரசியல் தத்துவம். அத்த கைய புனிதமான இசுலாத்தின் மீது நாத்தி கர்களான ரசியர்கள் போர் தொடுத்திருக்கி றார்கள்'' என்பதே சி.ஐ.ஏ. நடத்திய பிரச்சா ரத்தின் மையக் கருத்து. எனவே ஆப்கான் போராட்டம் என்பது ''கம்யூனிஸ்டுகளுக் கெதிரான இசுலாமிய சர்வதேசியத்தின் புனிதப் போர்'' (Pan Islamic Jihad) ஆகி விட்டது.

இன்று அமெரிக்கத் தாக்குதலை ''இசு லாத்திற்கெதிரான போர்'' என்று தாலி பானும் பின்லாடனும் கூறியவுடனே ''நாங்கள் பயங்கரவாதத்தைத்தான் எதிர்க் கிறோம். இசுலாமை அல்ல'' என்றுடோனி பிளேரும் புஷ்ஷும் ஊர் ஊராகச் சென்று கதறுகிறார்கள்.

ரசியா என்ற சொல் இருந்த இடத்தில் அமெரிக்கா என்ற சொல்லை பின்லாடன்




**மத்திய ஆசியாவின் எண்ணெய் வயல்களைக் கைப்பற்றுவதன் மூலம் எண்ணெய் உற்பத்தியில் வளைகுடா நாடுகள் பெற்றி ருக்கும் ஆதிக்கத்தை உடைப்பது, உலக எண்ணெய் விலையைத் தீர்மானிப்பதில் தனது ஏகபோக அதிகாரத்தை நிறுவுவது, 'ஒபெக்' என்ற எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் ஒன்றி யத்தைப் பிளப்பது ஆகியவை அமெரிக்காவின் நீண்டகாலத் திட்டங்கள்.**

படிப்பகம்

www.padippakam.com





**புனிதப் போரா, பதிலிப் போரா?**
**அமெரிக்காவின் காசில் பாக் மதரசாக்களில் இசுலாமிய மதவாதப் பயிற்சி.**

**“இசுலாம் என்பது வெறும் மதமல்ல; அது ஒரு சமூக அரசியல் தத்துவம். அத்தகைய புனிதமான இசுலாத்தின் மீது நாத்திகர்களான ரசியர்கள் போர் தொடுத்திருக்கிறார்கள்” என்பதே சி.ஐ.ஏ. நடத்திய பிரச்சாரத்தின் மையக் கருத்து.**

பயன்படுத்துகிறாரே தவிர, மற்றப்படி இந்த வசனத்துக்குரிய ''அறிவுச் சொத்து டைமை'' அமெரிக்காவையே சாரும். 1980களில் ரேடியோ லிபர்டி, ரேடியோ ஃப்ரீ யூரோப் ஆகிய வானொலிகள், ரசியாவின் மத்திய ஆசிய நாடுகள், வளைகுடா நாடுகளுக்கான ஒலிபரப்பில் இசுலாமிய சர்வதேசியத்தைத்தான் பிரச்சாரம் செய்தன.

ரசியாவுடனான பனிப்போரில் இசுலாமிய நாடுகளைத் தன்பக்கம் இழுக்கவும், மத்திய ஆசிய நாடுகளில் முசுலீம் மதவெறியை உருவாக்கவும், சி.ஐ.ஏ. பயன்படுத்திய சித்தாந்த ஆயுதம்தான் இசுலாமிய சர்வதேசியம்.

வெறும் கருத்துப் பிரச்சாரத்துடன் இது நிற்கவில்லை. 1982-இலிருந்து அடுத்த 10 ஆண்டுகளில், 40 நாடுகளைச் சேர்ந்த ஒரு லட்சம் முசுலீம் இளைஞர்கள் பாகிஸ்தானின் மதரஸாக்களில் இவ்வாறு பயிற்றுவிக்கப்பட்டனர். சித்தாந்தப் பயிற்சி மட்டுமின்றி ஆயுதப் பயிற்சியையும் வழங்கியது அமெரிக்கா.

### சி.ஐ.ஏ. - ஐ.எஸ்.ஐ. கூட்டணி

பாகிஸ்தானிய உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ. மூலம் கொரில்லாப் பயிற்சி, நகரங்களைத் தாக்கிச் சீர்குலைத்தல், ரகசியத் தகவல் தொடர்பு முறைகள், சர்வதேச வங்கிகளில் இரகசியமாகப் பணப்பரிமாற்றம் செய்வது ஆகிய அனைத்தும் முஜாகிதீன்களுக்குக் கற்றுத் தரப்பட்டன.

சிறப்புப் பயிற்சிக்காக இந்த முஜாகிதீன்களில் ஒரு பிரிவினர் அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். நிகராகுவாவின் சான்டினிஸ்டா ஆட்சியை ஒழிப்பதற்கு ''காண்ட்ராஸ்'' என்ற கிரிமினல் கொலைப்படையை சி.ஐ.ஏ. எங்கு பயிற்றுவித்ததோ, அதே பயங்கரவாதப் பயிற்சிப் பள்ளியில் இவர்களும் பயிற்றுவிக்கப்பட்டனர். ஆப்கானியர்கள், அராபியர்கள், ஜோர்டானியர்கள், எகிப்தியர்கள் மட்டுமின்றி கறுப்பின முசுலீம்கள் பலரும் வர்ஜீனியாவில் பயிற்றுவிக்கப்பட்டதை ஜான்கோலி என்ற அமெரிக்கப் பத்திரிகையாளர் தனது நூலில் (Unholy wars: Afganistan, America and International Terrorism) குறிப்பிடுகிறார்.

ஆண்டுக்கு 65,000 டன் நவீன ஆயுத தளவாடங்களையும், வெடி மருந்துகளையும் ஆப்கானில் கொண்டு வந்து இறக்கியது சி.ஐ.ஏ.

ஜனநாயக உணர்வுக்கும் தேசிய உணர்வுக்கும் எதிராக மதரஸாக்களில் அளிக்கப்பட்ட இசுலாமிய சர்வதேசியக் கல்வி; சதிகாரக் கிரிமினல்களை உருவாக்குவதற்கென்றே சி.ஐ.ஏ. நடத்திய பள்ளியில் போர்ப் பயிற்சி; இவற்றுடன் போதை மருந்து கடத்துவதற்கும் முஜாகிதீன்களைப் பயிற்றுவித்தார்கள் சி.ஐ.ஏ - ஐ.எஸ்.ஐ. உளவாளிகள்.

1979-இல் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த கஞ்சா உற்பத்தி இரண்டே ஆண்டுகளில் பல்கிப் பெருகியது. புனிதப் போரின் செலவுகளுக்காகக் கஞ்சா பயிரிடுமாறு விவசாயிகளுக்கு உத்தரவிட்டார்கள் முஜாகிதீன்கள்.

ஐ.எஸ்.ஐ.யின் கட்டுப்பாட்டில் நூற்றுக்கணக்கான ஹெராயின் தயாரிப்புக் கூடங்கள் உருவாகின. 1981-இலேயே அமெரிக்காவின் 60 சதவீத போதை மருந்துத் தேவையை ஆப்கான் நிறைவு செய்தது. 1985-இல் பாகிஸ்தானில் 12 இலட்சம் ஹெராயின் அடிமைகள் உருவானார்கள். ஆப்கான் 'விடுதலை' பெற்றது.

***

1989-இல் ரசிய இராணுவம் ஆப்கானை விட்டு வெளியேறிவிட்டது. ஆனால் சி.ஐ.ஏ. உருவாக்கிய இசுலாமிய சர்வதேசியமும், சர்வதேச போதை மருந்து வியாபாரமும் ஆப்கானை விட்டு வெளியேறவில்லை.

''இதற்காக நாம் வருந்தத் தேவையில்லை. ஒவ்வொரு நடவடிக்கைக்கும் ஒரு துணை விளைவு உண்டு. போதை மருந்து ஒரு துணை விளைவு. அவ்வளவுதான். நமது முக்கிய நோக்கம் நிறைவேறிவிட்டது. ரசியர்கள் வெளியேறிவிட்டார்கள்'' என்று போதை மருந்து வியாபாரத்தை நியாயப்படுத்தினார் அன்றைய சி.ஐ.ஏ. இயக்குனர் சார்லஸ் கோகன்.

''உலக வரலாற்றிற்கு எது முக்கியமானது? தாலிபானா, அல்லது சோவியத் சாம்ராச்சியத்தின் வீழ்ச்சியா? சில கிறுக்குப் பிடித்த முசுலீம்களா அல்லது மத்திய (கிழக்கு) ஐரோப்பாவின் விடுதலையா?'' என இன்றைக்கும் கேள்வி எழுப்புகிறார் 1980-இல் அமெரிக்காவின் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பிரெசென்ஸ்கி.

உண்மையில் இசுலாமிய சர்வதேசியமும், போதைமருந்து வியாபாரமும் விரும்பத்தகாத துணை விளைவுகள் அல்ல; தனது உலக மேலாதிக்கப் போர்த்தந்திரத்திற்குப் பயன்படும் வகையில் அமெரிக்காவே உருவாக்கிய செயல் தந்திரங்கள்தான் அவை.

போலி கம்யூனிச ஆட்சி வீழ்ந்து, பனிப் போர் முடிந்து விட்டதனால் அமெரிக்காவின் உலக மேலாதிக்க திட்டமும் முடிந்துவிடவில்லை. எதிர்காலத்தில் தனக்குச் சவால் விடக்கூடிய முதலாளித்துவ வல்லரசாக வளர்ந்துவிடக்கூடாது என்றால் சோவியத் ஒன்றியத்தை உடைக்க

படிப்பகம்

www.padippakam.com



வேண்டும் என்பது அமெரிக்காவின் அடுத்த இலக்கு.

ஆப்கானில் ரசிய இராணுவம் நிலை கொண்டிருந்த காலத்திலேயே இந்த "எதிர்த் தாக்குதலை" அமெரிக்கா தொடங்கிவிட்டது. மத்திய ஆசிய நாடுகளுக்குள் ஐ.எஸ்.ஐ. உளவாளிகளை அனுப்பி அங்கே முசுலீம் தீவிரவாதக் குழுக்களை உருவாக்கும் பணியை 1980இலேயே தொடங்கி விட்டார் பாகிஸ்தான் அதிபர் ஜியாவுல் ஹக்.

### தலிபானை உருவாக்கியது பாகிஸ்தான் மட்டுமா?

ஆப்கானை விட்டு சோவியத் ஒன்றியம் வெளியேறியபின் சில ஆண்டுகள் மட்டுமே நீடித்திருந்த நஜிபுல்லா ஆட்சி, அமெரிக்க - பாக் உதவியுடன் தாக்கிய முஜாகிதீன்களை எதிர்கொள்ள இயலாமல் வீழ்ந்தது.

அதன்பின் பாகிஸ்தான், ரசியா, ஈரான் ஆகிய நாடுகளின் பின்பலத்தில் ஹெக்மத்யார், தோஸ்தம், மசூத் குழுவினரிடையே அதிகாரப் போட்டியும் உள்நாட்டுப் போரும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

இந்நிலையில், ஒரு உறுதியான ஆட்சியை (எண்ணெய்க் குழாய்க்குத் தேவையான அளவு உறுதி) ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டதுதான் தலிபான் குழு. "அமெரிக்காவும், பிரிட்டனும்தான் தலிபான்களைப் பயிற்றுவிப்பதற்கான செலவை ஏற்றுக் கொண்டனர்" என்று அப்போதைய பாகிஸ்தான் பிரதமரான பெனாசிர் புட்டோ "தி நேஷன்" நாளேட்டிற்கு 1997-இல் அளித்த பேட்டியில் ஒப்புக் கொள்கிறார்.

இன்று பாகிஸ்தானில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தும் ஜமாத் - உல் - உலேமா - இ - இசுலாம் (JUI) என்ற அமைப்புதான் அன்று தனது மதரஸாக்களில் தலிபானைப் பயிற்றுவிப்பதற்கு அமெரிக்காவின் எச்சில் காசை வாங்கியது.

1996 செப்டம்பரில் தலிபான் படை காபூலைக் கைப்பற்றியவுடன் அடுத்த சில மாதங்களிலேயே காண்டகாரில் தனது அலுவலகத்தைத் திறந்தது அமெரிக்க யூனோகால் நிறுவனம்.

தலிபான் நடத்திய கொலைவெறியாட்டமும் பெண்கள் மீதான ஒடுக்குமுறையும் 'உலகப் புகழ்' பெற்றுவிட்டதால், தானே சோறு போட்டு வளர்த்த தலிபான் அரசை அங்கீகரிக்க முடியாமல் தவித்தது அமெரிக்க அரசு. ஆனால் அமெரிக்காவின் பினாமியான சவூதி அரசும், அடியாளான பாகிஸ்தான் அரசும் தலிபானை உடனே அங்கீகரித்தன.

வளைகுடா மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் போர்த்தந்திரத்திற்கும் சவூதி - பாக் - தலிபான் கூட்டணிக்கும் நெருங்கிய உறவு உண்டு. ஈரானைத் தனிமைப்படுத்துவது மட்டுமின்றி ஈரான் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கென்று 20 மில்லியன் டாலரை அமெரிக்க நாடாளுமன்றம் அதிகாரபூர்வமாகவே ஒதுக்கியுள்ளது. இந்தப் பணம் ரகசியமாகத் தலிபானுக்கு தரப்பட்டுள்ளதாக ஈரான் அமெரிக்காவைக் குற்றம் சாட்டுகிறது.

இது ஒருபுறமிருக்க, சவூதி மன்னர் குடும்பத்துக்குச் சொந்தமான 'டெல்டா ஆயில்' நிறுவனம் அமெரிக்காவின் யூனோகால் நிறுவனத்தில் ஒரு முக்கியப் பங்குதாரர். மேலும் ஷியா முசுலீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஈரானுடன், சுன்னி முசுலீம் நாடுகளான சவூதி, மற்றும் பாகிஸ்தானுக்குப் பகை. எனவே சவுதி ஷேக்குகளும், பாகிஸ்தான் உளவாளிகளும், தலிபான்களும் சுன்னி முசுலீம்கள் என்ற முறையில் மட்டுமின்றி அமெரிக்காவின் கூட்டாளிகள் என்ற முறையிலும் ஒன்று சேர்ந்தனர்.

### அமெரிக்காவின் இரட்டை வேடம்!

எனவேதான் தலிபான் ஆட்சிக்கு வந்தவுடன் காண்டகாரைச் சுற்றிலுமே கஞ்சா உற்பத்தி 50% அதிகரித்த போதும், பெண்கள் மீதும் மக்கள் மீதும் கொடூரமான அடக்குமுறை ஏவப்பட்ட போதும் அமெரிக்கா அதைக் கண்டிக்கவில்லை.

ஐ.நா. மதிப்பீட்டின்படி, உலக போதை மருந்து வர்த்தகத்தில் மூன்றில் ஒரு பங்கு - அதாவது சுமார் 200 பில்லியன் டாலர் - ஆப்கான் மற்றும் மத்திய ஆசியப் பகுதியிலிருந்து உற்பத்தியாகிக் கொண்டிருந்தது. 1980 முதல் சி.ஐ.ஏ. ஒருங்கிணைத்து நடத்தும் இந்த போதை மருந்துக் கடத்தலை அமெரிக்க அரசு கண்டு கொள்ளாததில் வியப்பில்லை.

ஆனால் வியப்புக்குரிய வேறொரு நாடகம் தொடங்கியது. 1996 - மே மாதம் சூடானிலிருந்து ஆப்கானிஸ்தானில் குடியேறிய பின்லாடன், தீவிரவாதப் பயிற்சிப் பள்ளிகளை அமைத்ததுடன், அமெரிக்காவுக்கு எதிராகப் புனிதப் போர் தொடுக்குமாறு உலக முசுலீம்களுக்கு அறைகூவல் விட்டார். 1996 ஆகஸ்டில் இந்தப் பேட்டி வெளியானது.

ஆனால் 1996 நவம்பரில் நடைபெற்ற ஐ.நா. மன்றத்தின் கூட்டமொன்றில் "தலிபானைத் தனிமைப்படுத்துவது ஆப்கானுக்கும் நல்லதல்ல, நம் யாருக்கும் நல்ல

**1989—இல் ரசிய இராணுவம் ஆப்கானை விட்டு வெளியேறி விட்டது. ஆனால் சி.ஐ.ஏ. உருவாக்கிய இசுலாமிய சர்வதேசியமும், சர்வதேச போதை மருந்து வியாபாரமும் ஆப்கானை விட்டு வெளியேறவில்லை.**



தாலிபானால் கொலை செய்யப்பட்ட வடக்குக் கூட்டணி தலைவர் மசூத். உள்ளே: யுத்தப் பிரபு தோஸ்தம்.

**"உலக வரலாற்றிற்கு எது முக்கியமானது? தாலிபானா, அல்லது சோவியத் சாம்ராச்சியத்தின் வீழ்ச்சியா? சில கிறுக்குப் பிடித்த முசுலீம்களா அல்லது மத்திய (கிழக்கு) ஐரோப்பாவின் விடுதலையா?" என இன்றைக்கும் கேள்வி எழுப்புகிறார் 1980—இல் அமெரிக்காவின் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பிரெசென்ஸ்கி.**

www.padippakam.com





**1996 மே மாதம் ஆப்கானிஸ்தானில் குடியேறிய பின்லாடன் அமெரிக்காவுக்கு எதிராகப் புனிதப் போர் தொடுக்குமாறு உலக முசுலீம்களுக்கு அறைகூவல் விட்டார். ஆனால் 1996 நவம்பரில் நடைபெற்ற ஐ.நா. மன்றத்தின் கூட்டமொன்றில் தலிபானை ஐ.நா. அங்கீகரிக்க வேண்டுமென வாதாடினார் தெற்காசியாவுக்கான அமெரிக்க அரசின் துணைச் செயலர் ராபின் ரபேல்.**

தல்ல'' என்று கூறி தலிபானை ஐ.நா. அங்கீகரிக்க வேண்டுமென வாதாடினார் தெற்காசியாவுக்கான அமெரிக்க அரசின் துணைச் செயலர் ராபின் ரபேல்.

1997- மே மாதம் மசார் - ஏ - ஷெரிப் நகரின் மீது படையெடுத்த தலிபான், பெண்கள் குழந்தைகள் உள்ளிட்ட ஆயிரக் கணக்கான ஷியா முசுலீம்களைக் கொன்று குவித்தது. பதினொரு ஈரானிய அதிகாரிகளையும், ஒரு ஈரானியப் பத்திரிகையாளரையும் கொலை செய்தது.

தொடர்ந்து நடக்கும் உள்நாட்டுப் போரால் எண்ணெய்க் குழாய்க் கனவு தள்ளிப் போனாலும், தலிபானின் ஈரான் எதிர்ப்பு வெறியை அமெரிக்கா புன்னகையுடன் ஆமோதித்தது.

1997 நவம்பரில் தலிபானின் முல்லாக்களை அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்ற யூனோகால், தலிபான் அரசுக்கு அமெரிக்க அரசின் அங்கீகாரத்தைப் பெற்றுத் தர முயன்றது.

1998-இல் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னர் ஜாகிர் ஷாவின் ஆதரவாளருமான ரோரா பேச்சர் ''தலிபான் உருவாக்கத்தில் அமெரிக்க அரசின் பங்கு'' பற்றிய ஆவணங்களைத் தகவல் பெறும் உரிமையின் கீழ் (Right to information) சட்டப்படி தனக்குக் காட்ட வேண்டும் என்று கடுமையாகப் போராடினார். 1996-க்கு முந்தைய ஆவணங்களை (அதாவது தலிபானை சி.ஐ.ஏ. உருவாக்கிய இரகசியத்தைத்) தர மறுத்தது கிளிண்டன் அரசு.

1998 ஆகஸ்டில் கென்யாவிலும் டான்சானியாவிலும் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் தாக்கப்பட்டன. ''இது பின்லாடனின் சதி'' என்று கூறி ஆப்கானிலுள்ள பயிற்சி முகாம்கள் மீது ஏவுகணைத் தாக்குதல் தொடுத்தது கிளிண்டன் அரசு.

பின்லாடனுக்குத் தஞ்சமளிப்பது, மனித உரிமை மீறல், கஞ்சா பயிரிடுதல் போன்ற குற்றங்களுக்காக அக்டோபர்'99 முதல் பொருளாதாரத் தடைவிதித்தது ஐ.நா.

இருந்த போதும் தனது கையாட்களான பாகிஸ்தான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்டுகள் ஆகிய நாடுகள் தாலிபான் அரசுடன் தூதரக உறவு வைத்திருப்பதை அமெரிக்கா கண்டு கொள்ளவில்லை. தலிபானுக்கு கதவை மூடினாலும் சமரசத்திற்குச் சன்னலைத் திறந்து வைத்திருந்தது.

மே, 2001 இல் 34 மில்லியன் டாலர் நிதியைக் கொடுத்து கஞ்சா பயிரிடுவதைக் கட்டுப்படுத்தியதற்காகத் தலிபானைப் பாராட்டி, மேலும் உதவி தருவதாக ஆசையும் காட்டியது அமெரிக்க அரசு.

ஆனால் அடுத்த உதவியைத் தருவதற்குள் செப்டம்பர் 11 முந்திக் கொண்டு விட்டது. தான் பெற்றெடுத்த கம்யூனிசத் திற்கெதிரான ''இசுலாமிய சர்வதேசியம்'' என்ற பேய்க்கு ஞானஸ்நானம் செய்வித்து ''பயங்கரவாதத்திற்கெதிரான உலகப் போர்'' என்று புதுப் பெயர் சூட்டியிருக்கிறது அமெரிக்கா. இசுலாமியத் தீவிரவாதத்திற்கு அமெரிக்கா அளித்து வந்த ஆதரவு இத்துடன் முடிந்தது என்று நம்பலாமா?

***

''என்னை நம்புங்கள். எங்கள் கொள்கை ரசியாவின் நலன்களுக்கு எதிரானதல்ல; மத்திய ஆசியாவிலிருந்து ரசியாவை வெளியேற்றும் திட்டம் எதுவும் எங்களுக்குக் கிடையாது'' என்று பொய்ச் சத்தியம் செய்து ரசியாவின் ஆதரவைக் கோருகிறார் அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் கண்டோலசா ரைஸ். (ஆதாரம்: இஸ்வெஸ்தியா எனும் ரசிய நாளிதழ்).

சீனா, ஈரான் எல்லா அரசுகளிடமும் துண்டைப் போட்டுத் தாண்டுகிறார் டோனி பிளேர். உண்மைகளோ வேறுவிதமாக இருக்கின்றன.

**உலக மேலாதிக்கக் கருவியாக இசுலாமிய சர்வ தேசியம்**

மேற்குச் சீனாவில் தொடங்கி மத்திய ஆசியாவைக் கடந்து ஐரோப்பா வரையில் அமெரிக்காவின் சதி வலை விரிந்திருக்கிறது. சீன, ரசிய நகரங்களில் குண்டு வைக்கும் இசுலாமியத் தீவிரவாதிகளும், உஸ்பெக்கிஸ்தான் தலைநகரின் பெயரை இசுலாமாபாத் என்று மாற்றக் கோரும் இசுலாமிய அமைப்புகளும் சவுதி - பாக் - சி.ஐ.ஏ. முகாமினால் பயிற்றுவிக்கப்பட்டவை என்று அந்நாட்டு அரசுகள் குற்றம் சாட்டுகின்றன.

1995-இல் செசன்யாவில் தாக்குதல் தொடுத்த ஷமில் பசயேவின் 35,000 பேர் கொண்ட இசுலாமியப் படை ஆப்கானில் பயிற்றுவிக்கப்பட்டது. ரசியாவின் எண்ணெய்க் குழாய்களை உடைப்பது, போதை மருந்துக் கடத்தல் ஆகியவை அவர்களது 'அமைதிக்காலப்' பணிகள்.

''தீவிரவாத ஒழிப்பு'' என்ற பெயரில் செசன்யா மக்கள் மீது ரசிய ராணுவம் நடத்திய கொலைவெறியாட்டத்தை மட்டும் வெளிச்சம் போட்டுக் காட்டி ''மனித உரிமை மீறல்'' என்று அமெரிக்கா குற்றம் சாட்டியதை ரசியா மறக்கவில்லை.

''ஆப்கான், பாகிஸ்தான் முகாம்களில் பயிற்றுவிக்கப்பட்ட செசன்யாவின் இசுலாமியத் தீவிரவாதியான ஷமில் பசயேவ், அல் கடாப் ஆகியோருடன் பின்லாடனும் கலந்து கொண்ட இரகசியக் கூட்டமொன்று 1996-இல் சோமாலியாவில் மொகாடிஷு நகரில் நடத்தப்பட்டது. ரசிய அரசுக்கெதிரான போரைத் திட்டமிடுவதற்கு நடத்தப்பட்ட அந்தக் கூட்டத்தை ஐ.எஸ்.ஐ. ஏற்பாடு செய்தது'' என்று கூறுகிறார் அமெரிக்க நாடாளுமன்றத்தின் பயங்கரவாதத்

www.padippakam.com



தடுப்புக் குழுவின் இயக்குநர் ஒய். பெடொன்ஸ்கி.

**இதே நேரத்தில்** அமெரிக்க உள்நாட்டு உளவுத்துறையான எப்.பி.ஐ. (F.B.I.)இன் தேடப்படுவோர் பட்டியலில் பின் லாடன் இருந்தார்.

யூகோஸ்லாவியா மீதான நேட்டோ தாக்குதலுக்குக் காரணமாக இருந்த போஸ்னிய முசுலீம்கள் மீதான செர்பிய வெறியர்களின் தாக்குதல், இனப்படு கொலை ஆகியவற்றில் அமெரிக்கா - இசுரேல் கூட்டணியின் சதியும் இப்போது அம்பலமாகியிருக்கிறது.

ஒருபுறம் குரேசிய கிறித்தவ, நாஜி வெறியர்களுக்கு அமெரிக்க ஆயுத வியாபாரிகள் ஆயுத சப்ளை செய்தனர்; இன்னொருபுறம் அமெரிக்கா, ஜெர்மனி, இசுரேல் ஆகிய நாடுகள் முசுலீம் தீவிரவாதிகளுக்கும் ஆயுத சப்ளை செய்திருக்கின்றனர்.

முசுலீம்களுக்கு இசுரேல் ஆயுதங்களை சப்ளை செய்ய முடியுமா என்று அதிசயிப்பவர்கள், இந்தப் போரின் விளைவிலிருந்து அதைப் புரிந்து கொள்ளலாம். பிரபல அமெரிக்க வர்த்தகச் சூதாடியான ஜார்ஜ் சோரோஸ் என்ற யூத ஏகபோக முதலாளிதான் இன்று கொசாவாவில் உள்ள சுரங்கங்களின் உரிமையாளன். (American free Press. Net, 14.10.2001)

முன்னாள் இசுரேலிய உளவுத்துறை அதிகாரியும் இந்நாள் முதலாளியுமான யூசுப் மைமன் என்பவன்தான் துர்க்மேனிஸ்தான் அதிபரின் வர்த்தக ஆலோசகர். துருக்மேனிஸ்தானிலிருந்து காஸ்பியன் கடல், அஜர்பைஜான் வழியே துருக்கிக்குக் குழாய் அமைத்து ஈரானை ஒதுக்குவது மைமனின் திட்டம். குழாயை துருக்கியிலிருந்து ஐரோப்பாவிற்குள் கொண்டு செல்லத் தோதாக பால்கன் நாடுகள் அமெரிக்கப் பிடியில் கொண்டு வரப்படுகின்றன.

''மத்திய ஆசியாவில் நமது அரசியல் புவியியல் லட்சியங்களை எட்டுவதற்கு அமெரிக்க இசுரேல் அரசுகளால் சாதிக்க முடியாதவற்றை நாங்கள் சாதித்திருக்கிறோம்'' என்கிறான் மைமன்.

''சோவியத் - ஆப்கான் போரின் காலம் முதல் வாஷிங்டனுக்குத் தேவையான பதிலி யுத்தங்களை நடத்துவதற்கு முஜாகிதீன்களைப் பயன்படுத்துவது அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் ஒரு அங்கமாகவே ஆகிவிட்டது. 'போஸ்னியாவை இசுலாமிய தீவிரவாதத்தின் தளப்பகுதியாக மாற்றுவதற்கு உலகெங்கிலுமிருந்து ஆயிரக்கணக்கான முஜாகிதீன்களைத் திரட்டுவது' என்று அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு கவுன்சில் திட்டமிட்டிருக்கிறது. அமெரிக்க நாடாளுமன்றத்தின் அறிக்கை இதைக் கூறுகிறது'' என்கிறார் சோசுடோவ்ஸ்கி

''இப்போது மாசிடோனியாவிலும் இதுதான் நடக்கிறது. போரிடும் இரண்டு தரப்பினரையும் (அரசு x முசுலீம் தீவிர வாதம்) அமெரிக்க இராணுவத்தின் உளவுத்துறைதான் ஆட்டுவிக்கிறது.''

(மைக்கேல் சோசுடோவ்ஸ்கி, ஆகஸ்டு, 2001 உலகமயமாக்கம் குறித்த ஆய்வு மையம், கனடா)

மேற்கூறிய விவரங்கள் கூறும் முடிவு இதுதான். பனிப்போர்க் காலத்தில் ரசியாவை வீழ்த்துவதற்கான ஆயுதமாக இசுலாமிய சர்வ தேசியத்தைப் பயன்படுத்திய அமெரிக்கா பனிப்போருக்குப் பின் அதையே தனது உலக மேலாதிக்கத்தை நிறுவ உதவும் இரகசிய ஆயுதமாகப் பயன்படுத்தி வந்திருக்கிறது.

### இனி என்ன?

''செப்.11-க்கு முன்பு வரை இது உண்மையாக இருந்திருக்கலாம். ஆனால் அதை இனியும் தொடர்வது தனக்கே ஆபத்து என்பதை அமெரிக்கா உணர்ந்திருக்குமல்லவா'' என்று கேட்கலாம்.

வளர்த்த கடா மார்பில் பாய்ந்துவிட்டது என்பதனால் இனி கடா வளர்ப்பதே இல்லை என்று அமெரிக்கா முடிவு செய்யப் போவதில்லை. ஏற்கெனவே நொரிகோ, சதாம் உசேன் போன்ற கடாக்களைச் சந்தித்திருக்கும் அமெரிக்காவுக்கு பின்லாடன் - தலிபான் அனுபவம் புதியதல்ல. அதேநேரத்தில் சுலபமானதும் அல்ல.

வியத்நாமில் 65,000 அமெரிக்கச் சிப்பாய்களைக் காவு கொடுத்து, உள்நாட்டு மக்களின் கடும் எதிர்ப்பையும், உலக அரங்கில் அவமானத்தையும் சந்தித்ததன் காரணமாக ''இனி அடுத்த நாட்டின் விவகாரத்தில் தலையிடுவதில்லை'' என அமெரிக்கா முடிவு செய்யவில்லை.

தனக்குத் தேவையான இடங்களில் அரசுகளைக் கீழிருந்து நெம்பிக் கவிழ்ப்பதற்கான கடப்பாறையாக இசுலாமியப் பயங்கரவாதத்தைப் பயன்படுத்தி வரும் அமெரிக்கா, மேலிருந்து அரசுகளைத் தாக்கும் உலக்கையாக இப்போது 'பயங்கரவாத எதிர்ப்பை' பயன்படுத்துகிறது. பயங்கரவாதத்தை 'ஆதரிக்கும்' எல்லா நாடுகளின் மீதும் போர் தொடுப்பதாக மிரட்டுகிறது.

பின்லாடனைப் பிடிப்பது, மத்திய ஆசியாவின் எண்ணெய்க் குழாய்க்கு வழி தேடுவது, ஆப்கானில் பொம்மை ஆட்சி அமைப்பது, மத்திய ஆசியாவில் இராணுவதளம் நிறுவுவது, இசுலாமிய தீவிரவாதத்தையும் போதை மருந்துக் கடத்தலையும் முறைப்படுத்தி சி.ஐ.ஏ.வின் கட்டுப்பாட்டை நிறுவுவது, ஒத்து வராத அல்காய்தா போன்ற குழுக்களை ஒழித்துக் கட்டுவது, பயங்கரவாத அபாயத்தைக் காட்டி உலக நாடுகளின் இறையாண்மையில் தலையிடும் உரிமை பெறுவது - என்ற பல நோக்கங்களை உள்ளடக்கிய




கஞ்சாவைக் கட்டுப்படுத்த 34 மில்லியன் டாலர் தாலிபானுக்கு நிதி உதவி கொடுத்தது அமெரிக்கா. ஆனால் இந்தக் கஞ்சா ஒழிப்பு அமெரிக்காவும் தாலிபானும் சேர்ந்து நடத்திய நாடகம்.

படிப்பகம்

www.padippakam.com





ரசியா: ஆப்கான் பயிற்சி முகாம்களில் சி.ஐ.ஏ., ஐ.எஸ்.ஐ.யால் பயிற்றுவிக்கப்பட்ட அராபியர்கள் செசன்யாவில் இசுலாமிய அரசு அமைக்க போராடுகின்றார்கள்.

போர் இது.

''ஊசியைத் தேடுவதற்காக வைக்கோல் போருக்குத் தீ வைக்கலாமா - பின்லாடனைத் தேடுவதற்காக ஆப்கானை ஆக்கிரமிக்கலாமா?'' என்று போர் தொடங்கு முன்னரே எழுப்பப்பட்ட கேள்விக்கு அமெரிக்கா பதில் சொல்ல வில்லை.

இப்போது நான்காவது வாரமாகப் போர் தொடர்கின்ற நிலையில் ''பின்லா டனைத் தேடுவதென்பது வைக்கோல் போரில் ஊசியைத் தேடுவதற்கு ஒப்பா னது'' என்கிறார் ரம்ஸ்ஃபீல்டு.

''இது தோல்வியை ஒப்புக் கொள்ளும் வசனம்'' என்று எண்ணிக் குதூகலிப்பது முட்டாள்தனம். போரை இப்போதைக்கு முடிக்க முடியாது என்பதைச் சூசமாக அறி விக்கும் தந்திரம் இது.

''போர் முடிவதற்கு 4 ஆண்டுகள் கூட ஆகலாம். கம்யூனிசத்தை முறியடிக்க நமக்கு 50 ஆண்டுகள் தேவைப்பட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்'' என்கிறார் பிரிட்டிஷ் இராணுவத் தளபதி.

அமெரிக்காவின் ஆசியோடு தங்கள் சொந்த நலனுக்காக இசுலாமிய சர்வதேசி யத்தை எண்ணெய் ஊற்றி வளர்த்த வளை குடா ஷேக்குகள், முசுலீம் மக்களிடையே வளர்ந்து வரும் அமெரிக்க எதிர்ப்பைக் கண்டு பீதியடைகிறார்கள்.

''அவர்களிடம் நிறைய எண்ணெய் இருக்கிறதென்பது உண்மைதான். ஆனால் இப்போது நமக்கு அவர்கள் தேவைப்படு வதைக் காட்டிலும் நாம்தான் அவர்களுக்கு அதிகமாகத் தேவைப்படுகிறோம்'' என்று ஏளனம் செய்கிறார் அமெரிக்க செனட்டின் வெளியுறவுத்துறைச் செயலர் ஜோசப் பிடன். கைக்கூலிகளுக்குத் தேவையான சூடுதான் இது.

ரம்ஜானுக்காவது போரை நிறுத் துங்கள் என்று மன்றாடுகிறார் முஷாரப். ''ஈரானும் ஈராக்கும் அடித்துக் கொண்ட போது ரம்ஜானுக்கு விடுமுறையா விட்டார்கள்'' என்ற ஏளனம் பதிலாய்க் கிடைக்கிறது.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்கும் போராளிகள் கொல்லப்படு கிறார்கள் அல்லது விடுதலையை வென்றெடுக்கிறார்கள். கைக்கூலிகளின் கதையோ வேறு.

எசமானை எதிர்த்து நிற்பவர்கள் ஏவுக ணைகளால் தாக்கப்படுகிறார்கள். எசமான விசுவாசிகளோ மக்களால் கல்லெறிந்து கொல்லப்படுகிறார்கள்.

அமெரிக்கா பொருளாதார நெருக்கடி யாலும், உள்நாட்டில் வளர்ந்து வரும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களாலும் அச்சுறுத்தப்படுகிறது. உலக பயங்கரவா தத்தைக் காட்டி உள்நாட்டில் அரசு பயங்க ரவாதத்தை ஏவுகிறது.

பின்லாடனைத் தேடி அலைகிறது அமெரிக்க அதிரடிப்படை; அமெரிக்க ராஜ தந்திரிகளோ மிதவாத தலிபானைத் தேடி அலைகிறார்கள்.

எண்ணெய் முதலாளிகளின் மூலதனத் துக்குப் பதில் சொல்ல, குழாய் அமைக்க வேண்டும்; அதற்கு ஈரானுடனும் ரசியாவு டனும் முரண்பட வேண்டும்; தலிபான், பாகிஸ்தான் மட்டுமின்றி வடக்கு முன்ன ணியின் ஆதரவும் வேண்டும்.

போர்த் தந்திர நோக்கத்தை நிறை வேற்றிக் கொள்ள மத்திய ஆசியாவில் இராணுவத்தளம் வேண்டும் - அதற்கு மத்திய ஆசிய நாடுகளின் ஆதரவு வேண்டும்; சீனா, ரசியா, ஈரானுடன் முரண் பட வேண்டும்.

அமெரிக்கப் போர்வெறியர்களுக்கோ இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சதாமை ஒழித்துவிட ஈராக்கின் மீதும் போர் தொடுக்க வேண்டும் - அதற்கு ஐரோப்பிய நாடுகளின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டும்.

தங்களுடைய மவுனமான ஆதர வுக்குப் பரிசாக வளைகுடா ஷேக்குக ளுக்கு பாலஸ்தீனப் பிரச்சினைக்கு ஏதா வது ஒரு முடிவு வேண்டும் - அதற்கு இசு ரேலின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டும்.

தனது துணிச்சலான ஆதரவுக்குப் பிரதி பலனாக முஷாரப்புக்கு காசுமீர் பிரச்சி னையில் உதவ வேண்டும். அதற்கு இந்தி யாவின் வெறுப்பை எதிர்கொள்ள வேண்டும்.

வெவ்வேறு விதமான தீர்வுகளைக் கோருகின்ற இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும், தனது நலனுக்கு உட்பட்டே தீர்த்துவிடலாம் என்று அமெ ரிக்கா கனவு காண்கிறது.

டாலரையும், ஏவுகணைகளையும் காட்டித் தனது உலக மேலாதிக்கத்தை நிலைநாட்டி விடலாம் என்று நம்பி ஆசியப் புதை சேற்றில் கால் வைத்திருக்கி றது அமெரிக்கா.

பின்லாடனைப் பிடிப்பது, ஆப்கனில் பொம்மையாட்சியை நிறுவுவது என்ற உடனடி நோக்கம், எண்ணெய்க் குழாய் எனும் வர்த்தக நோக்கம், மத்திய ஆசியா வில் இராணுவதளம் நிறுவும் போர்த் தந்திர நோக்கம் - அனைத்தையும் ஒரே கல்லில் அடித்து நிறைவேற்றி விடலாம் என்று எண்ணித்தான் அமெரிக்கா போரைத் துவக்கியது.

அமெரிக்காவின் வல்லமையை உலகுக்கு நிரூபிப்பதாக முரசு கொட்டிப் போரில் இறங்கினார் புஷ். தற்போதைய நிலவரப்படி, அமெரிக்காவின் வல்ல மையை அமெரிக்காவுக்கே நிரூபிக்க வேண்டியிருக்கிறது!

● மருதையன்

படிப்பகம்

www.padippakam.com





# சி.ஐ.ஏ: அமெரிக்காவின் பயங்கரவாதப் படை

*''அந்தப் பெண் வீட்டிற்குள் நுழைந்தாள். சாப்பாட்டு மேசையைச் சுற்றிலும் அவளது மூன்று பிள்ளைகளும், தங்கையும், தாயும் உட்கார வைக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொருவரது தலையும் அவரவர்க்கு நேரே மேசையில் வைக்கப்பட்டிருந்தது. எல்லோரும் தாமே தமது தலையைக் கொய்து கொண்டதைப் போல சித்தரிக்கும் விதத்தில், அவரவர் தலைமீது அவரவர் கைகள் வைக்கப்பட்டிருந்தன. ஒரு 18 மாதக் குழந்தையின் கைகள் தலைமீது நிற்காமல் துவண்டு விழுந்ததால் தலையோடு சேர்த்து ஆணி அடித்து வைக்கப்பட்டிருந்தது. சாப்பாட்டு மேசையின் மையத்தில் ஒரு பாத்திரத்தில் இரத்தம் நிரப்பி வைக்கப்பட்டிருந்தது.''*

(எல்சால்வடார் தேசியப் பாதுகாப்புப் படையின் பயங்கரவாதம் பற்றி கத்தோலிக்கப் பாதிரியார் டானியேல் சான்டியாகோ அளித்த வாக்குமூலத்திலிருந்து)

கொலையைக் கூட நினைக்கவே நெஞ்சு நடுங்கும் விதத்திலான 'கலை ரசனை'யுடன், சர்ரியலிச வக்கிரத்துடன் செய்திருக்கும் இந்தத் தேசியப் பாதுகாப்புப் படையைப் பயிற்றுவித்தவர்கள் யார்? ஏவிவிட்டவர்கள் யார்? ஆதாயமடைந்தவர்கள் யார்?

இன்று பின் லாடனின் பயங்கரவாதப் பயிற்சிப் பள்ளிகளை அழிப்பதற்காகவும் பயங்கரவாதத்தை உலகத்தை விட்டே ஒழிப்பதற்காகவும் போர் தொடுத்திருக்கிறதே இதே அமெரிக்க அரசுதான்.

சோசலிசத்திற்காகவும், தேசிய விடுதலைக்காகவும் போராடிய பல்வேறு நாடுகளைச் சேர்ந்த உலக மக்கள் மீதும், புரட்சியாளர்கள் மீதும் அமெரிக்க சி.ஐ.ஏ. பயங்கரவாதிகள் தொடுத்த தாக்குதல்களில் சிலவற்றைத் தொகுத்துத் தருகிறோம்.

13 ஆண்டுகள் சி.ஐ.ஏ. அதிகாரியாகப் பணி புரிந்த ஜான் ஸ்டாக் வெல் என்பவர் அளித்துள்ள பேட்டியிலிருந்து தொடங்குவோம்.

''சாண்டினிஸ்டா புரட்சியினால் துரத்தப்பட்ட நிகராகுவாவின் சர்வாதிகாரி சோமாசாவின் தேசிய பாதுகாப்புப் படைக்கு இராணுவ உடுப்பு முதல் ஆயுதங்கள் வரை அனைத்தும் தந்து, பயிற்சியும் தந்து அவர்களுக்கு ''காண்ட்ராஸ்'' (எதிர்ப் புரட்சிக்காரர்கள்) என்று பெயரும் சூட்டினோம். அவர்களுக்குத் தரப்பட்ட பணி சாண்டினிஸ்டா ஆட்சியைக் கவிழ்ப்பது.

பாலங்கள், தானியக் கிடங்குகள், அரசு அலுவலகங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றை வெடிவைத்துத் தகர்ப்பது எப்படி என்று நாம் பயிற்றுவித்தோம். அவர்கள் செய்தார்கள். முதுகில் துப்பாக்கி இல்லாமல் விவசாயிகள் ஏர் ஓட்டக்கூட முடியாது என்ற நிலைமையை நிகராகுவாவில் அவர்கள் உருவாக்கினார்கள்.''

''வேண்டுமானால் சி.ஐ.ஏ. வெளியிட்டுள்ள ''சீர்குலைவு வேலைகளுக்கான வழிகாட்டி'' என்ற நூலைப் புரட்டிப் பாருங்கள். அலுவலகங்களின் தட்டச்சு எந்திரங்களைச் செயலிழக்கச் செய்வது முதல் கழிவுநீர்ச் சாக்கடையை அடைக்கச் செய்வது வரை அனைத்தையும் எப்படிச்செய்வது, சமூகத்தையே எப்படி நிலைகுலையச் செய்வது என்பதை காமிக் புத்தகம் போல படம் போட்டு விளக்கியிருக்கிறார்கள்.''

ஜான்ஸ்டாக்வெல் கூறுகின்ற இத்தகைய பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயிற்சியளிப்பதற்கென்றே ''ஸ்கூல் ஆஃப் அமெரிக்கானாஸ்'' என்ற பயங்கரவாதப் பயிற்சிப் பள்ளியை நடத்தி வருகிறது அமெரிக்க அரசு. 1946-இல் பனாமாவில் தொடங்கப்பட்ட இந்தப் பள்ளி இப்போதும் வர்ஜினியா மாநிலத்தில் இயங்கி வருகிறது. எல்சால்வடாரின் கொலைப்படை உட்பட இதுவரை 60,000 பயங்கரவாதிகள் இங்கே பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

1960-இல் ''மக்கள் பாதுகாப்புத் திட்டம்'' என்ற பெயரில் கம்யூனிசத்திற்கெதிரான புனிதப் போருக்கு கோடிக்கணக்கான டாலர் நிதி ஒதுக்கீடு செய்தார் அமெரிக்க அதிபர் கென்னடி. அந்தத் திட்டத்தின் கீழ் கொடூரமான சித்திரவதை முறைகள் லத்தீன் அமெரிக்க நாடுகளில் எவ்வாறு கற்றுத்தரப்பட்டன என்பதை விளக்குகிறார் ஸ்டாக்வெல்.

''சித்திரவதை முறைகளைக் கற்றுக் கொடுக்கலாம். ஆனால் மாணவர்கள் தம் சொந்தக் கைகளால் அதைச் செய்து பழக வேண்டுமே. எனவே தெருவிலிருக்கும் அநாதைகள், பிச்சைக்காரர்கள் ஆகியோரை அள்ளிக் கொண்டு வருவோம். அவர்கள் தான் எங்கள் சோதனைச்சாலை எலிகள்.''

''மெல்லிய உறுதியான மின் கம்பியை பற்களுக்கிடையில் நுழைத்துவிட்டு இன்னொரு முனையை ஆண் குறியில் முடுக்கி விட்டு மின்சாரத்தைச் செலுத்துவார்கள். துன்பம் தாங்காமல் அவர்கள் கதறுவார்கள். அரசியல் கைதிகளாயிருந்தால் ''நிறுத்து. உண்மையைச் சொல்லிவிடு

படிப்பகம்

www.padippakam.com







பிரேசில் அனாதைச் சிறுவர்கள்: அனாதைகளை சித்ரவதை பயிற்சியின் சோதனை எலிகளாக பயன்படுத்துகிறது சி.ஐ.ஏ.

கிறேன்'' என்று அலறக் கூடும். இந்த அநாதைகளுக்கோ தம்மை ஏன் சித்திரவதை செய்கிறார்கள் என்பதே தெரியாது. எனவே கதறுவதைத் தவிர அவர்களால் வேறொன்றும் செய்ய இயலாது.

''வலி தாங்காமல் துடித்து மயங்கி விழுந்தவுடன் டாக்டர் வருவார். இந்த ''சோதனைச் சாலை எலிகளுக்கு'' வைட்டமின் ஊசி போட்டு ஓய்வெடுக்க வைப்பார். சிறிது நேரத்திற்குப் பிறகு அடுத்த வகுப்புக்கு 'எலிகள்' தயாராக வேண்டும்.''

''ஒரு கட்டத்தில் அவர்கள் செத்துப் போவார்கள். அவர்களது பிணமும் பயன்படும். பிணத்தை நகரத்தின் நடுவீதியில் வீசியெறிவோம். பிணத்தைப் பார்க்கும் மக்கள் 'அரசாங்கம் - போலீசு' என்று நினைத்தாலே குலை நடுங்குவார்கள்.''

மக்களை அச்சுறுத்திப் பணிய வைக்கும் சி.ஐ.ஏ.வின் உத்தியைப் பற்றி கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார் அமெரிக்க அறிஞர் நோம் சோம்ஸ்கி.

''நிகராகுவாவில் அமெரிக்க அரசால் இயக்கப்பட்ட காண்ட்ரா கொலைப்படையாகட்டும், கவுதமாலா, எல் சால்வடாரில் செயல்பட்ட நமது பினாமி பயங்கரவாதிகளாகட்டும், அவர்கள் சாதாரண முறையில் கொலை செய்வதில்லை.. குழந்தைகளைப் பாறையில் மோதிக் கொல்வது, பெண்களின் மார்புகளை அறுத்துத் தலைகீழாகத் தொங்கவிட்டு ரத்தம் வெளியேறி சாகச் செய்வது, தலையைச் சீவிவிட்டு முண்டத்தை மட்டும் கழு மரத்தில் செருகி வைப்பது என அனைத்துமே கொடூரமான வக்கிரமான முறைகள்தான்.''

''சதைகள் பிய்ந்து எலும்பு தெரியும் வரை குழந்தைகளை முள் கம்பிகளின் மேல் புரட்டி இழுத்து அந்தக் காட்சியைக் காணுமாறு பெற்றோர்கள் நிர்ப்பந்திக்கப் பட்டார்கள்'' என்று கூறுகிறார் பாதிரியார் சாண்டியாகோ.

இந்த பயங்கரவாதப் படைக்கு சி.ஐ.ஏ. எப்படி ஆள் சேர்த்தது? இத்தகைய கொடூரங்களைச் செய்ய எப்படி அவர்களைப் 'பக்குவப்படுத்தியது'?

எல்சால்வடார் கொலைப் படையிலிருந்து மன உளைச்சல் தாங்காமல் தப்பி ஓடி வந்து அமெரிக்காவில் தஞ்சம் புகுந்த ஒரு அகதி 1990இல் அமெரிக்க நீதிமன்றத்தில் (டெக்ஸாஸ்) இதை வாக்குமூலமாகவே தந்திருக்கிறார்.

''சேரிகளுக்குள் புகுந்து 13,14 வயது சிறுவர்களை போலீசு அள்ளிக் கொண்டு போகும். அவர்களுக்குப் பயிற்சி முகாமில் கொலை, கற்பழிப்பு, சித்திரவதை ஆகியவைகளை ஒரு மதச் சடங்கைப் போலப் பயிற்றுவிப்பார்கள். 'மாணவர்கள்' நாய்களையும் பருந்துகளையும் கழுத்தை முறித்து, பற்களால் தொண்டையைக் கடித்தே கொலை செய்யப் பழக வேண்டும்.''

பிறகு 'ஆசிரியர்கள்' செய்வதைத் தடுமாற்றமின்றிக் கவனிக்க வேண்டும். அவர்கள் அரசியல் கைதிகளின் நகங்களைப் பிடுங்குவார்கள்; தலைகளைச் சீவுவார்கள்; பிறகு உடம்பைக் கண்டதுண்டமாக வெட்டி முண்டங்களைத் தூக்கிப் போட்டு வேடிக்கையாகப் பந்தாடுவார்கள்.''

எல்சால்வடார் கொலைப்படையிலிருந்து தப்பி அகதியாக அமெரிக்காவுக்கு ஓடி வந்த ஜோயா மார்ட்டினஸ் என்பவர் இந்தக் கொலைப் படைகளுக்கு அமெரிக்க ஆலோசகர்கள்தான் அங்கே பயிற்சியளிக்கின்றனர் என்பதை மனித உரிமை அமைப்புகள் மூலம் அம்பலப்படுத்தினார். உடனே ஜோயாவை எல்சால்வடார் அரசிடமே ஒப்படைத்து அவர் வாயை நிரந்தரமாக மூடிவிட முயன்றது புஷ் அரசாங்கம்.

எத்தகைய மோசமான சமூக விரோதியாக இருந்தாலும் தனிப்பட்ட எதிரியாக இருந்தாலும் ஒரு மனிதனை இப்படியெல்லாம் துன்புறுத்திக் கொலை செய்யவும் பின்னர் பிணத்தை வைத்து விளையாடவும் இன்னொரு மனிதனால் இயலுமா? இந்த அமெரிக்கப் பயிற்சியாளர்களெல்லாம் மனிதர்களா அல்லது வக்கிரம் பிடித்த மனநோயாளிகளா என்ற கேள்வி நமக்கு எழுகிறது.

பிரேசிலில் இவ்வாறு இரண்டு ஆண்டுகள் சித்திரவதை செய்யப்பட்ட ஒரு பெண்மணி அந்த முகாமிலிருந்து தப்பியவுடன் உலகிற்கே வாக்குமூலம் தந்தாள். அந்த வாக்குமூலம் நம் கேள்விக்கு விடை தருகிறது.

''ஒருநாள் நான் மேசை மீது அம்மணமாகக் கிடத்தப்பட்டிருந்தேன். என்னைச் சுற்றிலும் ஆறு ஆண்கள். சொல்லவே கூசுகின்ற, பொறுக்க முடியாத சித்திரவதைகளை அவர்கள் எனக்குச் செய்து கொண்டிருந்தார்கள். திடீரென்று பக்கத்து அறையில் தொலைபேசி மணி ஒலித்தது. சித்திரவதை செய்து கொண்டிருந்த அமெரிக்க அதிகாரி பக்கத்து அறைக்குச் சென்று தொலைபேசியில் பேசினான்: ''ஹாய் டார்லிங்... இன்னும் கொஞ்சம் வேலையிருக்கு. ஒரு மணி நேரத்துல முடிச்சுடுவேன். போற வழியில அப்படியே உன்னையும் குழந்தைகளையும் பிக்-அப் பண்ணிக்கிறேன்'' என்றான். திரும்பி வந்தான். சித்திரவதை தொடர்ந்தது.''

இந்த பிரேசில் பெண்ணின் வாக்குமூலத்தை மேற்கோள் காட்டும் ஸ்டாக்வெல், அமெரிக்க மக்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com



உறைக்கும்படி விளக்குகிறார்.

''இதிலெல்லாம் நமக்கு ஒரு பாடம் இருக்கிறது. யாரோ நாஜி வெறியர்களோ, கே.ஜி.பி. ஏஜெண்டுகளோ அல்ல - இதையெல்லாம் (அமெரிக்கர்களாகிய) நாம்தான் செய்திருக்கிறோம். மனிதத்தன்மையற்ற கொடுமைகளை சக மனிதர்களுக்குச் செய்பவர்களும் நம்மைப் போன்ற மனிதர்கள்தான்... நாம்தான் சி.ஐ.ஏ.வை உருவாக்கினோம். கோடிக் கணக்கில் நிதி ஒதுக்கினோம். நம்முடைய பெயரில் இந்தக் கொலை பாதகங்களைச் செய்ய நாம் தான் அனுமதித்திருக்கிறோம். எல்லாம் அம்பலமான பின்னரும் நமக்கு எதுவுமே தெரியாதது போல நடிக்கிறோம். தெரிந்தாலும் நாம் கண்டு கொள்ள மாட்டோம். ஏனென்றால் கம்யூனிச அபாயத்திலிருந்து உலகைக் காப்பாற்றுவதற்காக அல்லவா நாம் கொலை செய்கிறோம்!''

ஐசன்ஹோவர் முதல் ஜார்ஜ் புஷ் வரை எல்லா ஜனாதிபதிகளின் காலத்திலும் இதுதான் நடந்திருக்கிறது. ஏகாதிபத்தியக் கொள்ளையைத் தொடர்வதற்கும் கம்யூனிசம் தலையெடுக்காமல் பார்த்துக் கொள்வதற்கும் அவசியமான உத்திகளை வரிசைக் கிரமமாக வகுத்து வைத்திருக்கிறது அமெரிக்க ஆளும் வர்க்கம்.

அறிவாளிகள் என்ற புனைபெயரில் திரியும் கூலிப் பிரச்சாரகர்கள் மூலம் நயமான முறையில் பல வண்ணங்களில் கம்யூனிச எதிர்ப்பைப் பிரச்சாரம் செய்வது; உலக வங்கி, ஐ.எம்.எஃப் போன்ற நிறுவனங்கள் மூலம் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு உடன்படும்படி நிர்ப்பந்திப்பது; இதற்கும் அடங்காத பட்சத்தில் வலதுசாரி கொலைப்படைகளை சி.ஐ.ஏ. உதவியுடன் உருவாக்கி கம்யூனிஸ்டுகளையும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களையும் வேட்டையாடுவது; இறுதி ஆயுதமாக நேரடி இராணுவத் தலையீடு.

இந்த வரிசையில் வடிவங்கள் வேறுபடுகின்றனவேயொழிய உள்ளடக்கம் ஒன்றுதான். பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் ரோஜாவைப் போன்ற மென்மையான கவிதை உணர்வுகள் நசுக்கப்பட்டு விடுமோ என்ற கூலிக் கவிஞர்களின் கவலை, கூலிப்படையினரின் வெறியாக உருமாறும்போது பற்களுக்கிடையில் நுழையுமளவு மெலிதான மின்கம்பிகளைக் கண்டுபிடிக்கிறது.

சக மனிதர்களைப் பயன்படுத்தத்தக்க பண்டமாகக் கருதும் முதலாளித்துவ ஒழுக்க நெறி, தெருவில் உறங்கும் அநாதைகளை சோதனைச்சாலை எலிகளாகப் பயன்படுத்திக் கொள்வதில் வியப்பென்ன?

பிரேசிலின் அநாதை மக்கள் மீது தனது புதிய புதிய சித்திரவதைக் கருவிகளை சி.ஐ.ஏ. சோதனை செய்து பார்க்கிறது திருவனந்தபுரம் புற்று நோய் மருத்துவமனையில் நோயாளிகளுக்கே தெரியாமல் அவர்கள் உடலில் தன் புதிய மருந்துகளைச் சோதனை செய்து பார்த்திருக்கிறது அமெரிக்கப் பல்கலைக்கழகம். மரபணு மாற்றியமைக்கப்பட்ட சோயா மொச்சை மாவை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒரிசா மக்களுக்கு 'இலவசமாக' வழங்கி அவர்கள் மீது சோதனை செய்து பார்க்கிறது ஒரு அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனம்.

அறிவுத்துறைக் கூலிப்படை மூலம் புதிய புதிய கம்யூனிச எதிர்ப்புத் தத்துவங்களை நம்மீது ஏவிவிடுவதையும் இந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்.

அமெரிக்க இராணுவமோ ஒவ்வொரு ஆக்கிரமிப்புப் போரிலும் தன் புதிய ஆயுதங்களைச் சோதித்துப் பார்ப்பதற்குத் துடிக்கிறது. அணு ஆயுதத்தின் சோதனை எலிகள் - ஹிரோஷிமா நாகசாகி மக்கள். 1945 முதல் 48 வரை கொரிய கம்யூனிஸ்டுகள் மற்றும் ஜப்பானிய எதிர்ப்பாளர்கள் மீது தொடுத்த போரில் ஆந்தராக்ஸ், காலரா கிருமிகளையும், நாபாம் தீக்குண்டுகளையும் சோதித்துப் பார்த்து 1 லட்சம் பேரைக் கொன்றது அமெரிக்க இராணுவம்.

வியட்நாம் விவசாயிகள் மீது குண்டுக் கொத்துகள் (cluster bombs), தப்பிச் சென்று குகைகளில் ஒளிந்து கொள்வோரைக் குகைகளுக்குள் நுழைந்து கொல்லும் ராக்கெட்டுகள், குண்டு வீச்சிலிருந்து தப்பி நாற்புறமும் சிதறி ஓடும் மக்களை நாற்புறமும் துரத்தும் குண்டுகள், தோலில் மெழுகைப் போலத் தெறித்து ஒட்டிக் கொண்டு எரியும் நாபாம் குண்டுகள் என எல்லா வகை ஆயுதங்களையும் பத்தாண்டுகள் சோதித்துப் பார்த்தது.

யூகோஸ்லாவியாவிலும், ஈராக்கிலும் பெரிய அணுகுண்டுக்குப் பதிலாக சிறிய அணுக் கழிவு ஏவுகணைகளை (Depleted uranium tipped missiles) ஆயிரக்கணக்கில் ஏவியது. ஏவுகணைகளை எய்த அமெரிக்கச் சிப்பாய்களே கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டு புற்றுநோய் கண்டு இறந்த பின்னர் தான் இந்த உண்மை உலகுக்குத் தெரிய வந்தது. இன்று கதிர்வீச்சு அபாயத்தை எண்ணி ஐரோப்பாவே அலறுகிறது.

இப்போது அமெரிக்கா ஆப்கானை அழிக்கவிருக்கும் புதியவகை ஆயுதங்களில் சிலவற்றை அறிமுகப்படுத்துகிறது. குண்டு வீச்சிலிருந்து தப்புவதற்குப் பதுங்கு குழியில் ஒளியும் மக்களைக் கூட விட்டுவைக்காமல், ''20 அடி ஆழம் வரை பாறையைக் கூடத் துளைத்து உள்ளே சென்று வெடிக்கும்'' என்று தங்களது 'வல்லமை'யைப் பெருமை பொங்க விவரிக்கிறார்கள் அமெரிக்க இராணுவ அதிகாரிகள்.

ஈராக்கிலும், யூகோஸ்லாவியாவிலும் நடத்திய குண்டு வீச்சுகளை ''மக்களின் மன உறுதியைக் குண்டு வீசித்



யூகோஸ்லாவியாவில் நேட்டோ வீசிய அணுக்கழிவு ஏவுகணைகள் தோற்றுவித்த கதிர் வீச்சை இத்தாலிய இராணுவம் சோதனையிடுகிறது.



கதிர்வீச்சு அபாயம் தெரியாமல் விளையாடும் கொசாவா சிறுவர்கள்.

படிப்பகம்

www.padippakam.com





**பிரேசில்: நிலத்திற்காகப் போராடிய ஏழைகளை படுகொலை செய்யும் துணை இராணுவம் - பயிற்றுவித்தது சி.ஐ.ஏ.**

தகர்க்கிறோம்'' என்று வர்ணித்தார்கள் அமெரிக்க இராணுவ அதிகாரிகள்.

எந்த குண்டுக்கும் அடங்காத மக்களை எப்படி மிரட்டிப் பணிய வைப்பது? பொருளாதாரத் தடை, பட்டினி போட்டுக் கொல்வது இதுதான் அமெரிக்காவின் அடுத்த ஆயுதம். இந்த ஆயுதத்திற்கும் பணியாமல் ரசியா, சீனா உள்ளிட்ட பல நாடுகள் நிமிர்ந்து நின்றன. நிகராகுவா போராடிப் போராடித் துவண்டு சரிந்தது. ஈராக் இந்தச் சித்திரவதையில் பத்தாண்டுகளாகத் துடித்துக் கொண்டிருக்கிறது.

உணவு முதல் மருந்துப் பொருட்கள் வரை அனைத்தையும் இறக்குமதி செய்து வாழ வேண்டிய கட்டாயத்திலிருக்கும் பாலைவன நாடான ஈராக்கின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் காரணமாக இதுவரை 10 லட்சம் குழந்தைகள் பட்டினியால் செத்திருக்கின்றன. மருத்துவமனைகள் தகர்க்கப்பட்டு மருந்துகளும் தடை செய்யப்பட்டு விட்டதால் பல்லாயிரம் நோயாளிகள் மடிகிறார்கள். மயக்க மருந்து கூடத் தடை செய்யப்பட்டிருப்பதால் மயக்க மருந்தின்றியே அறுவை சிகிச்சைகள் நடக்கின்றன.

**புரொகிரசிவ்** என்ற இணையத் தளம் இது தொடர்பான அமெரிக்க இராணுவத்தின் ஆவணங்களை வெளியிட்டுள்ளது.

பொருளாதாரத் தடை காரணமாக ஈராக்கில் எத்தனை நாளில் காலரா வரும், எத்தனை நாளில் டைபாய்டு பரவும், எத்தனை ஆயிரம் பேர் சாகக்கூடும் என்று பச்சையாக எழுதப்பட்டுள்ளது இந்த பயங்கரவாதியின் டைரிக் குறிப்பு.

சதாம் உசேன் குவைத்தின் மீது படையெடுத்த குற்றத்துக்காக லட்சக்கணக்கான ஈராக்கியக் குழந்தைகள் தங்கள் உயிரை விலையாகத் தர வேண்டுமா என்று பி.பி.சி. நிருபர் கேட்டபோது ''அது கொடுக்கத்தக்க விலைதான்'' என்று பதில் சொன்னாள் கிளிண்டனின் அரசுச் செயலர் மாடலைன் ஆல்பிரைட் என்ற சூனியக்காரி.

ஆல்பிரைட்டை அரசுச் செயலராகக் கொண்ட சி.ஐ.ஏ, பிணங்களுக்கு இரத்தத்தை விருந்தாகப் படைப்பதில் வியப்பென்ன?

இன்று ''பயங்கரவாதத்திற்கெதிரான உலகப் போர்'' என்று ஊளையிடுகிறது அமெரிக்கா. ஆனால் பயங்ரவாத நடவடிக்கைக்காக உலக நீதிமன்றத்தால் கண்டிக்கப்பட்ட ஒரே நாடும் அமெரிக்காதான். ''நிகராகுவாவில் காண்ட்ரா கூலிப் படையினர் நடத்திய கொலைகள், நிகராகுவாவின் கடற்பரப்பு எங்கிலும் கண்ணி வெடிகள் வைத்து அந்நாட்டையே சீர்குலைத்தது ஆகிய குற்றங்களைச் செய்ததன் மூலம் சர்வதேசச் சட்டங்களை அமெரிக்கா மீறியிருக்கிறது. இதற்காக சாண்டினிஸ்டா அரசுக்கு இழப்பீடு தரவேண்டும். இந்தக் குற்றங்களை இழைத்த அமெரிக்கக் கிரிமினல்களை ஒப்படைக்க வேண்டும்'' என்று 1986-இல் தீர்ப்பளித்தது ஹேக் நகரிலுள்ள உலக நீதிமன்றம்.

இன்று பின்லாடனை நீதியின் முன்னால் நிறுத்தப் போவதாகவும் தண்டிக்கப் போவதாகவும் கூறும் அமெரிக்கா, காண்ட்ரா குற்றவாளிகளை ஒப்படைக்கவோ இழப்பீடு வழங்கவோ மறுத்து விட்டது.

முன்னாள் சி.ஐ.ஏ. அதிகாரி ஜான் ஸ்டாக்வெல்லின் பேட்டியுடன் இக்கட்டுரையை முடிப்போம்.

''அவர்கள் (காண்ட்ரா கூலிப்படை) கிராமத்துக்குள் செல்வார்கள். வீடு புகுந்து குடும்பங்களைத் தெருவுக்கு இழுத்து வருவார்கள். குழந்தைகளின் கண்ணெதிரே தந்தையின் ஆணுறுப்பை வெட்டுவார்கள். முகத்திலிருந்து தோலை உரிப்பார்கள். வாயில் கைக் குண்டைத் திணித்து வெடிக்கச் செய்வார்கள். தாயைக் கற்பழிப்பார்கள். ஒரு மாற்றத்துக்காக சில இடங்களில் பெற்றோரைப் பார்க்க வைத்து பிள்ளைகளைக் கற்பழிப்பார்கள்.''

''இதெல்லாம் பிரச்சாரமல்ல. அமெரிக்க மனித உரிமை அமைப்புகள் இவற்றை விசாரித்துப் படமெடுத்து வாக்குமூலங்களைப் பதிவு செய்திருக்கிறார்கள். 13,000 பேரை இப்படிச் சித்திரவதை செய்து கொலை செய்த விவரம் ஆவணமாகத் தொகுக்கப்பட்டுள்ளது.''

''இந்த காண்ட்ரா கொலைப்படையை சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்கிறார் ஜனாதிபதி ரீகன். நமது அமெரிக்க ஜனநாயகத்தை உருவாக்கிய மூலவர்களுக்கு இணையானவர்கள் என்று புகழாரம் சூட்டுகிறார்.''

''கேளுங்கள் அமெரிக்க மக்களே! 30 லட்சம் மக்களை இப்படிக் கசாப்பு ஆடுகளைப் போலச் சீவித்தள்ளியிருக்கிறோம். இந்தக் கொலைகளுக்கெல்லாம் நாம்தான் பொறுப்பேற்க வேண்டும். பயங்கரவாதிகள் தமது செயலுக்குரிய முழு விலையையும் கொடுத்தாக வேண்டும்'' என்று முழங்குகிறார் நம் ஜனாதிபதி. இது தனக்கெதிராகத் தானே வழங்கிக் கொள்ளும் தீர்ப்பு என்பது அந்த ஆளுக்குப் புரிகிறதா?''

''கேளுங்கள் அமெரிக்க மக்களே!

30 லட்சம் மக்களை இப்படிக் கசாப்பு ஆடுகளைப் போலச் சீவித்தள்ளியிருக்கிறோம். இந்தக் கொலைகளுக்கெல்லாம் நாம்தான் பொறுப்பேற்க வேண்டும். ''பயங்கரவாதிகள் தமது செயலுக்குரிய முழு விலையையும் கொடுத்தாக வேண்டும்'' என்று முழங்குகிறார் நம் ஜனாதிபதி. இது தனக்கெதிராகத் தானே வழங்கிக் கொள்ளும் தீர்ப்பு என்பது அந்த ஆளுக்குப் புரிகிறதா?''

*ஜான் ஸ்டாக்வெல்*

படிப்பகம்

www.padippakam.com





விச வாயுக் கூண்டுக்குக் கொண்டு செல்லப்படும் யூதர்கள்.

# சி.ஐ.ஏ - நாஜி கள்ள உறவு

மிகக் கொடூரமான சித்திரவதை முறைகளையும், கொலைப் படைகளையும் உருவாக்க சி.ஐ.ஏ. யாரிடம் பாடம் கற்றுக் கொண்டது? புரட்சியாளர்கள் ஸ்பார்ட்டகஸ் முதல் பகத்சிங் வரையிலான விடுதலை வீரர்களிடமிருந்து கற்றுக் கொள்வதைப் போல, அமெரிக்க ஆளும் வர்க்கம் ஹிட்லரின் நாஜிப்படை உளவாளிகளைத் தன் குருநாதர்களாக வரித்துக் கொண்டது.

''கம்யூனிஸ்டு எழுச்சிகள் மற்றும் தேசிய விடுதலைப் போராட்டங்களை ஒடுக்குவது எப்படி?'' என்ற தலைப்பிலான அமெரிக்க இராணுவத்தின்நூல்கள் ஜெர்மன் அனுபவத்திலிருந்துதான் தொடங்குகின்றன. ஐரோப்பிய நாடுகளில் பாசிச எதிர்ப்பு இயக்கங்களையும் கம்யூனிஸ்டுகளையும் ஒடுக்க ஹிட்லர் கையாண்ட முறைகள்தான் வழிகாட்டிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாஜி அதிகாரிகளின் ஒத்துழைப்புடன்தான் அமெரிக்க இராணுவம் தனது 'பாடத்திட்டத்தையே' தயாரித்திருக்கிறது.

அது மட்டுமல்ல, ஹிட்லர் தோற்கடிக்கப்பட்டவுடன் ''நாஜிப்படை அதிகாரிகள் அனைவரையும் கைது செய்து, அந்த போர்க் குற்றவாளிகளை விசாரித்துத் தண்டிக்க வேண்டும்'' என்ற ரசியாவின் கோரிக்கைக்கு மக்கள் ஆதரவு பெருகத் தொடங்கியவுடனே முக்கியமான நாஜி கிரிமினல்களை அமெரிக்க அரசு இரகசியமாகவும் பாதுகாப்பாகவும் தன் நாட்டுக்குக் கடத்திச் சென்று தனது இராணுவத்திற்கும் உளவுத் துறைக்கும் அவர்களைப் பயன்படுத்திக் கொண்டது.

ரசியா உள்ளிட்ட கிழக்குப் போர் முனையின் நாஜி இராணுவ உளவுப் பிரிவு அதிகாரியான ஜெனரல் ரெயின் ஹார்டு கெல்லன் அமெரிக்க உளவுத்துறை அதிகாரியாக நியமிக்கப்பட்டான். ஆஸ்விட்ஸ் விஷவாயுப் படுகொலைகள் முதல் ரசியாவில் நடத்தப்பட்ட படுகொலைகள் அனைத்துக்கும் பொறுப்பானவன் இவன் என்பது குறிப்பிடத் தக்கது.

பிரான்சின் கெஸ்டபோ (ஜெர்மன் உளவுத்துறை) அதிகாரியாகப் பணியாற்றியவன் கிளாஸ் பார்பி. பிரான்சின் லியோன் நகரில் இவன் நடத்திய விஷவாயுப் படுகொலைகள் காரணமாக ''லியோன் நகரின் கசாப்புக்காரன்'' என்று பிரெஞ்சு மக்களால் தூற்றப்பட்டவன். போர் முடிந்தவுடன் அவனையே பிரான்சுக்கான தனது உளவுத் துறை அதிகாரியாக நியமித்தது அமெரிக்க இராணுவம்.

ரகசியம் கசிந்து அவனைக் கைது செய்ய வேண்டுமென பிரெஞ்சு மக்கள் போராடத் தொடங்கியவுடன் அவனை பிரான்சை விட்டு பத்திரமாகக் கடத்திச் செல்லும் பொறுப்பை போப்பிடம் ஒப்படைத்தது அமெரிக்கா. நாஜி கிரிமினல்களைப் பாதுகாப்பதற்கென்றே ஒரு இரகசிய வலைப்பின்னலை உருவாக்கியிருந்த வெள்ளைப் பாவாடை சாத்தான்கள், குரோசியாவின் நாஜிப் பாதிரிகள் மூலம் பார்பியை லத்தீன் அமெரிக்காவுக்குப் பாதுகாப்பாகக் கடத்தினர். (போஸ்னிய முசுலீம்களைக் கொன்று குவித்த கிறித்தவ வெள்ளை நிறவெறியின் வரலாற்றை வாசகர்கள் இங்கே புரிந்து கொள்ள வேண்டும்)

பொலிவியாவில் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி இராணுவ ஆட்சியை நிறுவும் பொறுப்பை சி.ஐ.ஏ. ஒதுக்கியபடியே செய்து முடித்தான் பார்பி. அப்படியே பொலிவியாவின் போதை மருந்துக் கடத்தல் மாஃபியாவின் தலைவனானான்.

புனைபெயரில் இயங்கி வந்த இந்தக் கிரிமினல் அடையாளம் காணப்பட்டு விசாரணைக்காக 1982-இல் பிரான்சுக்குக் கொண்டுவரப்பட்டான். ''பிரான்சின் தலைமறைவு கம்யூனிஸ்டுகளை வேட்டையாட பார்பியின் திறமை நமக்குத் தேவையென்பதால் அவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டும்'' என்று கோரிக்கை வைத்தது அமெரிக்க இராணுவத்தின் உளவுத் துறை.

அமெரிக்கா அரவணைத்துக் கொண்ட நாஜி கிரிமினல்களில் பார்பி ஒரு சின்ன மீன். யூத இனத்தைப் பூண்டோடு ஒழிப்பது என்ற ஹிட்லரின் கொள்கைப்படி 60 லட்சம் யூதர்கள் விஷவாவு கிடங்குகளில் கொல்லப்பட்டனர். இந்த விஷவாயுக் கிடங்குகளை உருவாக்கிக் கொடுத்த வால்டர் ராஃப் என்ற நாஜியை சிலிக்கு அனுப்பி வைத்தது சி.ஐ.ஏ. பிறகு அங்கே அலண்டேயும் பல்லாயிரம் கம்யூனிஸ்டுகளும் படுகொலை செய்யப்பட்டனர் என்பது நாமறிந்த வரலாறு.

இவை சில உதாரணங்கள் மட்டுமே. கம்யூனிஸ்டுகள், தேசிய விடுதலைப் போராளிகள், நிறவெறி எதிர்ப்பாளர்கள் ஆகிய அனைவரையும் ஒழிப்பதையே தனது கொள்கையாகக் கொண்ட நாஜிகள் தோற்கடிக்கப்பட்டவுடன் அந்தப் பணியை எடுத்துக் கொண்ட அமெரிக்கா, அவர்களது ஆட்கள், வழிமுறைகள் அனைத்தையும் கிரகித்துக் கொண்டது.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் அவர்கள் உளவுத்துறை அதிகாரிகளாக்கப் பட்டனர். தென் அமெரிக்காவிலும், மத்திய அமெரிக்காவிலும் இருந்த அமெரிக்க புதுக்காலனி நாடுகளில் அவர்கள் போலீசு - இராணுவ ஆலோசகர்களாக்கப் பட்டனர். போதை மருந்து கடத்தல், ஆயுத விற்பனை, கொலைகாரக் கூலிப்பட்டாளங்களைப் பயிற்றுவிப்பது, உளவு வேலை ஆகிய அனைத்தையும் ஒருங்கே செய்கின்ற, ''சி.ஐ.ஏ. அங்கீகாரம் பெற்ற'' பயங்கரவாதிகளாக அவர்கள் வளர்க்கப் பட்டனர்.

''எனவேதான் மத்திய, தென் அமெரிக்க பொம்மை ஆட்சிகள் நாஜி அரசைப் போலவே இருக்கின்றன; அந்நாட்டு மக்கள் அனுபவிக்கும் சித்திரவதைகளில் கெஸ்டபோவின் முத்திரை தெரிகிறது'' என்கிறார் அமெரிக்க அறிஞர் நோம் சோம்ஸ்கி.

ஆக, நாஜிகள்தான் அமெரிக்க ஜனநாயகவாதிகளின் குருநாதர்கள் என்று நாம் முடிவுக்கு வரலாம். ஆனால் நாஜிகளோ ''இனப்படுகொலை (Genocide) மூலம் யூத இனத்தையே ஒழித்துவிடுவது'' என்ற தங்கள் கொள்கையை, செவ்விந்தியர்களைப் பூண்டோடு கொன்ற அமெரிக்கர்களிடமிருந்துதான் நாங்கள் கற்றுக் கொண்டோம் என்கிறார்கள், யார் குரு? யார் சீடன்? ●

படிப்பகம்

www.padippakam.com







இடது : 1984: அமெரிக்க யூனியன் கார்பைடால் போபாலில் கொல்லப்பட்ட இந்தியக் குழந்தை

வலது : 2001: அமெரிக்கக் குண்டுவீச்சால் உயிருக்குப் போராடும் ஆப்கான் குழந்தை.

# சாத்தானின் பேரரசு - அப்பாவிக் குடிமக்கள்

***உலக வர்த்தக மையம் தகர்க்கப்பட்ட அடுத்த சில தினங்களில் ''இண்டி மீடியா சென்டர்'' என்ற இணையத் தளத்தில் புதிய கலாச்சாரம் சார்பாக ஒரு சிறு கட்டுரையை வெளியிட்டோம். அமெரிக்க ஐரோப்பிய வாசகர்களைக் குறி வைத்து எழுதப்பட்ட அக்கட்டுரையையும், அதற்கு பல்வேறு நாடுகளிலிருந்து எமக்கு வந்த கடிதங்களில் சிலவற்றையும் இங்கே வெளியிடுகிறோம்.***

நான் நாகரிக உலகைச் சார்ந்தவனல்ல, அநாகரிக உலகைச் சார்ந்தவன். பென்டகனும் உலக வர்த்தக மையக் கட்டிடங்களும் நொறுங்கிச் சரிந்தபோது நான் குதூகலித்தேன். இந்த உண்மையைச் சொல்வதற்கு நான் வெட்கப்படவில்லை. என்னுடைய நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்குத் தோன்றிய உணர்ச்சியும் இதுதான். உலகின் மாபெரும் வல்லரசின் முகத்தில் 'சப்'பென்று ஒரு அறை!

ஆனால் மாடியின் உச்சியிலிருந்து மக்கள் குதிப்பதையும், பெண்கள் கதறுவதையும், பலர் உயிர்தப்பி ஓடுவதையும் பார்த்தபோது வருத்தமாகத்தானிருந்தது. கொல்லப்பட்டவர்களில் பலர் சாதாரணத் தொழிலாளர்கள் என்பதை அறிந்தபோது வருத்தம் மேலிட்டது. ஏனென்றால் நாங்கள் இன்னும் நாகரிகமடையவில்லை. சாக்லேட்டை மென்று கொண்டே, கோக்கை உறிஞ்சிக் கொண்டே ஈராக் மீது குண்டு வீசுவதைத் தொலைக்காட்சியில் பார்த்து ரசித்ததே அமெரிக்கா, அந்த நாகரிகம் எங்களுக்கு இன்னும் கைவரவில்லை.

முதலில் ''அமெரிக்காவின் மீது பயங்கரம்'' என்றார்கள், பிறகு ''அமெரிக்காவின் மீது போர்.'' இடிபாடுகளின் மத்தியில் நின்று கொண்டு, தீயணைப்பு வீரரின் தோளை அணைத்தபடியே போர்ப் பிரகடனம் செய்கிறார் அமெரிக்க அதிபர்.

ஹாலிவுட் குப்பையான ''இண்டிபென்டன்ஸ் டே'' என்ற திரைப்படம் என் நினைவுக்கு வருகிறது. ஆனால் மாயையைக் காட்டிலும் ஆபாசமாக இருக்கிறது இந்த எதார்த்தம். நாகரிக அமெரிக்காவின் மக்கள் படிப்பறிவற்ற இந்திய விவசாயியைக் காட்டிலும் அரசியல் பாமரர்களாக இருக்கிறார்களே... ஆச்சரியமாகத்தானிருக்கிறது.

இதோ, அமெரிக்கா கோபத்தால் துடிக்கிறது. உயிரிழப்பினால் வந்ததல்ல இந்தக் கோபம். மாபெரும் தேசம் அவமானப் படுத்தப்பட்டுவிட்டது. அமெரிக்கா இதற்குப் பழிவாங்க வேண்டும். உடனே பழிவாங்க வேண்டும். இதோ பேரரசு திருப்பித் தாக்குகிறது! அதற்குச் சர்வதேசச் சட்டங்கள் ஒரு பொருட்டல்ல. அது உலகிற்கு எந்த ஆதாரமும் காட்டத் தேவையில்லை.

ஜெர்மன் பாராளுமன்றத்திற்குத் தீ வைத்ததாகக் கம்யூனிஸ்டுகள் மீது பொய்க் குற்றம் சாட்டினான் ஹிட்லர். அவன் கூட ஒரு விசாரணை நாடகம் நடத்த வேண்டியிருந்தது. அத்தகைய அற்ப சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பதற்கெல்லாம் திருவாளர் புஷ்ஷுக்கு அவகாசமில்லை. சக்ரவர்த்தி அவர்கள் தனது ஜனநாயக மாண்பை யாருக்கும் நிரூபிக்க வேண்டிய அவசியமும் இல்லை.

பேரரசுக்கு பின்லாடன் மீதுதான் சந்தேகம். அதாவது நம்பகமான ஆதாரம் எதுவும் பேரரசிடம் இல்லை. இருந்த போதிலும் சந்தேகப்படும் நபரையும், அவனுக்கு உணவும் உறைவிடமும் கொடுத்த

படிப்பகம்

www.padippakam.com



அனைவரையும் கொலை செய்ய பேரர சுக்கு உரிமை இருக்கிறது.

இந்த **நன்மை**யின் திருவுருவம் தான் அந்தத் **தீமை**யை உருவாக்கியது என்ற உண்மையை இங்கே கிளறத் தேவை யில்லை. பேரரசுக்குச் சேவை செய்யும் பட்சத்தில் எல்லாத் தீமைகளையும் நன்மை என்றே கொள்ள வேண்டும்.

பேரரசு விரும்பினால் எந்த நாட்டையும் குண்டு வீசி அழிக்கும். 1986-இல் அது லிபியாவின் மீது குண்டு வீசியது. கடாபியின் குழந்தையைக் கூடக் கொன்றது. செத்துப் போன மக்கள் எத்தனைப் பேர் என்று தெரியாது. பெர்லின் இரவு விடுதியில் நடந்த ஒரு குண்டு வெடிப்பில் இரண்டு அமெரிக்கச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். அதற்குப் பழிவாங்கத்தான் இந்த நடவடிக்கை. பெர்லின் குண்டு வெடிப்புக்கும் லிபியா அரசுக்கும் என்ன தொடர்பு என்பது இதுவரை நிரூபிக்கப்படவில்லை. ஆனால் பழி வாங்கும் நடவடிக்கை முடிந்தது.

1998-இல், சூடானில் ஒரு மருந்துத் தொழிற்சாலையின் மீது அமெரிக்கா குண்டு வீசியது. இறந்தவர்கள் எண்ணிக்கை இதுவரை தெரியாது. அங்கே பயங்கரவாதிகளுக்கு ரசாயன ஆயுதம் தயாரிக்கிறார்கள் என்பது குற்றச்சாட்டு. அந்த ஆலையின் அதிபர் அமெரிக்க நீதிமன்றத்திலேயே வழக்கு தொடர்ந்துள்ளார். இங்கும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை. ஆனால் பழிவாங்கும் நடவடிக்கை முடிந்தது.

பேரரசால் கொல்லப்பட்ட உலக மக்களின் எண்ணிக்கை பல இலட்சங்களைத் தாண்டும். ஒருவேளை அமெரிக்கரல்லாத உயிர்களைப் பற்றிக் கவலைப்படுவது அமெரிக்கப் பண்பாட்டிற்கு விரோதமானதோ!

நாங்களும்தான் ஒரே நாளில் 5000 உயிர்களை இழந்தோம் போபாலில். ஒரு இலட்சம் பேருக்கு மேல் இங்கே முடமாக்கப்பட்டார்கள். இந்தப் படுகொலைக்குப் பொறுப்பான அமெரிக்காவின் யூனியன் கார்பைடு நிறுவனம் இதை ஒரு ''விபத்து - வாயுக் கசிவு'' என்றது. உண்மையில் கசிந்ததோ ஒரு இராணுவ இரகசியம். பென்டகனுக்கு இரசாயன ஆயுதம் தயாரித்துத் தரும் ஆராய்ச்சிதான் உள்ளே நடந்திருக்கிறது என்ற இரகசியம்.

யூனியன் கார்பைடின் தலைவர் ஆண்டர்சன்தான் முதல் குற்றவாளி. அவருக்கெதிராக கிரிமினல் வழக்கு இருக்கிறது. பிடிவாரண்டும் இருக்கிறது. ஆனால் அவரோ அமெரிக்காவிலுள்ள தன் தலைமையகத்தில் உல்லாசமாக அமர்ந்திருக்கிறார்.




**''ஆண்டர்சனைத் தூக்கிலிடு'' போபால் மக்களின் சுவர் விளம்பரம். இன்று வரை பயங்கரவாதி ஆண்டர்சன் கைதுச் செய்யப்படவில்லை.**

''ஆப்கன் குகைக்குள்ளிலிருந்து பின்லாடனைப் புகை போட்டு வெளியே இழுத்து விடுவோம்'' என்கிறார் புஷ். நாங்கள் ஆண்டர்சனைப் புகை போட்டு இழுக்க முடியவில்லை. ஆண்டர்சன் பயங்கரவாதியல்ல என்பதல்ல காரணம்; இந்தியா அமெரிக்கா அல்ல என்பதுதான் காரணம்.

''எந்த நாட்டில் வேண்டுமானாலும் அத்துமீறி நுழைந்து குற்றவாளிகளைக் கைது செய்து கொண்டுவர அமெரிக்கப் போலீசுக்கு அதிகாரம் உண்டு'' என்று தீர்ப்பளிக்கிறது அமெரிக்க உச்ச நீதி மன்றம். நாடுகளின் இறையாண்மையை மீற அனுமதியளிக்கும் அதே நீதிமன்றம்தான், வர்த்தக நெறிகளை மீறும் பில்கேட்ஸின் ஏகபோக பயங்கரத்திற்கும் அனுமதி வழங்குகிறது. இது பேரரசின் நீதியன்றோ!

குறைந்தபட்சம் எங்களது போபால் மக்கள் இரண்டு அமெரிக்க சுற்றுலாப் பயணிகளைப் பிடித்துக் கொன்றாவது பழி தீர்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அவமானத்தால் துடிப்பவர்கள்தான் அத்தகைய கொலைகளைச் செய்ய முடியும். அமெரிக்க அரசுச் செயலர் காலின் பாவெலின் வார்த்தைகளில் சொல்வதென்றால், அதற்கு உடம்பில் ஒரு சொட்டாவது **நாகரிக ரத்தம்** ஓட வேண்டுமே!

'பழுப்பு நிறத்தில் ஜொலிக்கும் அமெரிக்காவின் கோபம்' என்று டைம் சிறப்பிதழில் லான்ஸ் மாரோ வருணிக்கிறாரே, அந்தக் கோபம்தான் அங்கே ஆசிய மக்களைத் தாக்குகிறது. அமெரிக்கக் கோபத்தின் உண்மையான நிறம்தான் என்ன, பழுப்பா அல்லது வெள்ளையா?

கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு இரங்கல் தெரிவிக்கக் கோரினால் உடனே நாமும் தெரிவித்து விடுகிறோம். உண்மையில் அனைவரும் அப்பாவிகள் தானா? தங்களைச் சுற்றி நடப்பது எதுவும் அவர்களுக்குத் தெரியாதா?

''அமெரிக்காவின் பொருளாதாரத் தடை காரணமாக 5 லட்சம் ஈராக்கியக் குழந்தைகள் கொல்லப்பட்டிருக்கிறார்களே'' என்று கேட்டபோது அமெரிக்க அரசுச் செயலர் மாடலைன் ஆல்பிரைட் அம்மையார் ''அது ஈராக் கொடுக்கத் தகுந்த விலைதான்'' என்று பதிலளித்தார்.

சதாம் உசேன் இழைத்ததாகச் சொல்லப்படும் குற்றத்திற்கு ஈராக்கியக் குழந்தைகள் - உண்மையான அப்பாவிகள் - தங்கள் உயிரை விலையாகக் கொடுக்க வேண்டுமென்றால், இதுதான் அமெரிக்க நீதி என்றால், இப்போது அமெரிக்கா கொடுத்திருக்கும் விலையும் நீதியானதுதான்.

ஆனால் அமெரிக்கா கொடுத்திருக்கும் இந்த விலை, கொடுக்கத் தகுந்த விலைதானா என்பது முற்றிலும் வேறு கேள்வி. ஆல்பிரைட் அம்மையாரைக் கேட்டுப் பாருங்கள். ''அமெரிக்காவின் உலக மேலாதிக்க நலனுக்காக இந்த விலையும் கொடுக்கத் தகுந்ததுதான்'' என்று தயங்காமல் பதிலளிப்பார்.

''ஆபரேசன் இறுதித் தீர்ப்பு'' அமெரிக்காவை அடியற்ற படுகுழிக்குள் இழுத்துச் செல்லும். 'அப்பாவி' அமெரிக்கர்களை குழிக்கு வெளியிலிருந்து பயங்கரவாதம் அச்சுறுத்தும்; குழிக்கு உள்ளே பாசிசம் துன்புறுத்தும்.

**அமெரிக்க மக்களே,**

உங்கள் அப்பாவித்தனத்தை விடுங்கள். கொஞ்சம் தலையை நிமிர்த்துங்கள். உங்கள் பேரரசு உலகெங்கும் உருவாக்கியிருக்கும் இடிபாடுகளைப் பாருங்கள்.

அப்பாவித்தனத்தை விடுங்கள். இல்லையேல் இன்னும் ஏராளமான அப்பாவிகள் உயிரை விட வேண்டியிருக்கும்.

வருந்தத்தக்கதுதான். எனினும் இதுதான் வரலாறு.

**புதிய கலாச்சாரம், 15-செப், 2001**

**(இக்கட்டுரைக்கான வாசகர்களின் எதிர்வினைகள் அடுத்த பக்கத்தில்)**

padippakam

www.padippakam.com



## சாத்தானின் பேரரசு - சிக்கிக்கொண்ட குடிமகன்

✦ உங்கள் கட்டுரையைப் படித்தேன். சரியான நெற்றியடி. ''படிப்பறிவில்லாத இந்திய விவசாயிகளைக் காட்டிலும் அமெரிக்கக் குடிமக்கள் அரசியல் பாமரர்களாக இருக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டிருக்கிறீர்களே அது அமெரிக்க 'நாகரிகத்தை'ச் சந்திக்கு இழுக்கிறது... நியூயார்க்கில் இறந்த மக்களுக்காக யாசர் அராபத் இரத்த தானம் செய்வதை இங்கே பிரிட்டன் தொலைக்காட்சி ஒளிபரப்புகிறது. ஆனால் இதுவே அமெரிக்காவில் இருட்டடிப்பு செய்யப்படுகிறது நாசமாய்ப் போன நாகரிகம்! நான் போய் நிம்மதியாக கஞ்சா அடிக்கிறேன். சாத்தானின் பேரரசு - சிக்கிக்கொண்ட குடிமகன்!

**— டக்ளஸ், இங்கிலாந்து.**

## 'சதாம் உசேன்'

✦ உங்கள் கட்டுரையைப் படித்தேன். பெரிதும் பயனுள்ளதாகவும் நறுக்கென்றுமிருந்தது. எனக்கு வயது 16. அமெரிக்காவில் நடந்த தாக்குதல் பற்றி எங்கள் பள்ளியில் கட்டுரை எழுதச் சொன்னார்கள். இந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கும் அமெரிக்காவின் உலகக் கொள்கைக்கும் வேறுபாடு எதுவுமில்லை என்று நான் எழுதினேன். என் கருத்தை யாரும் ஏற்கவில்லை. சிலபேர் என்னை சதாம் உசேன் என்று திட்டினார்கள்.

பாலஸ்தீன மக்களைக் கொன்று, அவர்களது மண்ணை ஆக்கிரமிக்கின்ற அமெரிக்க அடிமை நாடான இந்த இசுரேலில் கூட சோசலிசத்தை நேசிக்கும் மக்களும், என்னைப் போன்ற பையன்களும் இருக்கிறார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மூலதனத்திற்கும் பாசிசத்திற்கும் எதிரான உங்கள் போராட்டத்தை ஆதரிக்கிறோம். போராட்டத் தீயை அணைய விடாதீர்கள்.

**— உங்கள் சகோதரன், தால் ராச்மேன், இசுரேல்**

## ஆஸ்திரேலியாவில் அமெரிக்க வெறி

✦ உங்கள் கட்டுரையைப் படித்தேன். தாக்குதலைக் கண்டவுடன் நீங்கள் என்ன உணர்ச்சிக்கு ஆளானீர்களோ, அதே உணர்ச்சிதான் எனக்கும் ஏற்பட்டது. இங்கே ஆஸ்திரேலியாவில் பழிவாங்கும் வெறியும் குருட்டுத்தனமான சென்டிமென்டும் தலைவிரித்தாடுகிறது.. அமெரிக்கத் தொலைக்காட்சிகளைப் பார்த்துப் பார்த்து ஆஸ்திரேலிய மக்கள் பலர் அமெரிக்க அரசாகவே மாறிவிட்டார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் நம்மைப் போன்றவர்கள், உண்மைக்காகப் போராடுபவர்கள், சலிக்காமல் கத்திக் கொண்டேயிருக்க வேண்டும்; ஓய்ந்து விடக்கூடாது. அடுத்ததாக எதிர்ப்புக் குரலையெல்லாம் நசுக்கத் தொடங்குவார்கள். தொடர்ந்து எழுதுங்கள்.

**— ரே டிரூ, எழுத்தாளர், புகைப்படக் கலைஞர், ஆஸ்திரேலியா.**

## அமெரிக்க மக்கள் அப்பாவிகள்!

✦ உங்கள் கட்டுரையைப் படித்து அதிர்ச்சியடைந்தேன். ''தன்வினை தன்னைச் சுடும்'' என்கிற ரீதியில்தான் எல்லோரும் விமரிசிக்கிறீர்கள்... பொதுவாக அமெரிக்கர்களிடம் காணப்படும் ஆணவம், சுயநலம், அறியாமை போன்ற எதிர்மறைப் பண்புகள் என்னிடம் கிடையாது. அதே நேரத்தில் ஒரு சராசரி அமெரிக்கன் எப்படிச் சிந்திக்கிறான் என்பதைப் பற்றி எனக்கு ஓரளவு தெரியும்.

அரசியலே போரடிக்கும் விசயம் என்று சிந்திக்க அவன் பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறான். ஈராக்கியக் குழந்தைகள் சாவதைத் தொலைக்காட்சியில் பார்க்கும்போது ''அமெரிக்காவையா எதிர்க்கிறாய்... அனுபவி'' என்று யாரும் நினைப்பதில்லை. ''வாவ்... சினிமா மாதிரியே இருக்கிறதே'' என்று குதூகலிப்பதுமில்லை. மாறாக ''குழந்தைகள் சாவது பாவம்தான். இருந்தாலும் நம் அரசாங்கம் சொல்வதை நம்பாமலிருக்கவும் முடியாதே. நாம் தானே நம் அரசைத் தேர்ந்தெடுத்தோம்'' என்று சிந்திக்கிறார்கள். பெற்றோரை நம்பும் பிள்ளைகள் போல அரசாங்கத்தைக் கேள்விக்கிடமின்றி நம்புகிறார்கள்.

தங்களது அரசாங்கம் செய்யும் தவறுகளைப் புரிந்து கொள்ளத் தெரியாதது மட்டுமல்ல, மற்றவர்கள் அமெரிக்காவை ஏன் வெறுக்கிறார்கள் என்பதையும் அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே அவர்கள் உண்மையிலேயே அப்பாவிகள்தான்... ஆயிரம்தான் இருக்கட்டும். மரணத்தைக் கண்டு யாராவது குதூகலிக்க முடியுமா என்ன? வெறுப்பாக இருக்கிறது.

**— மைக்கேல் மெக் அபி, அமெரிக்கா.**

## அபத்தம், குப்பை, முட்டாள்தனம்!

✦ சரியான அபத்தம். ஆதாரங்களே இல்லாமல் எழுதப்பட்ட இப்படியொரு குப்பையை நான் இதுவரை படித்ததில்லை.. வளைகுடாப் போரின் உண்மையான பின்னணியைத் தெரிந்து கொள்ள விரும்பினால் நூற்றுக்கணக்கான இணையத்தளங்களில் பார்க்கலாம். அவற்றில் மிகவும் நடுநிலையானது அமெரிக்க அரசின் இணையத்தளம்தான். உங்களைக் கேட்டால் அவையெல்லாம் பொய் என்பீர்கள். பயங்கரவாதிகளை உருவாக்குவதே இந்த முட்டாள்தனம்தான்.

**— பால், அமெரிக்கா.**

## அமெரிக்கா இன்றி வாழ முடியுமா?

✦ அடுத்த முறை நிலநடுக்கம் ஏதாவது வந்து உங்கள் அருமை விவசாயிகளைக் காப்பாற்ற உதவி தேவைப்படும்போது வேறு இடம் பாருங்கள். நாங்கள் தீய வல்லரசு. ஆனால் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் உடனே அமெரிக்காவைத் தேடுவீர்கள். எங்களிடம் ஒன்றும் அன்புக்குப் பஞ்சமில்லை. உங்களைப் போல நாங்கள் பெண்டாட்டியைக் கொளுத்துபவர்களில்லை.

அமெரிக்காவின் சிறந்த மருத்துவர்களெல்லாம் இந்தியர்கள்தான். உங்கள் அரசாங்கத்தின் கொடுமை தாங்காமல்தான் அவர்கள் இங்கே ஓடி வந்திருக்கிறார்கள்... நீங்களோ எங்களைப் பார்த்துத் தீயசக்தி என்கிறீர்கள். அமெரிக்கா இல்லாத உலகத்தில்தான் வாழ்ந்து பாருங்களேன். அமெரிக்கா என்றால் என்னவென்று அப்புறம் தெரியும்.

**— ஜிம், அமெரிக்கா.**

**ஜிம் அவர்களுக்கு,**

ஐயா சுயவிமரிசனச் சக்ரவர்த்தியே, எதப்பா கொடுமையானது, பெண்டாட்டியை எரிப்பதா, அல்லது பள்ளி மாணவியைக் கர்ப்பமாக்கி கைக் குழந்தையுடன் தவிக்க விட்டுவிட்டு புதுப் பெண்டாட்டி தேடி அலைகிறீர்களே அது கொடுமையானதா? மூன்றாம் உலக நாடுகளின் கொடூர ஆட்சிகள் பலவற்றைக் காப்பாற்றுவதே அமெரிக்க பிரிட்டிஷ் அரசுகளும் பன்னாட்டு நிறுவனங்களும்தான் தெரியுமா? அந்த ஆட்சிகளை எதிர்த்து அந்நாட்டு மக்கள் போராடும்போது அந்த ''பயங்கரவாதத்தை'' ஒடுக்க உதவி செய்பவர்கள் யார் தெரியுமா? நம் அமெரிக்காதான்.

ஜிம், உன்னுடைய முட்டாள்தனம் ரொம்பவும் பச்சையாக வெளியே தெரிகிறது. அதை மறைத்துக் கொள்ளவாவது நீ

www.padippakam.com






1. பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸை பூவால் அடித்த லாட்வியா நாட்டின் பெண் - பெண்ணின் மீது ஆயுள் தண்டனை வழக்கு!

2. அமெரிக்கா - "புஷ்தான் பயங்கரவாதி"
3. ஜெர்மன் - "நேட்டோ - ஒரு பயங்கரவாத அமைப்பு"
4. பாகிஸ்தான் - மனிதகுல வரலாற்றின் ஆகக் கொடூரமான நாடு - அமெரிக்கா!

கொஞ்சம் முயற்சி செய்ய வேண்டும்.

— கேயாஸ்,
அமெரிக்கா.

## கொஞ்சம் நிறவெறியும் காலியான மண்டையும்

✱ அமெரிக்க அப்பாவி மக்களின் சாவுக்கு வருந்துகிறோம். ஆனால் உலகப் பண மூட்டைகளின் இலாப வெறிக்குப் பலியாகும் ஆயிரக்கணக்கான மக்களின் சாவைப் பற்றிக் கேட்பாரில்லை... போர்வெறியையும், நிற வெறியையும் முதலாளித்துவத் தகவல் ஊடகங்கள் திட்ட மிட்டே உருவாக்குகின்றன.

ஏற்கனவே கொஞ்சம் நிறவெறியும், காலியான மண்டையும் கொண்ட அமெரிக்கக் குடிமக்கள் இதையெல்லாம் அப்படியே விழுங்கித் தொலைக்கிறார்கள். என் புருசனும் இப்படி ஒரு ஆள்தான். என்னால் சகிக்க முடியவில்லை. "போ... போய் இராணுவத்தில் சேர்ந்து சண்டை போட்டு எங்கேயாவது ஒரு கண்காணாத பாலைவனத்தில் செத்துத் தொலை" என்று சொல்லிவிட்டேன்.

ஆனால் ஒருவகையில் இந்தச் சம்பவம் எனக்கு இறைவன் கொடுத்த வரம்தான். ஆணாதிக்கத் திமிர் பிடித்த பன்றிகளான இப்பேர்ப்பட்ட கணவன்மார் களிடமிருந்து என்னைப் போன்ற பரிதா பத்திற்குரிய மனைவிகளுக்கு இப்படியா வது ஒரு விடுதலை கிடைக்கட்டும்.

— போரில் கணவனின் சாவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் மனைவி,
அமெரிக்கா.

## இப்போதுதான் விழித்தோம்

✱ அரசியலற்ற பேரின்ப நிலையின் கோமாவில் நாங்கள் மிதந்து கொண்டி ருந்தோம். உண்மையான சுதந்திரத்திற் காக, அமெரிக்கக் கொலைக்கரங்களிலி ருந்து விடுதலையடைவதற்காக, இன்னும் எதற்காகவெல்லாமோ உலகெங்கும் மக்கள் சாகிறார்கள். அடி எங்கள் மேல் விழுந்தவுடனே விழித்துக் கொண்டோம். தூக்கக் கலக்கத்தில் தடுமாறும் அமெரிக் கர்கள் தங்கள் கொடியை வைத்து உலகத் திற்கு விழிப்புணர்வு ஊட்டப் போகிறார் களாம்!

— மாலிக், அமெரிக்கா.

## ஆத்திரமும் அனுதாபமும்

✱ என் வயது 18. தொலைக்காட்சி, பத்தி ரிகைகளைக் கண்டு வெறுத்துப் போன இளைஞன் நான். போன வெள்ளிக்கிழமை ஒரு அமெரிக்கனுடன் பேசிக் கொண்டி ருந்தேன். அமெரிக்க அரசுதான் முதலா ளித்துவக் கொடுமைகளை உலகத்தின் மீது திணிக்கிறது என்ற உண்மை கூட அவன் மண்டையில் ஏறவில்லை... அமெரிக்கர் களைக் கண்டால் ஆத்திரம்தான் வருகிறது. பல உண்மைகள் அவர்களுக்கு இருட்ட டிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. அது பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. அந்த உண்மைகள் தெரியவந்தாலும் அவர்கள் அக்கறை காட்டுவதில்லை...

இவர்களுக்காக நான் மட்டும் ஏன் வருந்தவேண்டும்? ஏதோ ஒரு நாட்டின் சேரிகளில் வாழ்ந்து கொண்டு, மோசமான கூலிக்கு 'நைக்' காலணிகளை உற்பத்தி செய்து கொடுத்துவிட்டு, தங்கள் நோயாளிக் குழந்தைகளுடன் வாழ்க்கையைத் தள்ளுகிறார்களே அந்த கோடிக்கணக்கான அப்பாவி மக்களுக்கா கத்தான் நான் அனுதாபப்படுவேன்.

— லியோனி ஹாட்ஜ்,
செக்கோஸ்லோவாகியா.

படிப்பகம்

www.padippakam.com





# உலக பயங்கரவாதியின் குகைக்குள்ளே:

# ஒரு திமிங்கிலமும் 5 லட்சம் குழந்தைகளும்




**"எங்கள் வயிற்றிலிருந்து வெளிவருவது குழந்தை தானா, அது எது, எப்படி யிருக்கும் என்பதே தெரியாது.**

**— ஒரு ஈராக் தாய்**



அமெரிக்க அதிபர் புஷ் தனது வீட்டுப் பூனைக்கு வைத்த பெயர் 'இந்தியா'. 'தாய் நாட்டின்' பெயரை நாய்-பூனைக்கு வைத்த அநீதி கண்டு ஆர்த்தெழுந்த பா.ஜ.க. - சிவசேனா - சி.பி.எம் போன்ற சிங்கங்கள் புஷ்ஷைக் கண்டித்தும், கழுதைக்கு பெயர் வைத்துக் கேலி செய்தும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். ''புஷ் இந்தியாவை கேவலப்படுத்தவில்லை, புஸ்... புஸ் என வரும் தனது பூனையை - இந்தியாவை - நேசிக்கிறார் என்பதைக் கூட புரிந்து கொள்ளவில்லையே'' என்று அமெரிக்க அரசு வேதனையுடன் விளக்கமளித்தது.

என்றாலும் சமீபத்தில் அமெரிக்கா சென்ற ஜஸ்வந்த்சிங்கும், இந்தியா வந்த காலின் பாவெல்லைச் சந்தித்த வாஜ்பாய், அத்வானியும் பூனைகளாய்ப் பம்மிப் பணிவுடன் நடந்து கொண்டனர் என்பதால் வெள்ளை மாளிகையின் சீமான்கள் ஆறுதலடையலாம்!

இந்தியக் குழந்தைகள் ஒரு வருடத்தில் குடிக்கும் பால், கடிக்கும் பிஸ்கெட் இத்யாதிகளின் செலவை விட அமெரிக்க நாய் - பூனைகளின் குடும்பச் செலவு பல மடங்கு அதிகம். உதாரணமாகக் காணாமல் போகும் வீட்டுப் பிராணிகளைக் கண்டுபிடிக்கும் துப்பறியும் நிறுவனங்கள் அங்கே ஏராளம். இன்னும் வாரிசில்லாத செல்வந்தர்களில் சிலர் தமது சொத்தையே நாய்களுக்கு எழுதி வைக்கிறார்கள் என்றால் லேசான விசயமல்ல.

மனித உறவுகளைத் தாண்டி 'வாடிய பயிரைக் கண்டு வருந்தும்' இந்த வள்ளலார் பாணி உயிராபிமானி மனநிலை அமெரிக்கச் சமூகத்தின் முன்னேறிய நிலையைக் குறிக்கிறதா? இக்கேள்விக்கு விடை காண சில ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த 'ப்ரீ வில்லி' என்ற திரைப்படமும், அதைத் தொடர்ந்து அமெரிக்கக் குழந்தைகளை வைத்து தோற்றுவிக்கப்பட்ட 'மாபெரும்' இயக்கமும் நமக்குப் பயன்படும்.

புதிதாகப் பிடித்து வரப்படும் திமிங்கலம் ஒன்றுடன் நட்பு கொள்கிறான் ஒரு சிறுவன். அந்தத் திமிங்கலத்தை வாங்கிக் காசு பார்க்க முயலும் ஒரு கும்பலிடமிருந்து அதைக் காப்பாற்றி மீண்டும் கடல் சேர அச்சிறுவன் உதவுகிறான். சிறுவனுடன் குதூகலமாய் நட்புக் கொள்ளும் அந்தத் திமிங்கலத்திற்கு மனிதர்கள் வைத்த பெயர் **'கெய்க்கோ'**.

திரைப்படத்தில் விடுதலை அடையும் கெய்க்கோ உண்மையில் மெக்சிகோவின் நீச்சல் அரங்கு ஒன்றில் நாளொன்றுக்கு 3 காட்சிகள் நடித்து தன் முதலாளிகளுக்கு பணத்தை வசூலித்து வந்தது.

கெய்க்கோ நடித்த திரைப்படம் வசூலில் மட்டுமல்ல, அமெரிக்கக் குழந்தைகளின் உணர்ச்சியோடு ஒன்றுவதிலும் வெற்றி பெற்றது. திரைக்கதைச் சிறுவனைப் போல ''கெய்க்கோவை விடுதலை செய்'' என்று அமெரிக்கக் குழந்தைகள் கிளர்ந்தெழுந்தனர். சிறார்களின் 'போராட்டம்' வெற்றி பெற, ஈடேற அமெரிக்காவின்

படிப்பகம்

www.padippakam.com



பன்னாட்டு நிறுவனங்கள் பொருளுதவி செய்தன.

'கெய்க்கோவைக் காப்பாற்றுவோம்' இயக்கம் பரவியது. இம்முழக்கம் பொறிக்கப்பட்ட வாழ்த்து அட்டைகள், பனியன்கள், பொம்மைகள் போன்றவை குழந்தைகள் உலகில் பரவின. தன்னார்வ அரசு நிறுவனங்கள் கெய்க்கோவை விடுவிக்க போர்க்கால வேகத்தில் செயல்பட ஆரம்பித்தன.

மெக்சிகோவிலிருந்து சிறப்பு விமானம் மூலம் ஒரு நாட்டின் அதிபரைப் போல வந்திறங்கிய கெய்க்கோவை முழு அமெரிக்காவே வரவேற்றது. தொலைக்காட்சிகள் நேரடியாக ஒளிபரப்ப, நகர மக்கள் வாழ்த்து அட்டைகளுடன் வழியெங்கும் முழக்கமிட்டனர்.

ஆழ்கடலில் திமிங்கலம் வசிக்கும் இயற்கைச் சூழலுடன் உருவாக்கப்பட்ட அரங்கத்தில் கெய்க்கோ விடப்பட்டது. ஆழ்கடல் வாழ்க்கையை நினைவூட்டும் வண்ணம் அந்த மீனுக்கு வேட்டையாடும் பயிற்சியும், சீட்டியடிப்பதும் கற்றுத் தரப்பட்டன. அது பிடித்துவரப்பட்ட ஐஸ்லாந்து கடல் பகுதியில் கெய்க்கோவின் திமிங்கிலக் குடும்பத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

கெய்க்கோவை மீட்பதற்கு போர்க்கால இயக்கம் நடைபெற்ற அதே காலத்தில்தான், அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போர் ஈராக்கை எரித்துக் கொண்டிருந்தது. திமிங்கிலத்தை நேசித்த அதே நாடுதான், போர் - பொருளாதாரத் தடைகளினால் ஈராக் மக்களைக் கொன்று குவித்தது.

குறிப்பாக, பத்தாண்டு தடையின் விளைவாக ஐந்து லட்சம் குழந்தைகள் கொல்லப்பட்டனர். தடுப்பூசி மருந்துகள், குழந்தை உணவு - பால் பொருட்கள் போன்றவை தடை செய்யப்பட்டதால் குற்றுயிரும் - கொலையுயிருமாய்ப் பிறந்த குழந்தைகள் தனிக் கணக்கு. ஈராக்கில் அமெரிக்கா வீசியெறிந்த வீரியம் குறைந்த யுரேனியம் (அணுகுண்டின் மூலப்பொருள்) அடங்கிய வெடி மருந்தின் எடை 350 டன்.

மாமிசமாய்க் குதறப்பட்ட ஈராக் குழந்தைகளின் அவலமும் பெரிய மீனுக்காக உளமுருகும் அமெரிக்கக் குழந்தைகளின் இரக்கமும் - ஒரே சமயத்தில் நடந்த தற்செயலான நிகழ்ச்சிகளல்ல. இரண்டும் ஏகாதிபத்திய அரசும், சமூகமும் திட்டமிட்டு நடத்திய ஒன்றுக்கொன்று பொருத்தமான நிகழ்ச்சிகள்தான்.

ஒன்று உலகை மேலாதிக்கம் செய்யும் ஆக்கிரமிப்புப் போராகவும், மற்றொன்று அதற்கு ஆதரவான சமூக அடிப்படையை உருவாக்கும் உணர்வாகவும் இருக்கின்றது. தன் வயதினையொத்த குழந்தைகள் கொல்லப்படுவதை சாகசமாக நினைப்பதற்குப் பழக்கப்படுத்தப்பட்ட அமெரிக்கக் குழந்தைகள்தான் கெய்க்கோவிற்காக வருந்துமாறும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

ஆப்கானைச் சுடுகாடாக்குவதற்கு 2 லட்சம் கோடி ரூபாயை ஒதுக்கிய அமெரிக்க அரசு, பட்டினியால் வாடும் ஆப்கான் குழந்தைகளுக்கு ஒவ்வொரு அமெரிக்க குழந்தையும் ஒரு டாலர் தர வேண்டும் என்ற இயக்கத்தை அதிபர் புஷ்ஷை வைத்துத் தொடங்கியிருக்கின்றது. ஆனால் அரபிக் கடலிலிருந்து ஏவப்படும் தொமஹாக் ஏவுகணை ஒன்றின் விலை 50 கோடி ரூபாய்.

ஆப்கானில் கொன்ற குழந்தைகளின் புகைப்படங்கள் தற்போது வெளிவரத் துவங்கியிருக்கின்றன. இருப்பினும் அமெரிக்க அரசின் போர்க்காலத் துன்பங்களைப் புரிந்து கொண்டு பொறுப்புணர்வோடு செயல்படும் அமெரிக்கச் செய்தி ஊடகங்கள் இத்தகைய படங்களை வெளியிடுவதில்லை. அமெரிக்கா உருவாக்கியிருக்கும் மனிதாபிமானத்தின் இலட்சணம் இத்தகையது!

●

## உலக பயங்கரவாதியின் குகைக்குள்ளே:

# கார்கள் : ஆடம்பரமா அவலமா ?



நியூயார்க், வாஷிங்டன் மீதான விமானத் தாக்குதலை அடுத்து ஒருசில நாட்கள் வானமே வெறிச்சோடிக் கிடந்தது. ''இத்தகைய காட்சியை என் வாழ்நாளிலேயே பார்த்ததில்லை'' என்று வருந்துகிறார் ஒரு விமானப்படை விமான ஓட்டி.

அதே போன்று அமெரிக்கப் பாலங்கள் தீவிரவாதிகளால் தாக்கப்படும் என்ற உளவுத்துறை தகவலையடுத்து அந்தப் பாலங்களில் கார்கள் எதுவும் ஓடவில்லை. இதுவும் அமெரிக்காவில் காணற்கரிய காட்சிதான். வேறு எந்தத் துன்பத்தையும் விட கார்களில்லாத வாழ்க்கை என்பது அமெரிக்கர்களை கதிகலங்க வைக்கும் ஒரு விசயமாகும்.

ஒரு தேசமே சக்கரங்களின் மீது ஓடிக் கொண்டிருக்கிறது எனுமளவுக்கு அங்கே கார்கள் அதிகம். மொத்த எண்ணிக்கையும் சில கோடிகளைத் தாண்டும். காரிலிருந்தபடியே வங்கி, தபால், உணவகம், திரையரங்கு, சிறப்பங்காடி வேலைகளை முடிக்கலாம்; ஏன் இடுகாட்டிற்குச் சென்று காருக்குள்ளேயே இருந்தபடி நினைவஞ்சலி கூட செலுத்த முடியும்.

வாழ்க்கையின் தவிர்க்க முடியாத அங்கமாகிவிட்ட கார் என்ற எந்திரம் சமூகத்தோடு கொண்டுள்ள உறவும் அது தோற்றுவித்திருக்கும் பிரச்சினைகளும் எண்ணிக்கையில் அதிகம்.


படிப்பகம்

www.padippakam.com





இந்தியப் பள்ளி ஒன்றில் அமெரிக்க சோகத்தை தமது வீட்டுப் பாடத்தில் வடித்துக் காட்டும் மாணவர்கள்.
இந்தியாவில் தயாராகும் அமெரிக்கக் குஞ்சுகள்!

○●○

அமெரிக்கப் பள்ளி ஒன்றில் மாணவர் இருவர் 14 பேரைச் சுட்டுக் கொன்றனர். அதுகுறித்து என்ன படிப்பனை என்று கேட்கிறது அமெரிக்காவின் நியூஸ் வீக் பத்திரிகை.




அமெரிக்காவின் அடிப்படைக் கட்டுமான வசதிகளில் முக்கியமானது சாலை. சீறிப்பாயும் வண்டிகளுக்கேற்ற தரத்தில் நால்வழிப் பாதையாக நீளும் சாலைகள் தேசமெங்கும் நரம்பு மண்டலத்தை போல வியாபித்திருக்கின்றன.

சில லட்சம் மக்கள் வாழும் நகரங்கள் கூட, நமது மாவட்டம் ஒன்றின் பரப்பளவைக் கொண்டிருக்கும். அதன்படி ஒரு அமெரிக்கனின் இயல்பான நகர வாழ்க்கை காரின்றி இயங்க முடியாது. மேலும் அவனது தினசரி வாழ்வின் கணிசமான நேரத்தைக் காருக்குள்ளேயே முடக்கவும் வேண்டியிருக்கிறது. அவ்வகையில் ஒரு எந்திரம் மனித வாழ்வைக் கட்டுப்படுத்துகிறது. அதனால் ஒரு மனிதனுக்குத் தேவையான அண்டை அயலார், உற்றார் உறவினர், நண்பர்கள் போன்ற உறவையெல்லாம் எளிதில் அணுக முடியாத படி கார் கட்டுப்படுத்துகின்றது.

ஒரு சாதாரண வேலை பார்க்கும் நபர் கூட சராசரியாக 50 கி.மீட்டர்கள் காரில் தான் அலுவலகம் செல்ல வேண்டும். நம்மூரில் கூரியர் வேலை கிடைக்க வேண்டுமானால் சைக்கிள் வைத்திருக்க வேண்டும். அங்கோ எல்லா வேலைகளுக்கும் கார் வைத்திருக்க வேண்டும்.

ஒரு வேளை கார் இல்லையென்றால்...? வேலையும் கிடையாது! காரணம் அமெரிக்காவில் பொதுப் போக்குவரத்து சேவை எதுவும் கிடையாது. ஒவ்வொரு நகரிலும் ஓடும் நகரப் பேருந்துகளை விரல் விட்டு எண்ணி விடலாம்.

இப்படி கார்கள் வாழ்வோடு பிணைக்கப்பட்டது தற்செயலானதல்ல. அமெரிக்காவின் எண்ணெய் முதலாளிகளும், கார் தயாரிக்கும் நிறுவனங்களும் வாழ்க்கையை அப்படி மாற்றிவிட்டனர். வாழ்க்கையை எந்திர கதியாக்கியும், சக மனிதர்களோடு அன்னியப்படுத்தியும் அக்டோபஸ்ஸைப் போல கவ்வியிருக்கும் கார்களின் பிரச்சனை இத்துடன் முடிந்துவிடவில்லை.

உலகிலேயே எண்ணெயை அதிகமாக உற்பத்தி செய்து, இறக்குமதி செய்து, நுகரவும் கூடிய அமெரிக்கா, அதே அளவு சுற்றுச்சூழல் மாசுபட்டு மூச்சுத் திணறும் முதல் நாடாகவும் இருக்கிறது.

அழகான கடற்கரையோரங்களில், மாசற்ற சூழ்நிலையில், ஆடம்பர மாளிகைகளில் தலைமையகம் வைத்து வாழ்கின்ற பன்னாட்டு நிறுவன மேட்டுக்குடியினருக்கு பிரச்சினை ஏதுமில்லை. ஆனால் நகரங்களில் கார்களோடும், அவற்றின் கரியமில வாயு புகை மண்டலத்திலும் வாழ்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் பெரும்பான்மை அமெரிக்க மக்களுக்கு பிரச்சினைகள் ஏராளமுண்டு.

ரத்த அழுத்தம், இதய - நுரையீரல் நோய்கள் மற்றும் மன அழுத்தம் காரணமாக வரும் உளவியல் நோய்களும் அங்கே சகஜம். அவ்வகையில் மருந்து நிறுவனங்களுக்கு ஏராளம் இலாபமுண்டு. எனவே நாம் நினைப்பது போல, கார் என்பது அமெரிக்க மக்களுடைய அந்தஸ்தின் சின்னமல்ல, விட்டு விலக முடியாத ஒரு அவலம்.

உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கட்டிடங்கள் தரைமட்டமானபின் மன்ஹாட்டன் பகுதியில் சாம்பல் புழுதி படிந்த மக்கள் அச்சத்துடன் ஓடிக் கொண்டிருந்தார்கள். அன்று மட்டுமல்ல. ஆப்கான் போருக்கான காரணங்களிலொன்று ''அமெரிக்கக் கார்களின் எண்ணெய்த்தாகம்'' என்ற உண்மைகூடத் தெரியாமல் இன்னும் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ●

www.padippakam.com



# உலக பயங்கரவாதியின் குகைக்குள்ளே:

# இளமையில் பொருளீட்டு



செப்டம்பர் தாக்குதலுக்கு பிறகு 'உலகமே' அமெரிக்க துன்பத்தை தனதாக்கி வருந்துகிறது. இந்தியாவின் ஆங்கிலப் பள்ளிகளில் படிக்கும் மேட்டுக்குடி சிறுவர்களும் கடந்த 2 மாதங்களாக அப்படித்தான் வருந்துகின்றனர். பள்ளி செய்திப்பலகை, செய்முறைப் பயிற்சி, ஓவியம் என அனைத்து வடிவங்களிலும் செப்.11 நிகழ்ச்சிக்கு நினைவஞ்சலி.

ஒரு மாணவன் ஆப்கான் நாட்டையே அடையாளம் இல்லாமல் அழிக்க வேண்டும் என்கிறான். இங்கிருக்கும் மேட்டுக்குடி மாணவர்கள் கொண்டாடும் அமெரிக்காவும், அதன் மாணவர்களும் உண்மையில் அதற்குத் தகுதியானவர்கள்தானா?

முதலில் ஒரு சராசரி மூன்றாம் உலக நாட்டு மாணவனை விட பல மடங்கு வசதிகள் வாய்ப்புகள் கொண்டிருக்கும் அமெரிக்க மாணவனின் வாழ்க்கையும் சிந்தனையும் ஆரோக்கியமாக இல்லை. காரணம் சமூகத்துடன் தனிமைப்படுவதிலிருந்தே இம்மாணவர்களது இளமைப்பருவம் முளைவிட ஆரம்பிக்கிறது.

நமது 'பேன்சி ஸ்டோர்'களில் விற்கப்படும் (Trade) **வணிகம்** எனப்படும் சிறுவர்களுக்கான விளையாட்டைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். வங்கி, அரசு, வரி, ஊர் வாங்குவது, வாடகைக்கு விடுவது, இறுதியில் யார் அதிகம் பணம் சேர்க்கிறார்கள் என்று முதலாளியாகும் கனவை சிறு வயதிலேயே உருவாக்கும் இவ்விளையாட்டின் தாயகம் அமெரிக்காதான்.

நம்மிடம் விளையாட்டாக இருக்கும் விசயம் அங்கே செயலில் இருக்கிறது. நமது சிறுவர் பத்திரிகைகளில் படம் வரைவது, நீதிக் கட்டுரைகள் எழுதுவது, பாட்டுப் பாடுவது, நடனம் போன்றவைகளைத்தான் மாணவர்களின் பங்களிப்பாக பார்க்கிறோம். அமெரிக்காவிலோ சிறு வயதிலேயே முதலாளியானவர்களின் கதை இடம் பெறுகிறது. 14,15 வயதில் கோழி விற்பனை, சிறு நிறுவனங்களுக்கு கணினி விற்பனை, சில்லறைத் துணி விற்பனை என்று வருடத்தில் பல இலட்சம் ரூபாய் புழங்கும் தொழில்களைச் செய்யும் மாணவர்களே முன்னோடிகளாகப் போற்றப்படுகிறார்கள்.

12 வயதில் அப்பாவிடம் வாங்கிய 100 டாலரை வைத்து பங்குச் சந்தைச் சூதாட்டத்தில் ஈடுபட்டு மிகப் பெரும் நிதிச் சந்தை முதலாளியானவர்கள், 50 ஊழியர்களை வேலைக்கு வைத்திருக்கும் 17 வயது முதலாளி. இவர்களது எதிர்காலத் திட்டங்கள் என்று 'சிறார் முதலாளிகளின்' (Kid Capitalist) சாதனைகள் அங்கே சாதாரணம்.

அமெரிக்காவில் எல்லா மாணவர்களும் முதலாளியாகி விடுவதில்லை - அது சாத்தியமும் இல்லை. அது ஒரு வாழ்க்கை முறையாக, சிந்தனையோட்டமாக இருக்கிறது என்பதே முக்கியம். பெற்றோர்களும் தமது சிறார்கள் டாலரைச் சம்பாதிக்கும் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதையே விரும்புகிறார்கள். அமெரிக்க மாணவர்கள் அனைவரும் படிக்கும் காலத்திலேயே பெட்ரோல் பங்க், உணவகம், விற்பனையகம் என்று பகுதிநேர வேலைகளைச் செய்கிறார்கள். இதில் பணக்கார மாணவர்களும் அடக்கம்.

இந்தப் பகுதி நேர வேலை இளவயதிலேயே டாலரை ஈட்டும் தகுதியை எட்டுகிறார்களா என்பதற்கான அளவுகோலாக இருக்கிறது. எதிர்காலப் பொருளாதார வாழ்க்கை குறித்துத் திட்டமிடுவதும், வாழ்க்கையை பணத்தின் மதிப்பில் கணக்கிடுவதும், அதற்கேற்ற பண்புகள் - நடத்தைகள் உருவாவதும் இள வயதிலேயே நடந்தேறுகின்றன.

அமெரிக்காவின் பில்கேட்ஸ் உள்ளிட்ட முதலாளிகள் கல்லூரிப் படிப்பைக் கூட முடித்தவர்களல்ல. ஆனால் கனவும் கொண்டு அதற்கேற்ற பயிற்சியையும் சிறுவயதிலேயே முடித்தவர்கள் என்பதே இவர்களுக்குரிய சிறப்பு. 'இளமையில் கல் என்பதைவிட இளமையில் பொருளீட்டு' என்றே இளைய தலைமுறையினர் உற்சாகப் படுத்தப்படுகின்றனர்.

வாழ்வின் ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு நொடியிலும், முடிவின்றிச் செல்லும் ஆடம்பர நுகர் பொருள் வசதியை அடைந்தே தீரவேண்டும் என்ற வெறி அந்த உற்சாகத்தைக் கட்டாயமாக்குகிறது.

பொருளீட்டும் கனவும் பயிற்சியும் நடைமுறையில் தனி மனிதவாதத்தையும், பிற மனிதர்களோடு முரண்படுவதையும் தோற்றுவிக்கிறது. வேறு எந்த நாட்டையும்விட அமெரிக்க பள்ளி மாணவரிடையே நிலவும் வன்முறையும், துப்பாக்கி கலாச்சாரமும் அதிலிருந்தே பிதுங்குகின்றது.

வசதி படைத்த வெள்ளையின மாணவர்களிடம் மேற்கண்ட நடைமுறையிலிருந்து வன்முறைப் பண்பு தோன்றுகிறதென்றால், கருப்பின மாணவர்களின் வன்முறை வேறு ஒரு பின்புலத்தைக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் நகர்ப்புறச் சேரிகளில் முடக்கப்பட்டிருக்கும் கருப்பின மாணவர்களில் ஒரு சிலர் பொலிகாளைகளைப் போல முட்டி மோதினால் விளையாட்டுத்துறையில் முன்னுக்கு வரலாம்; வசதியும் பெறலாம். இங்கும் அனைவரும் காளைகளாகி விட முடியாது என்பதால் பெரும்பான்மை சிறார்கள் கல்வியின்றி அடிப்படை வசதிகளின்றி, நிலையான வாழ்க்கை மறுக்கப்பட்டு உதிரிகளாக வாழ்கின்றனர். அவ்வகையில் வறுமை - நிறவெறி ஒடுக்குமுறையினால் வன்முறைப் பண்பு இவர்களிடமும் தோன்றுகிறது.

உலக வர்த்தக மையக் கட்டிடத்திலும், பெண்டகன் இராணுத் தலைமையகத்திலும் தமது அன்பிற்குரிய பெற்றோர்களை இழந்து நிற்கும் குழந்தைகளைக் கண்டு கவலைப்படுகிறது அமெரிக்க சமூகம். ஆயினும் பெற்றோரும், உற்றாரும் சூழ வாழ்ந்து கொண்டிருக்கும் பெரும்பான்மை மாணவ சமூகம், முரண்படும் தனித் தீவுகளில் வாழ்வது குறித்து அமெரிக்கா அறிந்ததுமில்லை; வருந்தியதுமில்லை. ●

www.padippakam.com



# உலக பயங்கரவாதியின் குகைக்குள்ளே:

# ‘வலிமையை வழிபடு’ விளையாட்டின் அரசியல்



மைக் டைசன் விடும் ஒவ்வொரு குத்துக்கும் பல கோடி ரூபாய் கூலியுண்டு! தொழிற்முறை குத்துச் சண்டையில் விளையாட்டுணர்வின் மரணம்!

●

‘முழுமையான போர்’ என்று பெருமையாக அழைக்கப்படும் அமெரிக்கக் கால்பந்து. இளைஞர்களின் மானப்பிரச்சினையாகக் கருதப்படும் மரண விளையாட்டு!



அமெரிக்கா ஆப்கானைத் தாக்குவதற்கு முந்தைய ஒரு மாதத்தில் அமெரிக்க இராணுவத்தின் வலிமையை விளக்கும் வகையில் விமானங்கள், கப்பல்கள், அதிரடிப் படைகள், ஏவுகணைகள், பற்றிய செய்திகள் தொடர்ந்து வெளிவந்தன. ஆனால் இவை எதுவுமின்றி சில பேனாக் கத்திகளின் மூலம்தான் அமெரிக்கா தாக்கப்பட்டது. இருப்பினும் அமெரிக்கர்களுக்கு தங்களது இராணுவ, பொருளாதார, அரசியல் வலிமை பற்றிய கர்வம் அதிகம்.

அதனால்தான் சமூகப் பிரச்சினைகள் அதிகமிருந்தாலும், சிந்தனையில் வறுமையிருந்தாலும் 'வல்லவனுக்கே வாழ்வு' என்று உடல் பலத்தையும் ஆயுத பலத்தையும் வழிபடும் போக்கு நிலவுகிறது. இராணுவ பலத்தை வைத்து அயலுறவு கொள்ளும் அமெரிக்க அரசிடமிருந்தும், ஆடம்பர நுகர்பொருள் வாழ்விற்காக பொருளீட்டும் சமூக வாழ்க்கையிலிருந்தும் பலம் பற்றிய கருத்து வருகிறது.

ஆதலால் அங்கே உடலுக்கு வலிமை சேர்க்க பயிற்சியளிக்கும் தொழிலும் கொடிகட்டிப் பறக்கிறது. ஏராளமான கருவிகள், பயிற்சி முகாம்கள், உடைகள், நூல்கள், வானொளி - வீடியோ நிகழ்ச்சிகள் என்று உடற்பயிற்சித் தொழில் நீளுகிறது.

பொதுவில் வேறு எந்த நாட்டையும் விட அமெரிக்காவில் விளையாட்டுப் போட்டிகளும், ரசிகர்களும் அதிகம்.

அதிபர் தேர்தலில் போட்டியிடுபவர்கள் கூட சிறு வயதில் விளையாட்டு வீரர்களாய் இருந்தோமென காட்டிக் கொள்வர். இராணுவ அதிகாரிகளாக இருந்தோமெனப் பீற்றிக் கொள்வர்.

இங்கே திரைப்பட நட்சத்திரங்கள் பெற்றிருக்கும் செல்வம், புகழை விட அமெரிக்க விளையாட்டு நட்சத்திரங்களின் அளவு பல மடங்கு அதிகம். மேலும் தொழில் முறையற்ற - பகுதி நேரமாக இருக்கும் வீரர்கள் கூட திறமை காரணமாக தொழில்முறை வீரர்களாக முதலாளிகளால் மாற்றப்படுவர். அதாவது அந்தத் திறமை பெரும் இலாபமீட்டும் மனித முதலீடாக மாற்றப்படும்.

‘அமெரிக்கக் கால்பந்து’ எனப்படும் விளையாட்டு அங்கே மிகவும் பிரபலம். ரக்பியை விட வன்முறை அதிகம் கொண்ட விதிகளும், தலை - மார்பு - கால் கவசங்கள் அணிந்து ஆடப்படும் இவ்விளையாட்டை **‘முழுமையான போர்’** என்றே அழைக்கிறார்கள். உடலின் வலிமையை அடைவதற்கான மானப்பிரச்சினையாகக் கருதப்படும் இவ்விளையாட்டில் ஆண்டுதோறும் பலர் மரணம் அடைகின்றனர்; நூற்றுக்கணக்கில் காயமும் அடைகின்றனர்.

வாழ்க்கைக்கு உற்சாகமளித்து உடற் திறனையும், உள்ளத்தின் வலிமையையும் மேம்படுத்தும் விளையாட்டு என்பது இரக்கமற்ற போராகவும், அபரிமிதமான இலாபம் தரும் தொழிலாகவும் மாற்றப்பட்டு விட்டது. அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டு நிறுவனங்களால் நடத்தப்படும் ‘அமெச்சூர்’ குத்துச் சண்டை தலா 3 நிமிடம் வீதம் 3 சுற்றுக்கள் மட்டும் நடக்கும். குத்துக்களின் தொடு வலிமை புள்ளிகளாக மதிப்பிடப்பட்டு வெற்றி தீர்மானிக்கப்படும்.



படிப்பகம்

www.padippakam.com



அமெரிக்காவில்தான் இந்த 'அமெச்சூர்' முறையை ஒழித்து விட்டு கடுமையான விதிகளுடன் நடத்தப்படும் தொழில்முறை குத்துச் சண்டை பிரபலமாக மதிக்கப்படுகிறது. அதே போல W.W.F., T.C.W. போன்ற மல்யுத்தப் போட்டிகளும் (முன்னரே தீர்மானிக்கப் பட்டு நடத்தப்படும் போலிச் சண்டைகள்) கொடூரமான விதிமுறை களைக் கொண்டவை. அதையே பார்ப்பவரின் ரசனையாகவும் மாற்றியிருக்கின்றனர்.

பண்டைய ரோமாபுரி அரசில் அடிமைகள் ஒருவரையொருவர் அடித்துக் கொல்லும் மல்யுத்தங்களை ஆரவாரத்துடன் ரசிப்பார்கள். அமெரிக்கர்களும் ரசிக்கிறார்கள். இத்தகைய போட்டிகளை ரசிக்கும் மக்களும் - குறிப்பாக இளைஞர்கள் - மெல்ல மெல்ல மனித இரக்க மதிப்பீடுகளை தங்களையறியாமலேயே இழந்து வரு கிறார்கள்.

இது போல கூடைப்பந்து, 'பேஸ் பால்' போன்ற விளையாட்டுக் களும் அங்கே பிரபலம். இப்படி பிரபலமான விளையாட்டுகளின் நாடு தழுவிய போட்டிகள் அனைத்தும் பல்லாயிரம் கோடி ருபாயை ஈட்டித் தருகின்றன. பிரபலமான விளையாட்டுக் குழுக்களை அமைத்து நடத்துவது மாபெரும் முதலாளித்துவத் தொழிலாக நடந்து வருகிறது.

இந்தக் குழுக்களையும், வீரர்களையும் விலைபேசுவது, ஒப்பந்தம் போடுவது, ரத்து செய்வது, சதிகள் செய்வது, தரகர் களைப் பயன்படுத்துவது என பங்குச் சந்தையின் 'ஒழுக்கங்கள்' இங்கே சாதாரணம். எந்த அணி வெற்றிபெறும் என பணம் கட்டி சட்டபூர்வமாக நடத்தப்படும் சூதாட்டத் தொழிலும் கொடிகட்டிப் பறக்கிறது. நாமறிந்த கிரிக்கெட் ஊழலின் தொகையை இங்கே ஒப்பிட முடியாத அளவுக்கு சூதாட்ட பணத்தின் மதிப்பு பல மடங்கு அதிகம்.

உடல் வலிமையை வழிபடும் போக்கும், பிரம்மாண்டமான விளையாட்டுத் தொழிலும் இத்தனை முறை கேடுகளுடன் இயங் கும்போது நிழல் உலகத் தொடர்பு இல்லாமல் போகுமா? ஆம். விளையாட்டுத் தொழிலையும், அணிகளையும், சூதாட்டத்தையும் கட்டுப்படுத்துவது அமெரிக்காவின் பிரபல மாஃபியா கும்பல் கள்தான். போதைப் பொருள் கடத்தலினால் வரும் அளப்பரிய கறுப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றவும், உடனுக்குடன் கொழுத்த இலாபம் பெறவும் மாஃபியாக்கள் நம்புவது விளை யாட்டுத் தொழிலைத்தான்.

இப்படி சமூக இயக்கத்தை சுறுசுறுப்பாக்க வல்ல விளையாட்டு இத்தனை குற்றப்பிரிவுகளோடு சீரழிந்ததினாலோ என்னவோ, சரா சரி அமெரிக்கனின் உடற்திறன் அப்படி ஒன்றும் மேம்பட்டதாக இல்லை. அமெரிக்க இராணுவத்திற்கு விண்ணப்பம் செய்பவர் களில் கால்வாசிப் பேர் குறைந்தபட்ச உடற் தகுதி கூட இல்லாமல் நிராகரிக்கப்படுவது மேற்கண்ட விசயத்தை உறுதி செய்கிறது.

ஆக, மைதானத்தில் அமர்ந்து கொண்டு, கோக் குடித்து, சிப்ஸ் கடித்து ஆரவாரம் செய்வது என்று ஏதோ பொழுது போவதைத் தவிர மக்களுக்கு பயன் ஏதுமில்லை. நுகர்பொருளை நுகரவும் செரிக்கவும் பயன்படும் விளையாட்டு, பொய்யான உணர்ச்சியில் மக்களை மூழ்கடித்து, அவர்களின் வருமானத்தில் கணிசமான அளவைக் கவருவது மட்டும் விளையாட்டாக இல்லாமல் போர் போல நடைபெறுகிறது.

செப்டம்பர் மூத தாக்குதலையொட்டி என்.பி.ஏ. (N.B.A.) எனப் படும் தேசிய கூடைப்பந்து சங்கத்தின் போட்டிகள் அதன் வர லாற்றில் முதன்முறையாக ஒத்தி வைக்கப்பட்டது குறித்து அம்முத லாளிகள் பெருமைப்படுகின்றனர். ஆயினும் வீரர்களையும், அணி களையும் விலைக்கு வாங்கும் இவர்களுடைய இரகசிய உலக பேரங்களை எவராலும் ஒத்தி வைக்கவோ, இரத்து செய்யவோ முடி யாது எனுமளவுக்கு அழுகி நாறுகிறது.

# உலக பயங்கரவாதியின் குகைக்குள்ளே: தலை சுற்றவைக்கும் போதை அரசியல் வியாபாரம்

அமெரிக்காவைக் குறித்த நமது இணையக் கட்டுரையான 'சாத்தானின் பேரரசு - அப்பாவி குடிமக்கள்' எனும் கட்டுரைக்கு கருத்து வகையில் ஆதரவளித்த ஒரு இங்கிலாந்து இளைஞர், இதை யெல்லாம் மாற்ற முடியாத விரக்தியால், ''என்ன செய்வது... கஞ்சா அடிக்கப் போகிறேன், சாத்தானின் பேரரசு, சிக்கிக் கொண்ட குடிமகன்'' என்று பதில் அனுப்பியிருந்தார்.

உண்மையில் சமூகப் பாதுகாப்பற்ற அமெரிக்க சமூகத்தில் ஒரு சாதாரண நபரிடம் சமூகத்துடன் பொருந்தி வாழ முடியாதது குறித்த பிரச்சினைதான் முக்கியமானது. இந்த பொருந்தா முரண்பாட்டின் அவலத்தை நிறைவு செய்கிறது அங்கே புழங்கும் விதவிதமான போதைப் பொருட்கள். ஏறத்தாழ 20 சதவீதம் பேர் இப்பழக்கத் திற்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள் எனும் உண்மை அதை உறுதிப் படுத்துகிறது.

வருடத்தில் உலகெங்கும் நடைபெறும் எண்ணெய் வர்த்தகத் திற்கு இணையாக சுமார் 25 லட்சம் கோடி ருபாய் புழங்கும் ஒரே சர்வதேசத் தொழில் போதைப் பொருள் கடத்தல் மட்டும்தான். நம்மூர் கள்ளச் சாராயத்தைப் போல உள்ளூர் அளவில் மிகச் சிறிய உற்பத்தியையும் - பாதிப்பையும் கொண்டிருந்த போதைப் பொருள் வியாபாரத்தை ஒரு 50 ஆண்டுகளுக்குள் மாபெரும் சர்வதேசத் தொழிலாக மாற்றியமைத்தது வேறு யாருமல்ல, அமெரிக்க அரசுதான்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஜெர்மனியின் நாஜிக் கட்சியின் இராணுவ அதிகாரிகள் பலருக்கு அமெரிக்கா அடைக் கலம் கொடுத்தது. இவர்களை மொத்தமாக தென் அமெரிக்காவிற்கு கொண்டு சென்று சி.ஐ.ஏ.வின் சித்திரவதை பயிற்சிக் கூடங்களை நடத்தவும், லத்தீன் அமெரிக்க நாடுகளில் தனது பொம்மை அரசு களை உருவாக்கவும் பயன்படுத்தியது.

இராணுவ - அரசியல் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்ட ஜெர்மானிய அதிகாரிகள் முதலில் இன - குழு - பிராந்திய வாரியாக யுத்த பிரபுக்களை உருவாக்கினர். அவர்களது இராணுவ செலவுக ளுக்காக போதைப் பொருள் பயிரிட்டு கடத்தலும் செய்ய வைத்தனர். பணம் செலவில்லாமலேயே மத்திய அமெரிக்க நாடு களை ஆக்கிரமிக்க அமெரிக்காவிற்கு வழி பிறந்தது. அதேபோன்று ஆப்கானிலிருந்து ரசியாவை விரட்டுவதற்கு முஜாஹிதீன்களைப் போதைப் பொருள் பயிரிட ஐ.எஸ்.ஐ. மூலமாக ஊக்குவித்தது சி.ஐ.ஏ. இங்கும், பர்மாவிலும் இராணுவ - யுத்த பிரபுக்களே போதைப் பொருள் தொழிலை நடத்துகின்றனர்.

உலகின் இந்த மூன்று பகுதிகளிலும் போதைப் பொருள் பயி ரிடும் விவசாயிகளை வறுமை அவ்வாறு நிர்பந்திக்கிறது. போதைப் பயிர் விவசாயத்தினால் உயிர் வாழும் அளவுக்கு மேல் வருமானம் எதுவும் இவர்களுக்குக் கிடைத்து விடுவதில்லை. இந்த நாடுகளின் போதைப் பயிர்களை சிறுதொழிற்சாலைகளில் பல்வேறு போதைப் பொருட்களாக மாற்றி உலகெங்கும் வழித்தடங்களை ஏற்படுத்தி

படிப்பகம்

www.padippakam.com





எம்.டி.வி.யின் அழகியலை போதைப் பொருளின்றி ரசிப்பது சிரமம்!

**அர்கான்சாஸ் மாநிலப் பள்ளி ஒன்றில் 4 மாணவர்களைச் சுட்டுக் கொன்ற மாணவனின் முளையிலேயே தெரிகிறது வளரும் களை!**



முக்கியமாக மேற்கு நாடுகளிலும் அமெரிக்காவிலும் விற்பனை செய்யும் மாஃபியா கும்பல்களே பெரும் ஆதாயமடைகின்றனர்.

சி.ஐ.ஏ. உதவியுடன் வளர்ந்து விட்ட இக்கும்பல்களோடு பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. வங்கிகளில் முதலீடு செய்யவும், கறுப்பை வெள்ளையாக மாற்றவும், புதிய தொழில்களில் முதலீடு செய்யவும் இந்தத் தொடர்பு பயன்படுகிறது. ஆண்டுக்கு 25 லட்சம் கோடி ரூபாய் இத்தகைய தொடர்புகளின்றி எப்படிப் புரள முடியும்?

சி.ஐ.ஏ. உருவாக்கிய போதைப் பயங்கரத்தை உள்நாட்டுப் புலனாய்வுத் துறையான எப்.பி.ஐ. ஒழிக்கப் போராடுகிறது! அது நமது கள்ளச்சாராய வியாபாரிகள் - போலீசின் நாடகத்தைப் போன்றது. உள்நாட்டில் போதை பொருள் பழக்கத்தை ஒழிக்க கடும் சட்டங்களையும், சகல அதிகாரங்களையும் கொண்ட அதிரடிப்படையையும் வைத்திருக்கும் அமெரிக்க அரசு, நினைத்திருந்தால் போதைப் பொருள் கும்பல்களை சுவடே இல்லாமல் அழிக்க முடியும்.

மாறாக, தனது ஆக்கிரமிப்புச் செலவுக்கு அமெரிக்க மக்களிடமிருந்து மறைமுகமாக வசூலிக்கவும் பண்பாட்டு ரீதியாக தனது மக்களை வரம்புக்குட்பட்டுச் சீரழிப்பதற்காகவும் போதை வியாபாரத்தை அனுமதித்து வருகிறது. மறுபுறம் ஜனநாயக சக்திகளை ஒடுக்கி பாசிச அடக்குமுறையை ஏவ போதை தடுப்பு சட்டத்தைப் பயன்படுத்தியும் வருகிறது. 60-களின் வியட்நாம் போர் எதிர்ப்பு இயக்கத்தை ஹிப்பிகளின் கஞ்சா இயக்கமாகச் சீரழித்தது இதற்கோர் உதாரணம்.

அடியாட்களாவும், சில்லறை விற்பனையாளர்களாகவும் கறுப்பினச் சேரிகளிலிருந்து இளைஞர்களும் சிறுவர்களும் திரட்டப்படுகின்றனர். லத்தீன் அமெரிக்க விவசாயிகளைப் போல இக்கறுப்பின இளைஞர்களின் வாழவழியற்ற வறுமை இதைச் செய்யத் தூண்டுகிறது. சிறுவர்களுக்கான தண்டனை சீர்திருத்தப்பள்ளி என்ற அளவோடு நின்று விடுவதால், 16 வயதுக்குக் குறைந்த கறுப்பினச் சிறுவர்களையே சில்லறை விற்பனைக்குப் பயன்படுத்துகின்றனர். இதனால் பெரும்பான்மை கறுப்பின இளைய சமூகம் ஏதோ ஒரு வகையில் வன்முறையின் பிடியிலும், சிறை வாழ்க்கையிலும் கழிக்கிறது.

போதைப் பொருள் தொடர்பான குற்றங்கள், வழக்குகளில் 75 சதவீதம் பேர் கறுப்பின இளைஞர்களாக இருக்கின்றனர். ஆனால் போதைப் பொருள் பழக்கத்தில் 13 சதவீதம் மட்டும் கறுப்பர்களாகவும், மீதிப் பேர் வெள்ளையர்களாகவும் இருக்கின்றனர்.

இப்படி விற்பதிலும், நுகருவதிலும் முழு அமெரிக்கச் சமூகமும் சிக்கியிருக்கிறது. அமெரிக்க இராணுவத்திலும் 15 சதவீதம் பேர் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள். அணு-வேதியியல் உயிரியல் ஆயுதங்களைக் கையாளுகின்ற உலகின் பிரம்மாண்ட இராணுவத்தில் கஞ்சா அடிக்கின்ற நபர்கள் இருக்கிறார்களென்றால் இதைவிட அபாயம் வேறு எது?

வார இறுதிக் கேளிக்கை நிகழ்ச்சிகளில், பள்ளி - கல்வி வளாகங்களில், நடன - செக்ஸ் - மது விடுதிகளில், மன அழுத்தத்தைக் களைந்து கொள்வதில், எல்லையற்ற இன்பம் தேடும் வேட்கையில், இன்பத்தை எவ்விலை கொடுத்தும் வாங்கும் பண வசதியில், நரம்பை முறுக்கேற்றும் தீவிர ராக் இசைக்குத் தயாராகும் விதத்தில், ஐம்புலன்களின் சமநிலை குலைக்கும் எம்.டி.வியின் அழகியலுக்குப் பழகும் விதத்தில் - போதைப் பொருள் நுகரப்படுகிறது.

மறுபுறம் தேவாலயங்களிலும், போதை மீட்பு மருத்துவமனைகளிலும், சமூக நலக் கூடங்களிலும், அதிகார வர்க்கத்தின் பேட்டிகளிலும் சாத்தான்கள் நீதி ஓதுகின்றன; பன்னாட்டு நிறுவனங்களும் சி.ஐ.ஏ.வும் நமட்டுச் சிரிப்பு சிரிக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com





# உலக பயங்கரவாதியின் குகைக்குள்ளே: துப்பாக்கியின் ஜனநாயகம்

செப்.11 தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 7000. சென்ற ஆண்டில் மட்டும் அமெரிக்காவில் கொலை செய்யப் பட்டோரின் எண்ணிக்கையோ 12,500. இருபதாம் நூற்றாண்டின் நூறு ஆண்டுகளில் அமெரிக்காவில் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டோரின் கணக்கு 10 இலட்சத்தைத் தாண்டு கிறது. அமெரிக்கா தனது ஆக்கிரமிப்புப் போர்களில் இழந்த வீரர் களின் எண்ணிக்கையை விட இது பல நூறு மடங்கு அதிகம்.

இந்தக் கொலைகள் ஏதோ உள்நாட்டுப் போரினாலோ, அரசு அடக்கு முறையினாலோ, நடக்கவில்லை; சாதாரண சமூகக் குற்றங் களின் விளைவாகவே நடந்திருக்கிறது. மாபெரும் சர்வாதிகார நாடு களில் கூட நடந்தேறாத இக்கொலைகள் 'மாபெரும் ஜனநாயக' நாடான அமெரிக்காவில் நடப்பதற்குக் காரணம் என்ன?

எப்படியாவது, பொருளீட்டினால்தான் வாழ்க்கையின் இலக்கை அடைய முடியும் என்பது எங்ஙனம் ஒரு சமூகப் பண்பாக உருவாக்கப்பட்டிருக்கிறதோ, அதுபோலவே பாதுகாப்பின்மை பற்றிய அச்சமும், அதைத் தொடர்ந்து துப்பாக்கி அவசியம் என்ற மாயையும், மக்களின் மனதில் ஆழமாகப் பதிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க அரசை இயக்குகின்ற செல்வாக்குக் குழுக்களில் முக்கி யமான குழுவான ஆயுத - தளவாட முதலாளிகள்தான் இந்தக் கருத்தைக் கட்டமைத்த சூத்திரதாரிகள்.

ஆப்கானில் அமெரிக்கா போடும் பொட்டலங்களைத் தேடி ஓடும் மக்கள் கண்ணி வெடிகளில் சிக்கிச் சிதறுகிறார்கள். புதைக்கப் பட்ட கண்ணி வெடிகள் தாலிபான் தயாரித்தவையல்ல, அமெரிக்கா தயாரித்தவைதான். உலகில் அதிகமாக கண்ணி வெடிகளை உற்பத்தி செய்வதும், ஏற்றுமதி செய்வதும், கண்ணி வெடிக்கெதி ரான தடை ஒப்பந்தத்தில் இன்று வரையிலும் கையெழுத்திட மறுப்பதும் அமெரிக்காதான். காரணம் ஆயுதத் தளவாட ஏற்றும தியில் கிடைக்கும் பணம்.

ஆப்கான், ஆப்பிரிக்க மக்களுக்குக் கண்ணி வெடி; அமெரிக்க மக்களுக்கு துப்பாக்கித் தோட்டா. கார், டி.வி. இதர அத்தியாவசிய, ஆடம்பர நுகர்பொருட்கள் போல துப்பாக்கியும் ஒரு வீட்டிற்கு அவ சியம் என்ற நிலைமையை உருவாக்கி விட்டனர். அமெரிக்காவின் பல மாநிலங்களில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர் உரிமமின் றியே துப்பாக்கிகள் வைத்துக் கொள்ளலாம்.

கடந்த இருபது ஆண்டுகளாக அங்கே தடையின்றி பாய்ச்சல் வேகத்தில் வளருகின்ற தொழில் பாதுகாப்பு சம்பந்தமான தொழில்கள் மட்டும்தான். செப்.11 தாக்குதல் அதை இன்னும் உற்சா கப்படுத்தியிருக்கிறது. அதாவது காம வெறியர்கள், கொள்ளையர், சைக்கோ கொலைகாரர்கள், தொடர் வரிசைக் கொலைகாரர்கள் போன்றவர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளும் பீதியுடன் தீவிர வாத பீதியும் இப்போது சேர்ந்து விட்டது. எனவே துப்பாக்கி விற்பனை, தனியார் பாதுகாப்பு - துப்பறியும் நிறுவனங்கள், வீடு - அலுவலக பாதுகாப்புக் கருவிகள், பிரபலங்களைப் பாதுகாக்கும் அதிரடிப்படை, பாதுகாப்பைக் கற்றுக் கொடுக்கும் நூல்கள் - பயிற்சி முகாம்கள் - தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்ற 'தொழில்வளர்ச்சி' சக்கைப் போடு போடுகிறது.

ஆயுத வியாபாரிகளின் இந்தச் சதியை அவர்களது பிரதிநிதி களான தேசிய துப்பாக்கிச் சங்கம், பண்பாட்டுப் பிரச்சாரமாக, ஜன நாயக உரிமையாகப் பாதுகாத்துப் பரப்பி வருகிறது. வன்முறையின் அளவைத் தூண்டிவிடும் துப்பாக்கியைத் தடைசெய்ய வேண்டு மென பல அமைப்புகள் அங்கே போராடி வருகின்றன. இவர் களைப் பழைமைவாதிகள் எனக் கேலி செய்யும் தேசிய துப்பாக்கிச் சங்கம், ஒரு தனிநபர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் உரி மையை மறுப்பது அமெரிக்க அரசியல் சட்டம் வகுத்திருக்கும் ஒரு குடிமகனின் அடிப்படை உரிமைகளை மறுப்பதாகும் என்று வாதி டுகிறது.

வன்முறைகளும், கொலைகளும் அதிகரித்தால் சிறைக ளைத்தான் அதிகம் கட்ட வேண்டுமே ஒழிய துப்பாக்கிகளைத்தடை செய்யக்கூடாது என்று வாதிடுகிறார்கள் இந்தப் பாசிசப் போரா ளிகள். அதிர்ச்சியூட்டும் துப்பாக்கி வன்முறைக் கொலைகள் நடக்கு மிடங்களில் கூட ஆயுத உரிமையின் மகத்துவம் பற்றி கருத்தரங்கம் நடத்துகிறார்கள் இந்த வியாபாரிகள்.

தளவாட முதலாளிகளினால் குளிப்பாட்டப்படும் ஜனநாயக - குடியரசு கட்சிகள் இரண்டும், துப்பாக்கியைத் தடை செய்ய வேண்டுமென்ற மக்கள் கருத்து ஓங்கும் போதெல்லாம் நாடகமாடு வார்கள். தேசிய விவாதம், உரிமம் பெறும் வயதை அதிகரிப்பது, தானியங்கி துப்பாக்கிகளை தடை செய்வது, உரிம முறை கொண்டு வருவது என்று அந்த நாடகக் காட்சிகள் சலிப்பின்றி மீண்டும் மீண்டும் அரங்கேறும்.

ஆனாலும் தேசியத் துப்பாக்கிச் சங்கத்தினர் முன் வைக்கும் 'ஜனநாயக முழக்கமே' எடுபட்டு வருகிறது. இருந்த போதும் அமெ ரிக்காவில் புழங்கி வரும் துப்பாக்கிகளின் பெரும்பகுதி குற்றவாளி களை எதிர்த்து மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் பயன் பட்டதில்லை.

வீட்டிலும், தெருவிலும், பள்ளிகளிலும், அலுவலகத்திலும் திடீ ரென்று வெடிக்கும் அந்தத் துப்பாக்கிகள், குடும்பத்தினரையும், நண்பர்களையும், அலுவலகப் பணியாளர்களையும் கொல்வ தற்கும், தற்கொலை செய்வதற்கும்தான் பயன்பட்டிருக்கிறது. ஆயுத முதலாளிகள் ஆட்டுவிக்கும் நாட்டில் அப்பாவி மக்களெல்லாம் பணவெறிப் பூசாரிகளுக்கு நரபலிக் காணிக்கையாக நாள்தோறும் பலியிடப்படுவது முதலாளித்துவத்தின் கர்மவிதி போலும்!

ஆயினும், செப்-11 தீவிரவாதக் கொலை, வழக்கமான கிரிமி னல் கொலைகளுக்கு இடைக்காலத் தடை விதித்துவிட்டது. பொது இடங்களுக்கு ஆயுதம் எடுத்துச் செல்வதை அமெரிக்க 'தடா' சட் டம் தடை செய்திருக்கிறது. துப்பாக்கியின் ஜனநாயக உரிமையை தீவிரவாதியின் சவரக்கத்தி மழித்துவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com








'ஆர்யன் நேஷன்' - கு கிளக்ஸ் கிளான் நிறவெறியர்களின் இன்றைய வாரிசு
















## அடிமை

வேட்டையாடப்படும் அடிமை நான்
நாய்களின் பற்கள்...
கங்காணியின் சாட்டைச் சொடுக்கு...
உடல் நடுங்குகிறேன்
நரகமும் விரக்தியும்
என்னை அழுத்துகின்றன.

வேலியை அழுந்தப் பற்றுகிறேன்
காயத்தில் ரத்தம் கசிகிறது.

ஆடைகளைப் போல்
மாற்றி மாற்றி அணிகிறேன் –
வலிகளை.

வலியின் வேதனையை
காயம்பட்ட மனிதனிடம் நான்
கேட்டுத் தெரிந்து கொள்வதில்லை.

நான்.. நானேதான்
அந்தக் காயம்பட்ட மனிதன்.

வால்ட்விட்மன்
அமெரிக்கா (வெள்ளை இனத்தவர்)

## கறுப்பு இயே

*இயேசுவானவர்*
*ஒரு கருப்பனாகத்*
*அது நல்லதல்ல.*

*அவர் சென்று பிரார்த்தன*
*தேவாலயங்கள் இங்கு ஏ*
*எவ்வளவு புனிதப்படுத்தப*
*நீக்ரோக்களுக்கு*
*அங்கே வாயில்கள் மறுக்*
*அங்கே இனம்தான் பெரி*
*சமயம் அல்ல.*

*ஆனால்*
*இதை மட்டும் உறு*

*இயேசுவே!*
*நீர் நிச்சயமாக மீ*
*சிலுவையில் அறை*




படிப்பகம்

www.padippakam.com






ாதர்

ி வருவாரானால்

ப்ய முடியாத
ாய் உள்ளன.
லும்

ம்.
ிர

ச் சொல்லலாம் —

ுவீர்.

லாங்ஸ்டன் ஹ்யூக்ஸ்
அமெரிக்கா

## துயரங்களின் அரசி

*மிகமிகத் துயரமான கண்ணீர்*
*ஒரு கறுப்பு நங்கையின் கண்ணீர்தான்.*
*ஏனெனில்*
*அவளை அழவைப்பது சுலபமல்ல.*

*அவள் மகனை அவளிடமிருந்து எடுத்துச் செல்.*
*அவனை போதைப் பழக்கத்துக்கு ஆளாக்கு.*
*வயலில் அவனை உழைக்கவை.*
*கொரியாவில் அவனைக் கொன்றுபோடு.*

*ஒரு பிஎச்.டி. பட்டத்துடன்*
*ஒட்டலில் உணவு பரிமாறச் செய்.*

*அவள் உதிர்ப்பாள் ஒரு புன்னகை*
*—தனக்கே உரித்தான கசப்புப் புன்னகையை*
*கேடயமாகப் பயன்படும்*
*தன் கறுப்பு முகமூடியின் ஊடாக*
*அவள் உதிர்ப்பாள்.*
*கண்ணீர் பெருகும்*
*உள்ளுக்குள் இரத்தச் சிவப்பாக.*

*அவள் கணவனை அவளிடமிருந்து பிரித்துவை.*
*சமையல் அறையிலேயே சாக வை.*

*பெரிய கடன் ஒன்றை உண்டாக்கி*
*ஆயிரம் நாளில் அதை*
*திருப்பிக் கொடுக்கச் செய்.*
*அவள் கொடுப்பாள்.*



*தண்டனை ஒன்று கொடுத்து*
*ஆயிரம் இரவுகளை கழிக்கவை.*
*அவள் கழிப்பாள்.*
*ஆயினும் வெள்ளையனே,*
*நீ அவளிடமிருந்து*
*கண்ணீரை மட்டும் பெற முடியாது*
*ஏனெனில் அவள் துயரங்களின் அ*

ரேடுரம், சீ




# உலக பயங்கரவாதியின் குகைக்குள்ளே....

# நிறவெறி பயங்கரவாதம்

மனிதகுல வரலாற்றி
இத்தனை குரூரமான
வக்கிரமா
மனிதவதை
குற்றங்களை
நாஜி இட்லர்கூ
செய்திருக்க முடியாது

படிப்பகம்

www.padippakam.com






சமீபத்தில் இந்திய அரசு கொண்டு வந்த 'பொடா' சட்டத்தைப் பான்று அமெரிக்காவும் ஒரு சட்டத்தை அமல்படுத்தியிருக்கிறது. னைவரது தகவல் தொடர்பையும் கண்காணிப்பது, நீதிமன்ற அனு தியின்றி காவலில் வைப்பது, எந்த விளக்கமுமின்றி வெளிநாட் ரை வெளியேற்றுவது... சுருக்கமாகச் சொன்னால் அனைத்து ஜன யக உரிமைகளையும் தடை செய்யும் அந்தச் சட்டத்தின் சுருக்கெ த்துப் பெயர் தேசபக்தச் சட்டம் (U.S. PATRIOT ACT).

அமெரிக்காவின் சிறை, போலீசு, சட்டம், நீதிமன்றம் அடங்கிய தித்துறையின் செயல்பாட்டைப் பார்க்கும்போது நமது நாடு பரவா ல்லை என்று தோன்றுகிறது. அந்த அளவுக்கு கடுமையான சட்டங் ளும், துரிதமாக விசாரித்து தண்டனை வழங்கும் விசாரணை றையும், விலங்குகளைப் போல் நடத்தப்படும் பல்லாண்டு சிறை ாழ்க்கையும் அங்கே இயல்பான விசயம்.

1999-ஆம் ஆண்டு கணக்குப்படி 20 இலட்சம் பேர் சிறைகளில் ாழ்கிறார்கள். ஒவ்வொரு ஒரு இலட்சம் பேரிலும் 709 பேர் சிறை ாளிகளாக இருக்கிறார்கள். அதிலும் இளைஞர்கள் பிரிவைப் ார்த்தால் நூறு பேருக்கு ஒருவர் சிறைவாசம்! வழக்கு, சிறை, ரோல், நிபந்தனைப் பிணை என மொத்த நீதித்துறை அமைப்பில் ட்சம் பேருக்கு 2267 பேர், அதாவது 61 லட்சம் மக்கள் கைதிக ாக வாழ்கிறார்கள். இதில் இளைஞர்கள் கணக்கு நூறுபேருக்கு ந்து நபர்களாக இருக்கிறது. மக்கள் தொகையில் கைதிகளின் சத வீதம், முன்னேறிய மேற்கு நாடுகளைக் காட்டிலும் அமெரிக்காவில் பன்மடங்கு அதிகம்.

ஒவ்வொரு வருடமும் 4000 பேர் மரண தண்டனைக்கான வழக்கை எதிர்நோக்குகிறார்கள், 100 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படுகிறது. தற்போதைய அதிபர் புஷ், டெக்சாஸ் ாநில ஆளுநராக இருந்தபோது, அமெரிக்க வரலாற்றிலேயே அதிகம் பேரைத் தூக்கிலேற்றியவர் என்ற சாதனையைப் படைத் துள்ளார். இந்தச் சாதனைக்கு உதவி செய்த ஜான் ஆஸ்க்ராப்ட் என்ப வரைத்தான் தற்போது தலைமை சட்டத்துறை செயலாளராக நியமித் திருக்கிறார். ஆப்கானில் கொல்லப்படும் மக்களைப் பற்றி புஷ் என்ன நினைப்பார் என்பதற்கு இந்தக் கொடூரமான வரலாறே போது மானது.

இந்தச் சிறை ஒடுக்குமுறையில் கருப்பின மக்கள் மீதான நிறவெ றியும் இணைந்தே இருக்கிறது. தற்போதைய கைதிகளில் பாதிக்கும் மேற்பட்டோர் கருப்பினத்தவரே. இது வெள்ளையினத்தவரை விட 8 மடங்கு அதிகம். கருப்பருக்கு அடுத்தபடி ஸ்பானிய இன மக்கள் அதிகம்பேர் சிறையில் வாடுகிறார்கள். 1977-1999 வரை தூக்கிலி டப்பட்ட 598 நபர்களில் 211 பேர் கருப்பினத்தவராவர். 30 சதவீதக் கருப்பினக் குழந்தைகள் தமது வாழ்வின் ஒரு பகுதியைச் சிறையில் கழிக்கிறார்கள். இது போக, கருப்பின, மற்றும் தொழிலாளிகளுக் காகப் போராடிய பல கருப்பின அரசியல் தலைவர்கள் இன்னமும் சிறையில் இருக்கிறார்கள்.

நாமறிந்த வரை தமிழகத்தில் பூந்தமல்லி தவிர புதிய சிறைகள் எதுவும் 20 ஆண்டுகளில் திறக்கப்படவில்லை. ஆனால் நியூயார்க் மாநிலத்தில் மட்டும் கடந்த 27 ஆண்டுகளில் 30 புதிய சிறைகளைத் திறந்திருக்கிறார்கள். இம்மாநிலத்தின் ஒரு வருட சிறைத்துறை செலவு பத்தாயிரம் கோடி ரூபாய்.

1960-களைப் போல வியட்நாம் போர் எதிர்ப்பு இயக்கம், கருப் பின மக்களின் சிவில் உரிமை இயக்கம் போன்ற போராட்டங்கள் இல்லாத 70, 80-ஆம் ஆண்டுகளில்தான் அமெரிக்க சிறை அடக் குமுறை அதிகரித்திருக்கிறது. காரணம் அமெரிக்காவின் உலகமய மாக்கம். ஏழை நாடுகளை மறுகாலனியாக்கும் பொருளாதாரச் சுரண்டல், உள்நாட்டிலும் ஏழை, பணக்காரன் வேறுபாட்டை முன்பைவிட அதிகரித்திருக்கிறது. அமெரிக்காவின் சொத்து மதிப்பில் 83 சதவீதத்தை வெறும் 10 சதவீதப் பணக்காரக் குடும் பங்கள் வைத்திருக்கின்றன. 80 சதவீத மக்களுக்கு வெறும் 8 சதவீத சொத்துக்களே உடமையாக உள்ளது.

ஆக உள்நாட்டில் வேலையிழப்பு, ஆட்குறைப்பு, வேலை யின்மை, விலைவாசிப்புள்ளி ஆகியவை கடந்த 20 ஆண்டுகளில் அபரிமிதமாக வளர்ந்திருக்கிறது. கூடவே ரீகன் காலத்திலிருந்தே குழந்தை நலம், கல்வி, சேரி வளர்ச்சி போன்ற சமூக நலத்திட்டங்க ளுக்கான நிதி ஒதுக்கீடு 50 சதவீதம் குறைக்கப்பட்டன. இதிலிருந்து அமெரிக்க ஏழை மக்களின் துயரத்தையும், அதிருப்தியையும், அதை அடக்கும் சிறைத்துறை வளர்ச்சியையும் நாம் புரிந்து கொள்ள முடியும்.

சிறைத்துறையின் பூதாகாரமான வளர்ச்சியைப் பார்த்த முதலா ளிகள் அதையும் விட்டு வைக்கவில்லை. ஆம், சிறையிலும் தனி யார்மயம்! அங்கே 28 மாநிலங்களில் தனியார் சிறை நடத்துவதற்கு சட்ட அங்கீகாரம் உண்டு. பங்குச் சந்தையிலும் கூட சிறை நடத்தும் முதலாளிகளுக்கு நட்சத்திர தகுதியுண்டு. பல நிதிநிறுவனங்களும் வளர்ந்து வரும் சிறைத் தொழிலில் முதலிடுமாறு வரவேற்கின்றன.

சிறைக்குள் இருக்கும் தொழிற்சாலைகளில் ஆயுதம், உணவு, மருந்து, துணி, தொலைபேசி, பொம்மைகள் என பல்வேறு உற்பத் திகளில் கைதிகள் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதில் ஒரு மணிநேர உழைப்புக்கு ஒன்று அல்லது இரண்டு டாலர் மட்டும் அவர்களின் கூலி. இதே வேலையை வெளியில் செய்யும் தொழிலாளிகளின் கூலி பல மடங்கு அதிகம் என்றால் கைதிகளின் உழைப்புச் சுரண் டலை எவரும் புரிந்து கொள்ள முடியும்.

பல பன்னாட்டு நிறுவனங்கள் தமது தொழிலாளர்களை ஆட்கு றைப்பு செய்துவிட்டு சிறைகளுக்கு படையெடுக்கின்றன. அதன்படி வேலையின்மையின் வளர்ச்சி சிறையோடும் சம்பந்தப்படுகிறது. அடுத்து சிறையில் இருக்கும் மக்கள் எவ்வித அடிப்படை உரிமை யின்றி நாயினும் கீழாய் நடத்தப்படுகின்றனர். அமெரிக்கச் சிறை வன்முறை குறித்து இதுவரை வாய் திறவாத 'அம்னெஸ்டி இன்டர் நேஷனல்' அமைப்பு 2001-ஆம் ஆண்டில் அளித்த அறிக்கை "1000 பெண் கைதிகள் சிறை அதிகாரிகளால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர்" என்று கூறுகிறது.

இதுபோக அமெரிக்கச் சிறைக் கைதிகளை அடக்கி ஆளும் போதைப் பொருள் மாஃபியாக் குழுக்கள், அவற்றின் சண்டைகளும் அங்கே சாதாரணம். இந்தச் சண்டையில் ஒவ்வொரு ஆண்டும் பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர். மேலும் இக்குழுக்களின் ஆளெடு க்கும் நிலையமாகவும் சிறை இருக்கிறது. இப்படி ஊரிலும், சிறை யிலும் சுரண்டப்படுவதும், துன்பப்படுவதும் கணிசமான மக்க ளுக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கையாகிவிட்டது. அமெரிக்கா உரு வாக்கியிருக்கும் நாகரிகம், ஜனநாயகம், சுதந்திரத்தின் மீது பயங்க ரவாதம் போர் தொடுத்திருப்பதாக அதிபர் புஷ் அடிக்கடி நினைவு படுத்துகிறார். உண்மையில் அமெரிக்க ஜனநாயகம்தான் தனது மக்கள் மீது நிரந்தரப் போர் ஒன்றைத் தொடுத்திருக்கிறது. ●

படிப்பகம்

www.padippakam.com



## உலக பயங்கரவாதியின் குகைக்குள்ளே...

# எங்கும் எப்போதும் பயமயம்...



உலகை மேலாதிக்கம் செய்யும் அமெரிக்காவின் நிதி மூலதனத் தலைமையகமான 'வால் ஸ்ட்ரீட்டில்' பிச்சை எடுக்கும் கருப்பினப் பெண்.

**வறுமையால் முடக்கப்படும் சேரிகளிலும் சரி, நிறவெறியால் ஒடுக்கப்படும் சிறைகளிலும் ச கருப்பின மக்களே அதிகம்!**

விமானத்தில் செல்ல பயம், தபால் கவரைத் தொட பயம், பாலங்களில் காரோட்ட பயம், அடுக்கு மாடிகளில் வேலை பார்க்க பயம், தாடியைக் கண்டால் பயம், ஆசியர்களைப் பார்த்தால் பயம், சவரக் கத்தியைக் கொண்டு செல்ல பயம் என்று அமெரிக்காவே பய மயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஆயினும் இவையெல்லாம் செப்.11-க்குப் பின் கிடைத்திருக்கும் இலவச இணைப்புகள் தான். எப்போதுமிருக்கும் இயல்பான வாழ்க்கையே அங்கு பயமாய்த்தான் இருந்து வருகிறது. பழகிப் போயிருக்கும் இந்த பய உணர்வு, அமெரிக்க சமூகத்தில் வேர் விட்டிருக்கும் வன்முறைப் பண்பாட்டின் புகை மூட்டமாய் எல்லா இடங்களிலும் தடையின்றி கசிகிறது. விரைவாக ஓடும் அமெரிக்க சமூகத்தின் ஒவ்வொரு அடியிலும் காயமும், வலியும், இரத்தமும் ஆழப்பதிந்திருக்கிறது.

★ "நான் ஒரு பைத்தியமல்ல; இறுதி முடிவை எடுக்குமளவு என்னைச் சோதிக்கும் இவ்வுலகை வெறுக்கிறேன். கொலை என்பது சாகசமும், பொருளார்ந்த செயலுமாகும். என்னைப் போன்றவர்கள் ஒவ்வொரு நாளும் அலைக்கழிக்கப்படுகிறோம் என்று தான் சொல்கிறேன். சமூகம் எங்களைப் பிடித்துத் தள்ளினால் நாங்களும் பதிலுக்குத் திரும்பித் தள்ளுவோம், என்பதை உணர்த்தவே இக்கொலைகளைச் செய்தேன்.... இது உங்கள் கவனத்தை ஈர்ப்பதற்கோ, உதவி கோரி கெஞ்சுவதற்கோ அல்ல. இது தவிர்க்க முடியாத ஒரு வன்முறைப் போராட்டத்தின் அலறல். இதன் மூலம் உங்கள் கண்களை என்னால் திறக்க முடியவில்லை என்றால், வன்முறை தவிர்த்து வேறு வழிகளில் அதைச் செய்ய முடியவில்லை என்றால்.... பிறகு ஒரு துப்பாக்கிக் குண்டின் மூலம் அதைச் செய்து முடிப்பேன்.

**– உட்ஹாம், தாயையும் சக மாணவர்கள் மூவரையும் கொலை செய்த பதினான்கு வயது மாணவன்.**

★ 96-ஆம் ஆண்டில் ஓக்லோமா நகரத்தில் குண்டு வெடித்து 158 பேர் இறந்து போயினர். அமெரிக்காவை அப்போது அதிர்ச்சியுறச் செய்த இக்குண்டு வெடிப்பை இசுலாமியத் தீவிரவாதிகள் செய்ததாக தினமணியின் நடுபக்க அறிவாளிகள் எழுதினர். உண்மையில் இதைச் செய்தவன் மேக்வை எனும் வெள்ளை நிறவெறியன். சமீபத்தில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டவன். இவனது நிறவெறிக் குழு இன்றும் இயங்கி வருகிறது. தற்போதைய 'ஆந்த்ராக்ஸ்' பீதி கூட இக்குழுவின் வேலையாயிருக்கலாம் என்று அமெரிக்க அரசே சந்தேகிக்கிறது.

இத்தகைய அதிர்ச்சியூட்டும் ஒவ்வொரு கொலைச் சம்பவத்தின் போதும் அமெரிக்க அரசியல் தலைவர்களும் அவர்களின் மனைவிமார்களும் கீறல் விழுந்த நீதி போதனையை சலிப்பின்றிப் பாடுகிறார்கள். பெற்றோர்கள் அரவணக்க வேண்டும், பள்ளிகள் வழி காட்ட வேண்டும், தேவாலயங்களுக்குச் செல்ல வேண்டும், வன்முறை விளையாட்டுக்களைத் தடுக்க வேண்டும், துப்பாக்கி

19 ஆண்டுகளாய்ச் சிறையிலிருக்கும் கருப்பினப் போராளி மூமியா அபு ஜமாலை விடுதலைச் செய்யக் கோரும் ஆர்ப்பாட்டம்.




படிப்பகம்

www.padippakam.com



ற்பனைக்குக் கட்டுப்பாடுகள் வேண்டும் என்று அந்த நீதி யாமல் ஓதப்படுகிறது.

தீமைகளைத் தடை செய்வதும், நன்மைகள் நடக்க விரும்பு வும் எப்போதும் கனவாகவே இருந்து வருகிறது. ஒருவேளை தக் கனவுகள் நிறைவேறினாலும் அமெரிக்க சமூகத்தைக் கவ்வி ள வன்முறைக் கழுகு ஓடி விடாது. காரணம் அமெரிக்க சமூ தின் அன்றாட இயங்கு தன்மையே வன்முறை எண்ணத்தைத் ற்றுவிப்பதாக உள்ளது.

இங்கே வன்முறைச் சிந்தனை என்பது கொலைகளையும், பாக்கி வெடிப்பதையும் மட்டும் குறிக்கவில்லை; ஒரு தனிம தன் வாழ்வதற்காக சமூகத்துடன் அதாவது சகமனிதர்களுடன் ல்ல மெல்ல முரண்படுவதையே முக்கியமாகக் குறிக்கிறது.

முன்னர் கண்ட கொலைச் சம்பவங்களில் முதல் இரண்டு மாண களின் வாக்குமூலத்தைக் கவனியுங்கள். நம்மைப் போன்ற நாடு ல் அதிர்ச்சியூட்டும் கொலைகளைச் செய்திருக்கும் பெரும் ாலைகாரர்களிடம் கூட இத்தகைய கருத்துச் செறிவான விதை'களைக் காண முடியாது. இவை ஒரு தனிமனிதன் தனது கத்துடன் எந்த அளவுக்கு மூர்க்கமாகவும், தெளிவாகவும் முரண் முடியும் என்பதைக் காட்டுகின்றன.

இந்த மனநிலைப் பிறழ்வு அமெரிக்க சமூகத்தின் தவிர்க்க முடி த ஒரு நோய். மூலதனமும், சந்தையும் கிருமிகளாய் சமூக டத்தைப் பிணியாக்கும் போது, இந்த நோய்க்கு மருந்து அமெ காவில் கிடையாது. கீழ்க்கண்ட ஒரு சம்பவம் அதை நிரூபிக்கும்.

அட்லாண்டா நகரின் நிதித்தொழில் பகுதியில் வேலை பார்த்த வயது மார்க்பார்ட்டன், ஒரு பங்குச் சந்தை தரகன். நமக்குப் புரி த பங்குச்சந்தை குறியீட்டு எண்களை வெறித்துப் பார்த்து ஆய்வு ய்த அவனது நோக்கம், மிகப்பெரும் பணத்தைச் சம்பாதிப்பது! னால் சூதாட்டம் என்பது தோல்விகளையும் கொண்டதுதான். ப்படி ஒரு பெருநட்டத்தைச் சந்தித்த அவன் ஆத்திரம் கொண்டு து மனைவி குழந்தைகள் உள்ளிட்டு கண்ணில் பட்ட 12 பேரைச் டுக் கொன்றான். தானும் தற்கொலை செய்து கொண்டான். இலா ட்டுவதிலும், வரி ஏமாற்றுவதிலும் ஒரு எல்லை வரை குற்றமி ழப்பதில் தவறில்லை என்பதைப் பொதுப்பண்பாக வைத்தி கும் சமூகத்தில் மார்க் பார்ட்டன் சற்று எல்லை மீறிப் போனான்.

துப்பாக்கியினால் எல்லை மீறிய மார்க் பட்டனால் 12 பேர் டும் இறந்து போனார்கள். ஆனால் செப்.11 தாக்குதலுக்குப் ருகு அமெரிக்க முதலாளிகள் பலர், துப்பாக்கி எதுவும் தூக்காம யே 5 லட்சம் தொழிலாளிகளை வீட்டுக்கு அனுப்பியிருக்கின் னர்;

அமெரிக்க அரசை உரிமையோடு நிர்ப்பந்தித்து பல்லாயிரம் ாடி ரூபாய் இழப்பீடாகப் பெற்றிருக்கின்றனர்; அதனால் சமூக த்திட்டங்கள் பலவற்றின் பண ஒதுக்கீட்டைச் சொற்பமாகக் றைத்தனர். ஓடாத விமானங்களை பராமரிக்கும் முதலாளிகளும், யுதத் தளவாட - பாதுகாப்புத் தொழில் புரியும் முதலாளிகளும் 00 பேர் இறந்து போனதையடுத்து தமது தொழில் பல மடங்கு திகரித்தது குறித்து கும்மாளமிடுகின்றனர்.

தேசிய சோகம் எனப்படும் ஒரு சம்பவத்தை வைத்து முதலா கள் எவரும் சோகமடையவில்லை. இவர்கள் வழிநடத்தும் அமெ க சமூகம் வன்முறை எனும் சோகத்திலிருந்து தப்ப இயலாது ன்பதற்கு இதை விட எடுப்பான சாட்சியங்கள் தேவையில்லை.



உலக பயங்கரவாதியின் குகைக்குள்ளே...

# அமெரிக்க வாழ்க்கை : மாயையும் உண்மையும்!

நியூயார்க் இரட்டைக் கட்டிடங்கள் தரைமட்டமாகும்போது, மனிதர்கள் இறந்த சோகக் காட்சியினை செய்தி ஊடகங்கள் திரும்பத் திரும்பக் காண்பித்து தேசபக்தி - இனவெறி உணர்ச் சியைக் கட்டவிழ்த்து விட்டன. ஒருபுறம் வால்மார்ட் கடைகளில் அமெரிக்கக் கொடிகள் ஆயிரக்கணக்கில் விற்றுத் தீர்ந்தன. மறுபுறம் ஆசிய நாட்டவர்கள் நூற்றுக்கணக்கில் தாக்கப்பட்டனர். அதிலும் சீக்கியர் ஒருவரை வெள்ளையின வெறியன் ஒருவன் சுட்டுக் கொன்றான்.

இவர் இந்த இனம் - நாட்டைச் சேர்ந்தவர் என்பதைக் கூட அறி யாத முட்டாள்களா அமெரிக்க மக்கள் என்ற கேள்வி எழுகிறது. அதேபோல அதிபர் புஷ் தனது தேர்தல் பிரச்சாரமொன்றில் நைஜீரி யாவை ஒரு கண்டம் என்று தெரிவித்தார். இதிலிருந்து புஷ்ஷும் புவியியல் அறிவற்ற முட்டாள் என்று கொள்ளலாமா?

இல்லை, இரண்டு தவறுகளுமே பொதுவான கல்வி அறிவின் குறைபாடுகளிலிருந்து நடக்கவில்லை. அமெரிக்கா என்ற நாகரீக உலகத்தைத்தாண்டி இந்தியா, நைஜீரியா போன்ற 'காட்டுமி ராண்டி'களின் நாடுகளையும் மக்களையும் தெரிந்து கொள்ளத் தேவையில்லை எனும் திமிரிலிருந்தும், மேட்டிமைத்தனத்திலி ருந்தும் அந்தத் தவறுகள் நடக்கின்றன.

ஒரு சராசரி அமெரிக்கனிடம் இதைப் பற்றிக் கேட்டால், ''இந்த நாடுகளை ஏன் தெரிந்து கொள்ள வேண்டும், தெரிந்து எனக்கு என்ன பயன்?' என்று சாதாரணமாகப் பதிலளிப்பான். அது வாழ்வை பணத்திலிருந்து மதிப்பிடும் சுயநலத்திலிருந்து மட்டும் எழுவதில்லை. ''அமெரிக்காவின் திரைப்படங்களையும், இசை யையும், விளையாட்டையும் உலகமே பார்த்து - கேட்டு - ரசிக்கின் றது; பில் கேட்சின் கணினி, உலகத்தையே இணைத்திருக்கிறது; எனில் முழு உலகின் பண்பாடும், வரலாறும் நாம்தானே, நம்மைத் தாண்டி என்ன இருக்கிறது?'' என்ற சிந்தனையிலிருந்தும் அந்தக் கேள்வி எழுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



**சிவப்பின் மீது வெறுப்பு:**

சிகாகோ நகரிலிருக்கும் உலகப் புகழ் பெற்ற அருங்காட்சிய கத்தின் வரலாற்றுப் பிரிவில் 1917 ரசியப் புரட்சி பற்றியும், 1945 இரண்டாம் உலகப் போரில் நாஜி ஜெர்மனியைத் தோற்கடித்த சோவியத் யூனியனின் வெற்றி குறித்தும் ஒரு செய்தி கூட கிடை யாது. உலக அறிவையும், வரலாற்றையும் கற்றுத் தரும் இடத்தி லேயே இந்த மாபெரும் வரலாற்று நிகழ்ச்சிகளை ஏன் மறைக்க வேண்டும்? அதுதான் அமெரிக்கா! தமக்குப் பிடிக்காத ஒரு விச யத்தை மறுப்பதிலும், மறைப்பதிலும், அதையே திரும்பத் திரும்ப பிரச்சாரம் செய்வதிலும் அவர்கள் வெட்கப்படுவதில்லை.

இருப்பினும் ஹாலிவுட் திரைப்பட முதலாளிகளுக்கு, "இளம் போல்ஷ்விக் அரசை எதிர்த்தும், ஏழைகளை பணக்காரர்களாக்கும் அமெரிக்காவின் மேன்மை குறித்தும்" படம் தயாரிக்குமாறு உத்தர விட்டது. அன்று முதல் இன்றுவரை கம்யூனிசத்தைக் கேவலப்ப டுத்தி நூற்றுக்கணக்கான திரைப்படங்கள் வெளிவந்து விட்டன.

இத்தகையப் பொய்ப் பிரச்சாரம் மக்களிடையே எடுபடுகிறது என்பதுதான் வேதனையான உண்மை. கம்யூனிச நாடுகள்தான் மக்களை மூளைச்சலவை செய்து பிரச்சாரம் செய்வதாக சில அறி வாளிகள் நம்புகின்றனர். உண்மையில் இந்தக் கூற்று அமெரிக்கா விற்குத்தான் கச்சிதமாகப் பொருந்தும். அங்கிருக்கும் 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' உள்ளிட்டு பல வானொலி நிலையங்கள் அரசு உதவி பெற்றும் நேரடியாகவும் நடத்தப்படுகின்றன. பென்டகனும், சி.ஐ.ஏ.வும் பல்வேறு வானொலி அலைவரிசைகளைக் கையில் வைத்திருக்கின்றன. இது போக பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், ஹாலிவுட்டிற்கு பல்லாயிரம் கோடி ரூபாய் மானியத்தை அமெரிக்க அரசு அளித்து வருகிறது. இந்த ஒவ்வொரு ஊடகமும் அரசியல், பண்பாடு, செய்தித்துறைகளில் அமெரிக்காவின் உலக மேலாதிக் கத்தை திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றன.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போர்களைக் கூட தேசபக்திப் போர் என்றே அமெரிக்கர்கள் நினைக்கின்றனர். ஆப்கான் போருக்குக் கிளம்பும் அமெரிக்க வீரர்கள் காதலிகளுக்கு முத்தமிடு வதையும், குழந்தைகளுக்கு கண்ணீருடன் விடை கொடுப்பதும் பத்திரிகைகளின் முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டன. இதே தரு ணத்தில் இரண்டாம் உலகப் போரில் அமெரிக்க வீரர்களின் சாசகம் பற்றிய 'ஃபேண்ட் ஆப் ப்ரதர்ஸ்' எனும் ஸ்பில்பெர்க்கின் தொலைக் காட்சித் தொடருக்கான விளம்பரம் நடுப்பக்கத்தில் வெளியானது. இதுவரை 1500 மக்கள் கொல்லப்பட்டதைக் கூறும் தாலிபானின் செய்தி அமெரிக்க அரசின் மறுப்போடு மூலையில் ஒதுக்கப்படுகின் றன. ஆக நாம் ஆக்கிரமிப்பு எனக் கருதும் ஒவ்வொன்றையும் தேச பக்தி விம்ம, தியாகம் ததும்ப, சாகசம் பீறிட்டெழும் ஒன்றாக அவர்கள் கருதுகின்றனர்.

**ஹாலிவுட்: அமெரிக்காவின் ஆகாசவாணி!**

இரண்டு கோடி மக்களைப் பலி கொடுத்து, ஜெர்மனியின் நாஜி களிடமிருந்து உலகைக் காப்பாற்றிய சோவியத் யூனியனின் 'மாபெரும் தேசபக்தப் போர்' குறித்து இன்றைய அமெரிக்க மக்க ளுக்கு எதுவும் தெரியாது. உண்மையில் ஜெர்மனியை முறியடித் தது அமெரிக்காதான் என்பது அவர்கள் கருத்து. ஹாலிவுட் அதை சாத்தியமாக்கியிருக்கிறது. 60 களில் வியட்நாம் எதிர்ப்பு இயக்கம் நடந்ததும், 70களில் தோல்வியுற்ற அமெரிக்க இராணுவம் வியட் நாமிலிருந்து திரும்பியதும் வரலாறு. ஆனால் 80-களில் வெளி வந்து வெற்றி பெற்ற ராம்போ வரிசைப்படங்கள் அந்த வரலாற்றை அமெரிக்க சிந்தனையிலிருந்து துடைத்தெறிந்து விட்டன.

"ராம்போ ஒரு தனிமனிதனல்ல; முழுமையான இராணுவம்; வியட்நாமியர்களாலும், ரசியர்களாலும் கொடும் சித்வரதைக்குள்



ஒக்லோஹாமா நகரின் குண்டு வெடிப்பை நடத்திய வெள்ளை நிறவெறியன் மேக்வெய்.

**நிறவெறிப் பயங்கரவாதம்!**

**'வெர்சே' எனும் பிரபல உடையலங்கார நிறுவனத்தின் முதலாளி கியானி (இடது). இவரை கனான் (வலது) என்ற தொடர் வரிசைக் கொலைகாரன் 97-ஆம் ஆண்டில் கொன்றான். ஆண் ஓரினச் சேர்க்கையாளனான இவன் தனக்கு எய்ட்ஸ் வந்தது கண்டு ஆத்திரமடைந்தான். தன்னுடன் உறவு கொண்ட ஆறு பேரைக் கொல்கிறான். அதில் கடைசி நபர் கியானி.**

**பாலியல் பயங்கரவாதம்!**



கியானி



கனான்

www.padippakam.com





செப்டம்பர் தாக்குதலுக்குப் பிறகு லாஸ்வேகாஸ் விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்ட கத்தி, பிளேடுக் குவியல். எங்கும் பயமயம்!



ஆசிரியராகப் பணிபுரிந்த கசென்ஸ்கிக்கு அறிவாளிகள் மீது ஏனோ வெறுப்பு. இப்பிரிவினருக்கு 15 ஆண்டுகளாக பார்சல் வெடிகுண்டு அனுப்பி சிலரைக் கொல்லவும் செய்தார். 96-ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டார்.



மொத்தப் பள்ளியையே தகர்க்கத் திட்டமிட்ட 4 மாணவர்களை டெக்சாஸ் போலீசார் கைது செய்து அழைத்துச் செல்கின்றனர். இத்தகைய பள்ளி மாணவர்களை எங்காவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

ளான ஒரு அமெரிக்க வீரன்; அதை மீறி பல சாகசங்களைச் செய்திருக்கும் போராளி; அத்தகைய மாவீரனை அமெரிக்க மக்கள் அலட்சியம் செய்து மறந்து போகலாமா?'' என்று சில்வஸ்டர் ஸ்டாலோனின் ராம்போ படங்கள் அமெரிக்கப் பெருமிதத்தையும், தேசபக்தியையும் கிளப்பி விட்டு வசூலை அள்ளிச் சென்றன. ஆக்கிரமிப்பையே தேசபக்தியாகவும், தோல்வியின் இழப்பை தியாகமாகவும், போர் எதிர்ப்பை தவறென்று உணர்த்தும் சுயவிமர்சனமாகவும் ராம்போ பாத்திரம் மக்களிடம் பதிந்தது.

ராம்போ படங்களுக்குப் பிறகு போர் வரிசைப்படங்கள் பல வெளிவந்து வெற்றியடைந்திருக்கின்றன. இந்தப் படங்களில் அராபியர்கள், ஏனைய முசுலீம்கள், ரசியர்கள், வியட்நாமியர்கள், கம்யூனிஸ்டுக்களை அமெரிக்க அதிரடிப்படை வீரர்கள் அற்பப் புழுக்களைப் போல மிதித்து வெற்றி பெறுகின்றனர். அமெரிக்கா உண்மையில் குண்டு வீசிக் கொன்ற மக்களின் எண்ணிக்கையை விட 'அமெரிக்க கமாண்டோக்கள்' இத்தகைய சினிமாக்களில் செய்த கொலை அதிகம். நிஜப் போர் அமெரிக்காவின் மேலாதிக்கத்திற்கும், செல்லுலாய்டின் போர் அமெரிக்க மேன்மையை நியாயம் போல உணர்த்துவதற்கும் பயன்படுகின்றன.

நுகர்பொருள் குவியலான வாழ்க்கையில் ஒரு சராசரி அமெரிக்கனின் தொழில்நுட்ப வலிமை குறித்த கர்வமும் முக்கியமானது. சூப்பர்மேன் போன்ற படங்களும், வேற்றுக்கிரக போர் படங்களும் அமெரிக்க வலிமைக்கு நிகரான எதிரிகள் பூமியில் கிடையாது என்பதை உணர்த்துகின்றன. எதிரிகளை மட்டுமல்ல அமெரிக்கக் குழந்தைகளுக்கான நட்பும் ஏனைய நாட்டுக் குழந்தைகளுடன் ஏற்படக் கூடாது என டயனோசர், பொம்மை, இ.டி போன்ற கற்பனைப் பொருட்களுடன் உறவாட வைக்கின்றனர்.

இப்படி ஹாலிவுட் தனது தோற்றத்திலிருந்தே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பண்பாட்டு ஏவல் நாயாக விசுவாசத்துடன் அழகு காட்டுகிறது. அந்த கொடூரமான அழகில் அமெரிக்க மக்கள் சிக்கியிருக்கின்றார்கள். செப்டம்பர் தாக்குதல் அந்த அழகை ஓரளவிற்கேனும் உணர்த்தியிருக்கும் என்றாலும் விரைவிலேயே அவை நமத்துப் போகும். தற்போதைய படங்களில் அமெரிக்க அதிபர்களே ஆக்ஷன் ஹீரோக்களாக அட்டகாசம் செய்கின்றனர்.

அதிபர் தேர்தலையே ஹாலிவுட் திரைப்படம் போல மாற்றி விட்ட நாட்டில், ஹாலிவுட் திரைப்படத்தின் 'ஆக்ஷன் ஹீரோ'வாக அதிபர் சித்தரிக்கப்படுவதில் ஆச்சரியமென்ன?

**36 சதவீத ஜனநாயகம்!**

முதலில் ஒரு அதிபர் அறிவுள்ளவரா, அற்றவரா என்பது பெரிய பிரச்சினையல்ல. ஒரு சோப்புக் கம்பெனி தனது புதிய சோப்பை அறிமுகப்படுத்தி, சந்தையில் வெற்றி பெற என்னென்ன செய்யுமோ அத்தனையும் அதிபர் தேர்தலுக்கும் பொருந்தும். இதில் சோப்பின் தரம் முக்கியமல்ல; அதை 'பிராண்டாக' வெற்றி பெறச் செய்யப்படும் வித்தைகளே முக்கியம். அவரது உடல் மொழி, உடை பாணி, பேச்சு வழக்கு, கையசைப்பது, கை குலுக்குவது, குறிப்பிட்ட புகைப்படங்கள், பெண்களைக் கவரும் விதம், குடும்பப் பாங்கு, புனையப்படும் இளம்பருவ சாகசங்கள், விருந்துப் பண்பு என்று ஏகப்பட்ட ஐட்டங்கள் கவனமாகத் தயாரிக்கப்படும்.

அமெரிக்க மக்களின் மனநிலையைப் பொறுத்தவரை அரசியல் என்பது ஹாலிவுட் திரைப்படம் போன்று கவர்ச்சிகரமான விழாவைப் போன்று உணர்த்தப்படுகின்றன. எதிர்க்கட்சிப் போராட்டம், கொள்கைப் பிரச்சினைகள், மக்கள் திரள் மாநாடு - ஊர்வலம், பந்த், ஆர்ப்பாட்டம், சுவரொட்டி, பிரச்சாரம், அரசியல் போராட்டம் என்பதெல்லாம் அங்கு கிடையாது. இவை அநாகரிக அரசியலாக மக்களுக்கு போதிக்கப்படுகின்றன. நமது ஓட்டுக்கட்சி


படிப்பகம்

www.padippakam.com



களில் கூட மக்களை அணிதிரட்டும் தகுதியை வைத்து ஒரு தலைவரோ, தொண்டரோ மதிப்பிடப்படுகிறார். அமெரிக்காவிலோ, ஒருவரது பணம் திரட்டும் ஆற்றலே தலைவர், வட்டார பிரதிநிதிகளின் தகுதியைத் தீர்மானிக்கின்றது. சுருக்கமாகச் சொன்னால் அரசியல் என்பது அங்கே நேர்த்தியாகச் செய்யப்படும் ஒரு தொழிலேயன்றி மக்களுக்கு சேவையாற்றும் துறையல்ல.

இதனைத் தம் சொந்த அனுபவத்தில் புரிந்துக் கொண்ட அமெரிக்க உழைக்கும் மக்கள் அநேகமாக வாக்களிப்பதே இல்லை. சமீபத்திய தேர்தல்களில் சராசரி வாக்குப்பதிவே 36 சதவீதம்தான்.

அந்த 36 சதவீதம் பேர்களும் அரசியல் தொழிலின் நேரடி ஆதாயங்களைப் பெறும் முதலாளிகள், அதிகார வர்க்கம், மேட்டுக்குடி மற்றும் நடுத்தர வர்க்கம் அடங்கிய பிரிவினராகத்தான் இருக்கின்றனர். கடந்த தேர்தலில் அதிபர் புஷ்ஷின் தம்பி புஷ் ஆளுநராக இருக்கும் புளோரிடா மாநிலத்தில், ஆயிரக்கணக்கான கருப்பின மக்கள் வாக்களிக்காமல் தடுக்கப்பட்டதும், ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவான இடங்களுக்கு பழுதடைந்த வாக்கு எந்திரங்கள் அனுப்பி சீர்குலைத்ததும், அமெரிக்க ஜனநாயகத்தின் நிறவெறியையும், வன்முறை கழிசடை அரசியலையும் உணர்த்துகின்றன.

இறுதியில் அப்பா புஷ் நியமித்த நீதிபதிகளின் தயவில் இன்றைய கோமாளி புஷ் அதிபரானார். அமெரிக்க நீதியின் நடுநிலைமை இலட்சணம் இதுவென்றால், நீதி கிடைப்பதற்கான செலவு சாதாரண மக்கள் நெருங்க முடியாத அளவுக்கு இருக்கிறது. சமீபத்தில் ஒரு நீதிமன்றத்தில் அரசியல் கைதியாக இருக்கும் ஒரு பெண் தான் செய்யாத குற்றமொன்றை செய்ததாக ஒப்புக் கொண்டார். "செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பிறகு ஜூரிகளின் (நடுவர்கள்) மனநிலை எப்படியிருக்குமென அறிவேன். அவர்களிடமிருந்து நீதி கிடைக்காது என்பதால் அவ்வாறு ஒப்புக் கொண்டேன்", என்று தெரிவித்தார் அந்தப் பெண். அமெரிக்க நீதித்துறையை புரிந்து கொள்ள செருப்பாலடிக்கும் இந்த வார்த்தைகள் போதுமானவை.

**மதமும் ஆட்டுவிக்கிறது!**

செப்டம்பர் தாக்குதலையடுத்து அமெரிக்காவெங்கும் ஒட்டப்பட்ட பேசப்பட்ட முழக்கம் "கடவுள் அமெரிக்காவைக் காப்பாற்றட்டும்." இந்து மதவெறியர்கள் ஆளும் இந்தியாவில் கூட கார்கில் - காசுமீர் பிரச்சினைகளின் போது 'கடவுள் இந்தியாவைக் காப்பாற்றட்டும்' என்று பேசப்படவில்லை. அமெரிக்காவில் பேசுவதற்குக் காரணம், அது உலகிலேயே தீவிரமான, மூட நம்பிக்கை மலிந்த, வெறிமிகுந்த பல்வேறு முட்டாள் மதப்பிரிவு குழுக்களும் ஏராளமாய்ச் செயல்படும் நாடாகும். 78-ஆம் ஆண்டில் அப்படி ஒரு மதப்பிரிவைச் சேர்ந்த 900 பேர் தற்கொலை செய்து கொண்டனர். இந்தியாவின் அசட்டு சாமியார்கள் கூட அங்கே விலை பேசப்படுவதற்கு காரணம் அமெரிக்காவின் மத நம்பிக்கைதான். மூலதனத்தின் முன் மண்டியிட்டிருக்கும் மக்கள் மதத்தின் முன்னும் கட்டுண்டு கிடப்பது அதிசயமல்ல. ஆனால் அமெரிக்காவின் எல்லாத்துறை நிறுவனங்களும் மதத்தின் ஒழுக்கத்தை எப்போதும் நினைவுபடுத்திக் கொண்டயிருக்கின்றன.

இன்னொருபுறம் மதத்தின் ஒழுக்கம், அமெரிக்க நுகர்பொருள் வாழ்வின் ஓரங்கமே தவிர அதன் அடிப்படையல்ல. எல்லையற்ற நுகரும் பண்பாடு உருவாக்கியிருக்கும் நுகர்வியம் என்ற மதமே அமெரிக்காவின் சமூக உறவுகளைத் தீர்மானிப்பதிலும் - சீர் குலைப்பதிலும் முக்கிய பங்காற்றுகிறது.

**சமூகப் பிடிப்பற்ற குடும்பம் - குழந்தைகள்:**

அமெரிக்காவின் திருமண வாழ்க்கை அற்ப காரணங்களுக்காக மட்டுமே பிரிந்து போவதாக நாம் அறிந்திருப்பது சரியல்ல. அமெ



தேர்தல் பிரச்சாரத்தில் அதிபர் புஷ்:
சோப்புக் கம்பெனிகளின் விளம்பர மோசடி!



புஷ்ஷை
நிறுத்தி
குடியரச
கட்சிக்கு
அல்கோர்-
நிறுத்தி
ஜனநாயக
கட்சிக்கு
வேறுபா
என்ன
யானை
லத்திக்கு
கழுதை
விட்டைக்கு
உள்
வேறுபாடுதா



அமெரிக்
இராணுவத்
விட அதிக
பேரைக்கொன்
திரைப்ப
கமாண்டோக்க
ஹாலிவுட்டி
பயங்கரவாத


படிப்பகம்

www.padippakam.com





...லக செக்ஸ் வக்கிரங்களின் தலைநகரம் லாஸ்வேகாஸ்.

...ாலியல் பயங்கரவாதம்!

...சொர்க்கவாசல் எனும் மதக்குழுவினர் 38 பேர் 97 ஆம்
...ஆண்டில் தற்கொலை செய்து கொண்டனர்.
...க்குழுவின் இணையத் தளம்.




ரிக்க வாழ்க்கைத் தரம் என்ற தகுதியை எந்த வழியில் விரைவாக அடையப் போகிறோம் என்பதில்தான் தம்பதிகளுக்குள் பிரச்சினை ஏற்படுகிறது. எதிர்கால பொருளாதார வாழ்க்கை குறித்த அச்சமே முழு அமெரிக்காவையும் பீடித்திருக்கும் நிரந்தர பீதி. அந்த பீதிதான் பெரும்பாலான திருமண உறவுகள் முறிந்து போவதற்கும் அடிப்படையாக இருக்கிறது. இதன் விளைவாக தந்தை அல்லது தாயுடன் மட்டும் வாழும் கணிசமான அமெரிக்கக் குழந்தைகள் மற்றொரு முக்கியப் பிரச்சினையாகும். இவர்கள் தனித்துவிடப் படும் வாழ்க்கைக்குத் தயார் செய்யப்படுவதும், சமூகம் பாதுகாப்பு தராது என்பதைத் தெரிந்து கொள்வதும், இரக்கமற்ற தனிமனித வாதத்தில் விழுந்து வளர்வதும், பிஞ்சாக வெம்பிக் கனியும் காலத் திலேயே நடந்தேறுகிறது.

இந்த வெம்புதலோடு நுகர்பொருள் வாழ்க்கை இணையும் போது மனநிலைப் பிறழ்வு பல அளவுகளில் நடக்கிறது. தொலைக் காட்சிப் பெட்டி 'பொது அறிவை'க் கற்றுத்தரும் ஆசிரியனாகவும், வீடியோ விளையாட்டு தனிமையைத் துரத்தும் தோழனாகவும், எதிர்பாராத உலகங்களை அறிமுகப்படுத்தும் இணையம் இரத்த உறவாகவும் அமெரிக்கக் குழந்தைகளின் உலகில் ஒன்றுகின்றன. காலப்போக்கில் குழந்தைகள் இம்மூன்று கருவிகளையும் இயக்கு வதில்லை; கருவிகள் குழந்தைகளை இயக்குகின்றன. அப்ப டித்தான் வன்முறைச் சிந்தனையும், நுகர்பொருள் வெறியும், சமூகத் திடமிருந்து தனிமைப்படுவதும் ஒரு போதை போல ஆட்கொள்ளு கின்றன.

அமெரிக்க கல்வி திட்டம் கூட 'ஐ.க்யூ' எனப்படும் (முதலாளித் துவ நிர்வாக) துறை சார்ந்த அறிவுத் திறனை மட்டுமே கற்றுத் தரு வதிலும், வளர்ப்பதிலும் கவனம் கொள்கின்றது. ஆனால் நம் நாடு, உலகம், பல்வேறு மக்கள், பண்பாடு, வாழ்க்கை, போராட்டம் என்ற 'சமூக அறிவுத்திறன்' முதலாளித்துவக் கல்வி முறையில் கிடை யாது. ஒரு சிறுவனிடம் சமூக நோக்கத்தை உணர்த்துவதற்கும், நீ இந்தச் சமூகத்தின் ஓரங்கம் என்று வளர்ப்பதற்கும் இந்த 'சமூக ஐ.க்யூ' அவசியம். எனவே அமெரிக்க குழந்தைகள் தோற்றத்தில் திடகாத்திரமாகவும், அவர்களைச் சுற்றியுள்ள பொருள்கள் ஆடம் பரமாகவும் இருப்பினும் வாழ்வை இயக்கும் சிந்தனையில் சீக்கா ளிகளாகவே இருக்கின்றனர்.

**செக்ஸ் காய்ச்சலில் காயடிக்கப்படும் தேசம்:**

குழந்தைகள் மட்டுமல்ல, வயது வந்த அமெரிக்கர்கள் கூட வாழ்வின் எல்லாத் துறைகளில் ஏதேனும் ஒரு அளவில் சீக்காளிக ளாகவே இருக்கின்றனர். அத்தகைய சீக்கு ஒன்றிற்கு உதாரணமாக 'செக்ஸ் காய்ச்சலை' குறிப்பிடலாம்.

அமெரிக்காவின் பல மாநிலங்களில் விபச்சாரம் சட்டப்படி தடைசெய்யப்பட்டிருப்பது மட்டும் ஒரு சிறந்த நகைச்சுவை என்று குறிப்பிடலாம். அங்கே பல உத்திகளில் பல பெயர்களில் விபச்சாரத் தொழில் கொடிகட்டிப் பறக்கிறது. ஆரோக்கியமான வாழ்விற்கு தேவை எனப்படும் செக்ஸ் அங்கே ஆரோக்கியத்தை குலைப்ப தற்கே பயன்படுகிறது. உலகின் முதல் ஆபாசப் பத்திரிகையான 'ப்ளே பாயும்' அதனுடைய முதலாளியும், அவனது லீலைகளும், பில்கேட்சின் கணினிப் புகழை விட பிரபலமானது.

உலக செக்ஸ் வக்கிரங்களின் தலைநகரான லாஸ்வேகாஸ் அமெரிக்காவிற்கு மட்டுமே சொந்தமானது. ஓரினச் சேர்க்கை சங்கங்கள், பாலுணர்வு வெறிப்படங்கள், நேரடியான பாலுணர்வுக் காட்சிகள், தம்பதிகளுக்கு உறவை செய்முறையோடு கற்றுத்தரும் கிளினிக்குகள் - வீடியோ தகடுகள், 24 மணி நேரமும் இயங்கும் செக்ஸ் கடைகள், குழந்தைகளை அளிக்கும் தரகர்கள் என அமெ ரிக்கா முழுவதும் செக்ஸ் காய்ச்சல் கட்டவிழத்து விடப்பட்டிருக்கி றது. இங்கு செக்சும் ஒரு நுகர்பொருள் பண்டமாக மாற்றப்பட்டு



படிப்பகம்

www.padippakam.com



எல்லையற்ற நுகர்வு ரசனைவெறியாக மாற்றப்பட்டிருக்கிறது. அமெரிக்க மக்களின் ஓய்வு நேரத்தைக் காயடிப்பதில் இக்காய்ச்சல் முக்கியப் பங்கு வகிக்கிறது.

***

இதுவரை நாம் பார்த்த அமெரிக்க மக்களின் சிந்தனை - வாழ்க்கை முறையை நொடி தோறும் பாதுகாப்பதில் பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் பாரிய பங்கை ஆற்றுகின்றன. அவற்றைத் தெரிந்து கொள்ள அமெரிக்காவின் வார்ப்படங்களான ஜூ.விகடன், நக்கீரன், குமுதம் பத்திரிகைகளும், அரட்டை அரங்கம், டாப் டென், கேன்டிட் கேமரா, நையாண்டி தர்பார், அரி-கிரி அசெம்பிளி, சித்தி, மந்திரவாசல் போன்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுமே போதுமானது. இவை நாம் எதை எப்படிப் படிக்க வேண்டும், பார்க்க வேண்டும், நடந்து கொள்ள வேண்டும் என்பதை நம்மை அறியாமலேயே கற்றுத் தந்து மாற்றி விடுகின்றன. இவை ஒரு மனிதனுக்கு இயல்பிலேயே இருக்கும் சமூக நோக்கம் கொண்ட, முற்போக்கான, மாற்றம் தேடும் மதிப்பீடுகளை அடித்து ஒழிக்கின்றன. இறுதியில் அற்ப விசயங்களும் - நோக்கங்களுமே சிந்தனையின் அரியணையில் அரங்கேறுகின்றன.

அமெரிக்க ஏகாதிபத்தியக் கட்டமைப்புக்கேற்பவே அமெரிக்க சமூகமும் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதன் ஒவ்வொரு தொழிலும் ஒவ்வொரு விதத்தில் சமூகத்தைப் பாதிக்கின்றன. அமெரிக்க மக்கள் தங்கள் வாழ்க்கையில் பெறும் ஒவ்வொரு வசதிக்கும் ஏதோ ஒரு இழப்பைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. அமெரிக்க முதலாளிகளின் அளப்பரிய ஆதாயம், மக்களிடம் உருவாக்கப்படும் அற்ப உணர்வுகளின் அடிப்படையில்தான் இருக்கிறது. ஒரு நுகர்பொருளின் விற்பனை அது தேவையென கருதும் சிந்தனை உருவாக்கத்திலேயே சாத்தியம். அமெரிக்காவின் சமூகப் பண்பும் ஆடம்பர வாழ்க்கையும் இப்படித்தான் சங்கமிக்கின்றன.

ஒரு அமெரிக்கக் குடிமகனின் மனதில் அச்சவுணர்வை உருவாக்கினால்தான் துப்பாக்கிகள் விற்க முடியும். பாலுணர்வு வெறியை ஏவினால்தான் வயாக்ராவை சந்தைப்படுத்த முடியும். எய்ட்ஸ் பற்றிய மரண பீதி அதிகரித்தால்தான் ஆணுறைகளின் உற்பத்தியும் அதிகரிக்கும். புதிய நோய்கள் குறித்த பீதியை உருவாக்கும்போதுதான் புதிய மருந்துகளுக்கு அதிக விலை நிர்ணயம் செய்ய முடியும். பொதுப் போக்குவரத்தை இல்லாதொழிக்கும் போதே கார்களை அத்தியாவசியப் பொருளாக மாற்ற முடியும். போதைப் பொருள்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கும் போதுதான் கடுமையான ராக் இசையின் விற்பனை சாத்தியம். அமெரிக்கா என்பதன் பொருள் இப்படித்தான் இருக்கிறது.

அமெரிக்க சமூகம் ஒரு சராசரி அமெரிக்கனிடம் உருவாக்கியிருக்கும் வாழ்க்கை குறித்த மதிப்பீடு என்ன? வாழ்க்கை என்பது வாழ்ந்து களிப்பதே - வாழ்ந்து களிப்பது நுகர் பொருட்களை உடைமையாக்குவதே - உடைமையாக்குவது டாலரை எப்படியேனும் சம்பாதிப்பதே - சம்பாதிப்பது வாழ்க்கையில் வேகமாய் ஓடுவதிலேயே - ஓடுவது தடைகளை இரக்கமின்றித் தாண்டுவதே - தாண்டுவது சமூகத்துடன் முரண்படுவதிலேயே - முரண்படுவது தனி மனித வாதத்தில் முடங்குவதே என்பதுதான் அந்த மதிப்பீடு.

அதனால்தான் அமெரிக்க வாழ்க்கை என்பது உதட்டிலே சிரிப்பும் உள்ளத்திலே வெறுப்பும், தோற்றத்தில் கவர்ச்சியும் நடத்தையில் அருவருப்பும், பேச்சில் நளினமும் முடிவெடுப்பதில் இரக்கமின்மையும், தனி மனித வாழ்க்கையில் ஆடம்பரமும் சமூக வாழ்க்கையில் அவலங்களும் நிறைந்ததாக இருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியம் வீழ்த்தப்படும் வரையில் அமரிக்க மக்களுக்கும் விடுதலை என்பது இல்லை.

●

**மிசெவ்ரி நகரின் பெந்தகோஸ்தே ஆலயத்தில் நடக்கும் ஐந்து மணி நேரப் பிரார்த்தனை.**





**1978-ஆம் ஆண்டு ஜோன்ஸ் டவுன் நகரத்தில் ஒரு மதக்குழுவைச் சேர்ந்த 900 பேர் கூட்டாகத் தற்கொலை செய்து கொண்டனர். காரணம் இக்குழுத் தலைவர் ஜிம் ஜேன்ஸ் 'தேவலோகம் செல்ல இதுதான் நேரம்' என்று முடிவெடுத்தான் - மதப் பயங்கரவாதம்.**

படிப்பகம்

www.padippakam.com






# இசுலாமிய சர்வதேசியம் ஒரு மாயமான்

"புனிதப் போர் முசுலீம்களின் கடமை" - பாக். மதரசாவில் ஒரு சுவரொட்டி.

உலகெங்கிலும் பல்வேறு அமைப்புகள் நடத்தும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கும் இசுலாமிய அமைப்புகள் நடத்தும் ஆர்ப்பாட்டங்களுக்கும் அடிப்படையில் வேறுபாடு உண்டு.

ஆப்கான் எனும் ஏழைநாட்டின் மீதும் அதன் மக்கள் மீதும் அமெரிக்க வல்லரசு தொடுக்கும் அநீதியான ஆக்கிரமிப்பு யுத்தம் என்ற காரணத்திற்காகத்தான் கம்யூனிஸ்டுகளும் ஜனநாயகவாதிகளும் இந்தப் போரை எதிர்க்கின்றனர். கொல்லப்படும் மக்களின் மதம் என்ன என்று யாரும் கவலைப்படவில்லை.

ஆனால், முசுலீம் மதவாத அமைப்புகளோ, இசுலாத்துக்கெதிராக அமெரிக்கா தொடுத்திருக்கும் போர் என்றும், அதற்கெதிரான தமது புனிதப் போரில் உலக முசுலீம்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் அறை கூவுகின்றனர்.

''முசுலீம்களே, ஜிகாத்துக்குத் தயாராகுங்கள்'' என்று டெல்லி ஜும்மா மசூதியின் இமாம் அறைகூவல் விட்டபோது அதை எதிர்த்துக் கண்டித்தார், நடிகை ஷபனா ஆஸ்மி. ஸ்டார் டி.வி. நடத்திய விவாதமொன்றில் ஷபனா ஆஸ்மியை 'கூத்தாடி - விபச்சாரி' என்ற பொருள்படப் பகிரங்கமாக ஏசினார், இமாம்.

வரவேற்கத்தக்க நல்ல வசவுதான்! காசுக்காகத் தன் உடலை விற்பதுதான் விபச்சாரம் என்றால், டாலருக்காகத் தன்னையும் தன் நாட்டையும் சேர்த்து விற்றுக் கொண்ட தாலிபான், பின் லாடன், சதாம், சவுதி ஷேக்குகள் ஆகியோரைப் பற்றித்தான் நாம் முதலில் புலன் விசாரணை நடத்த வேண்டும்.

ஆனால் முசுலீம் அமைப்புகளோ, பின் லாடனையும் தாலிபானையும் இசுலாத்தைக் காக்க வந்த மாவீரர்களாகச் சித்தரிக்கின்றனர். வளைகுடாப் போரின்போது இந்த மாவீரன் பட்டத்தை சதாம் உசேனுக்கு வழங்கியிருந்தனர்.

திப்பு சுல்தான், பேகம் ஹசரத் மகல், இஷ்பதுல்லா கான், ஓமர் முக்தர் போன்ற எண்ணற்ற முசுலீம்களை மாவீரர்கள் என்று உலகமே கொண்டாடுகிறது. அவர்கள் முசுலீம்கள் என்பதனால் அல்ல; அவர்கள் அப்பழுக்கற்ற ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகள் என்பதனால் நாம் போற்றுகிறோம். நம் வழிகாட்டிகளாக அவர்களை மதிக்கிறோம்.

ஆனால், சதாமும் பின்லாடனும் தாலிபானும் எப்பேர்ப்பட்டவர்கள்? அமெரிக்க அடிவருடித்தனத்தில் தான் இவர்களது அரசியல் வாழ்க்கையே தொடங்குகிறது.

***

**சதாம் உசேன்:**
**ஒரு கையாள் மாவீரனான கதை:**

1958-இல் ஈராக்கில் கம்யூனிஸ்டு ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த அப்துல் கரீம் காசிம் அமெரிக்க, பிரிட்டிஷ், ஐரோப்பிய நிறுவனங்களை வெளியேற்றி எண்ணெய் வயல்களை நாட்டுடைமையாக்கும் சட்டத்தை 1961-இல் கொண்டு வந்தார்.

காசிமின் ஆட்சியைக் கவிழ்க்க சி.ஐ.ஏ. போட்ட சதித்திட்டத்தை நிறைவேற்றியது சதாம் உசேனின் பாத் கட்சி. சி.ஐ.ஏ. கொடுத்த கொலைப்பட்டியலின் படி ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகள் மற்றும் நாட்டுப் பற்றாளர்களை வேட்டையாடிக் கொலை செய்துவிட்டு, எண்ணெய் வயல்களை அந்நிய நிறுவனங்களிடமே மீண்டும் ஒப்படைத்தது.

1973-இல் அமெரிக்க ஆதரவுடன் ஆயிரக்கணக்கான குர்து இன மக்களை (அவர்களும் முசுலீம்கள்தான்) வேட்டையாடிக் கொன்றது சதாமின் ஆட்சி.

1980-இல் ஈரான் மீது படையெடுத்தார் சதாம். அமெரிக்கக் கைக்கூலியான மன்னன் ஷா தூக்கியெறியப்பட்டதற்குப் பழிவாங்க, ஈரான் மீது சதாமை ஏவிவிட்டது அமெரிக்கா. ஆக்கிரமிப்புக்கு எதிராக ஐ.நா.வில் ஈரான் கொண்டுவந்த முறையீட்டையும் தனது 'வீட்டோ' அதிகாரத்தின் மூலம் தடுத்தது. சதாமுக்குத் தேவையான ஆயுதங்களைக் கொடுத்து உதவியது.

1984-இல் ஈரான் மீது இரசாயன ஆயுதத்தை (நரம்பு வாயு) ஏவினார் சதாம். இதற்காக ஐ.நா. ஈராக் மீது பொருளாதாரத் தடை விதித்தது. தடையை எதிர்த்தது அமெரிக்கா.

1987-இல் சதாமுக்கு ஆதரவாகத் தனது கடற்படையை அனுப்பி ஈரானை மிரட்டியது அமெரிக்கா. ஈரானியப் பயணிகள் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது. எட்டாண்டுகள் நடந்த இந்தப் போரில் கொல்லப்பட்டவர்கள் 10 லட்சம் பேர்.

1988-இல் சொந்த நாட்டின் குர்து இன மக்கள் மீது இரசாயன ஆயுதங்களை ஏவினார் சதாம். ''இப்போதாவது ஈராக் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்'' என்று அமெரிக்க நாடாளுமன்றம் கோரியபோது சதாமுக்கு ஆதரவாக அதைத் தடுத்தார் அன்றைய அமெரிக்க அதிபர் ரீகன்.

சதாம் உசேனால் கொலை செய்யப்பட்ட அனைவரும் ஈரான் - ஈராக் நாடுகளைச் சேர்ந்த முசுலீம் மக்கள்தான். பாலஸ்தீனத்தில் இசுரேல் கொன்ற மக்களைப் போலப் பத்து மடங்கு முசுலீம் மக்களைக் கொலை செய்திருக்கிறது, சதாம் ஆட்சி.

அமெரிக்க ஆதரவுடன் திமிரெடுத்துத் திரிந்து கொண்டிருந்த சதாம் 1991-இல் குவைத்தை ஆக்கிரமிக்கப் போகிறாரென்று ஏற்கனவே தெரிந்திருந்தும் ''செய்யட்டும்'' என்று வேண்டுமென்றே கண்டு கொள்ளாமல் இருந்தது, அமெரிக்கா.

சதாமின் கழுத்துக்குச் சுருக்குப் போட்டு விடுவதும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஈராக்கின் ருமைலா எண்ணெய் வயலை விழுங்கி விடுவதும்

www.padippakam.com



அமெரிக்காவின் திட்டம். அமெரிக்க இராணுவத்தை பாக்கு வெற்றிலை வைத்து அழைத்தனர் குவைத், சவூதி ஷேக்குகள்.

ஈராக் மீது படையெடுப்பது என்று முடிவு செய்தவுடனே 30 ஆண்டுகாலம் தனக்கு அடியாள் வேலை செய்ய சதாமை "சர்வாதிகாரி", "கொடுங்கோலன்" என்று அமெரிக்கா தூற்றத் தொடங்கியது. இது அமெரிக்காவின் கபட நாடகம் என்பது எல்லோருக்கும் புரிகிறது. ஆனால் உலக றிந்த இந்த அமெரிக்கக் கைக்கூலியை இசுலாமிய அமைப்புகள் கதாநாயகனாகக் கொண்டாடினார்களே அது என்ன வகை நாடகம்?

ஈராக் மக்களின் படுகொலைக்கும் துன்பத்துக்கும் அமெரிக்காவைக் கண்டிக்கும் இசுலாமிய அமைப்புகள், அந்த அமெரிக்காவைப் பாக்கு வைத்து அழைத்த சவூதி ஷேக்குகளைக் கண்டிக்காத மர்மம் என்ன?

இசுலாமிய அமைப்புகள் எனப்படுவோர் யாருடைய பிரதிநிதிகள்? கொல்லப்பட்ட இலட்சக்கணக்கான முசுலீம் மக்களின் பிரதிநிதிகளா அல்லது சதாம்கள், ஷேக்குகளின் பிரதிநிதிகளா? அன்று சதாம். இன்று பின்லாடன்.

**பின்லாடன்: சி.ஐ.ஏ. வளர்த்த கடா!**

1967-இல் வளைகுடா நாடான தெற்கு ஏமனிலிருந்து பிரிட்டிஷார் வெளியேற்றப்பட்டவுடன் தெற்கு ஏமனில் சோவியத் ஒன்றியத்தின் சார்பு ஆட்சி அமைந்தது. அது இசுலாமுக்குத் தடையேதும் விதிக்கவில்லை. சொல்லப் போனால் இசுலாமுக்கே ஏகாதிபத்திய எதிர்ப்பு - முற்போக்கு விளக்கம் கொடுத்தது. அவ்வளவுதான். இசுலாமுக்கு ஆபத்தில்லையென்றாலும் தன் சொத்துக்கு ஆபத்து என்பதால் பிரிட்டிஷாரோடு பின்லாடனின் தந்தையும் நாட்டை விட்டு வெளியேறினார்.

கட்டுமானத் தொழில் முதலாளியான பின் லாடனின் தந்தைக்கு மெக்கா, மெதினா நகரங்களைப் புதுப்பிக்கும் பணி மட்டுமின்றி, சவூதி அரசின் கட்டுமான காண்டிராக்டுகள் ஏராளமாக ஒதுக்கப்பட்டன. சவூதி மன்னர் குடும்பத்துக்கு நிகரான பணக்காரக் குடும்பமானது பின்லாடன் குடும்பம்.

பாலஸ்தீன இசுலாமியத் தீவிரவாத அமைப்பான ஹமாஸின் தலைவர் மற்றும் எகிப்திய இசுலாமியத் தீவிரவாதிகளால் பயிற்றுவிக்கப்பட்ட பின்லாடனை "சி.ஐ.ஏ. - ஐ.எஸ்.ஐ. - சவூதி கூட்டணி" ஆப்கனுக்குக் கொண்டு வந்தது. சோவியத் ஆக்கிரமிப்புக்கெதிரான புனிதப் போரில் கோடீசுவரன் வீட்டுப் பிள்ளைகளும் இறங்கினால் அதைக் காட்டி ஏழை முசுலீம்



இளைஞர்களைப் பல நாடுகளிலிருந்தும் கவர்ந்திழுக்கலாம் என்பது சி.ஐ.ஏ. - ஐ.எஸ்.ஐ. திட்டம்.

பாகிஸ்தான் இராணுவம் சவூதி இளவரசரை அழைத்ததாகவும், அவருக்குப் பதிலாக பின்லாடன் பெயரை சவூதி அரசு சி.ஐ.ஏ.வுக்குச் சிபாரிசு செய்ததாகவும் கூறுகிறார் தாரிக் அலி. (Bombs, Blowback and the Future)

ஆப்கன் போருக்கு ஆளெடுப்பது நிதி திரட்டுவது, போதை மருந்துக் கடத்தல், ஆயுதம் வாங்குவது, ஆயுதக் கிடங்குகள் அமைப்பது ஆகிய அனைத்துப் பணிகளிலும் சி.ஐ.ஏ. - ஐ.எஸ்.ஐ.யுடன் தோளோடு தோள் நின்று பின்லாடன் வேலை செய்தது மறுக்கவியலாத உண்மை.

சோவியத் இராணுவம் வெளியேறியவுடன் சவூதி திரும்பிச் சென்றதும் பின்லாடனை சதாமின் குவைத் ஆக்கிரமிப்பு எதிர்கொண்டது. 'அல் காய்தா' படையின் துணை கொண்டு சதாமை முறியடிக்கலாம் என்ற தனது யோசனையை ஏற்காமல், இசுலாம் தோன்றிய புனித மண்ணில் மாற்று மதத்தினரை (அமெரிக்கப் படையை) கால் வைக்க அனுமதித்ததுதான் தனது கோபத்திற்குக் காரணம் என்று பின்லாடன் ஒரு பேட்டியில் கூறிய

> பின்லாடன் சி.ஐ.ஏ. வளர்த்த கடா. அது அமெரிக்காவின் மார்பிலேயே பாய்கிறது. அதற்காகக் கடாவுக்கு மாலை போட்டு மாவீரன் பட்டம் கொடுக்க முடியாது.

தாகச் சொல்கிறார் ஒரு பாகிஸ்தான் பத்திரிகையாளர். ஆனால் அதன் பின்னும் சி.ஐ.ஏ. - ஐ.எஸ்.ஐ. - பின்லாடன் உறவு தொடர்ந்தது என்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன.

இன்று பின்லாடன் எனும் மனிதனுக்கு எதிராக அமெரிக்க வல்லரசே கச்சை கட்டி நிற்கிறது என்ற காரணத்தினால் பின்லாடனைக் கதாநாயகனாக்க முடியாது. அல்லது ஒரு கோடீசுவரன் வீட்டுப் பிள்ளை சுகபோகங்களை விட்டு காட்டில் அலைந்து திரியும் 'தியாகத்தை' மெச்சியும் பின் லாடனை மதிப்பிட முடியாது.

பின்லாடன் சி.ஐ.ஏ. வளர்த்த கடா. அது அமெரிக்காவின் மார்பிலேயே பாய்கிறது. அதற்காகக் கடாவுக்கு மாலை போட்டு மாவீரன் பட்டம் கொடுக்க முடியாது.

**தலிபான்: அமெரிக்காவின் காசில் ஐ.எஸ்.ஐ. வளர்த்த பாசிசக் கும்பல்!**

பின் லாடன் சி.ஐ.ஏ.வின் வளர்ப்பு மகன் என்றால், தலிபான்களோ அமெரிக்காவே சோறு போட்டு வளர்த்த சொந்தப் பிள்ளைகள். சோவியத் யூனியனிலிருந்து மத்திய ஆசிய நாடுகளை உடைக்கவும் அங்கே இசுலாமியத் தீவிரவாதத்தைப் பரப்பவும், மத்திய ஆசியாவில் தனது ஆதிக்கத்திற்குத் துணை நிற்கவும் எண்ணெய்க் குழாய் அமைக்கவும் தோதான "இசுலாமிய ஆட்சி"யை ஆப்கனில் அமைப்பதற்காகவே உருவாக்கப்பட்டவர்கள்.

சோவியத் யூனியனை வெளியேற்றுவதற்காக அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட முஜாகிதீன்கள் 1992-இல் ஆட்சிக்கு வந்தனர். அவர்கள் சொந்தக் காலில் நின்று போராடும் விடுதலைப் படையாக இல்லாமல் கூலிப்படையாக வளர்ந்ததன் விளைவு உடனே தெரியத் தொடங்கியது. தோஸ்தம் - ஹெக்மத்யார் - மசூத் என்று ஒவ்வொருவரும் தங்களுக்குள் அடித்துக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டு ஆப்கானை நிரந்தரத் துயரில் தள்ளினர்.

சோவியத் ஆக்கிரமிப்பால் பாகிஸ்தானில் அகதிகளாகக் குடியேறிய ஆப்கன் மக்களின் பிள்ளைகளுக்கோ இது வெறுப்பை ஏற்படுத்தியது. வறுமை, வேலையின்மை, மடமையைப் போதிக்கும் மதரஸா கல்வி இவற்றுடன் இந்த வெறுப்பும் சேர்ந்து உருவான இளைஞர்கள் தலிபான்கள்.

இந்த வெறுப்பையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது அமெரிக்கா. ஆப்கனில் 'கட்டுப்பாடான' இசுலாமிய ஆட்சியை அமைப்பதற்கு இந்த இளைஞர்களைப் பயிற்றுவிக்க அமெரிக்காவும் சவூதி அரேபியாவும் காசு கொடுத்தனர்; பாகிஸ்தான் பயிற்சி கொடுத்தது. அமெரிக்கக் கைக்கூலிகளின் இரண்டாவது தலைமுறை (தலிபான்) தயாரானது.

இவர்கள் இசுலாமிய அறிஞர்கள் அல்ல; கல்வியறிவு இல்லாத கிராமத்து முல்லாக்கள் 'இசுலாம்' என்று எதைச் சொல்லிக் கொடுத்தார்களோ அதை அவர்கள் உறுதியாகப் பிடித்துக் கொண்டனர். ''விவசாயம், கால்நடை மேய்த்தல், கைவினைத் தொழில் என்ற எந்தத் தொழிலும் தெரியாத இந்தக் கூட்டத்தை என்னவென்று அழைப்பது? மார்க்சின் மொழியில் சொன்னால் இவர்கள் ஆப்கானிஸ்தானின் லும்பன்கள்'' என்கிறார் அகமத் ரஷீத் (Taliban - Islam, Oil and the new Great Game)

புரியும்படி சொல்வதானால், இந்து முன்னணி, பஜ்ரங் தள் கும்பல் சங்கராச்சாரியின் தலைமையில் 'இந்து ஆட்சி' அமைத்தால் எப்படி இருக்குமோ அப்படித்தான் இருந்தது முல்லாக்களின் தலைமையிலான தலிபான்களின் இசுலாமிய ஆட்சி.

''காலப் போக்கில் இவர்களும் சவூதி ஷேக்குகளைப் போல வளர்ந்து விடுவார்கள். நம் எண்ணெய்க் குழாய்கள் அமைக்கப்படும்... ஒரு எமிர் (அரசன்) இருப்பார். பாராளுமன்றம் இருக்காது, நிறைய ஷரியத் சட்டம் இருக்கும். அதனால் நமக்கொன்றும் சிரமமில்லை.''

— இது தலிபான் ஆட்சி பற்றி அமெரிக்க வெளியுறவுத் துறை அதிகாரியின் கருத்து (அகமத் ரஷீத் நூலிலிருந்து).



**சதாம் உசேனால் கொலை செய்யப்பட்ட அனைவரும் ஈரான் - ஈராக் நாடுகளைச் சேர்ந்த முசுலீம் மக்கள்தான். பாலஸ்தீனத்தில் இசுரேல் கொன்ற மக்களைப் போலப் பத்து மடங்கு முசுலீம் மக்களைக் கொலை செய்திருக்கிறது, சதாம் ஆட்சி.**

ஆனால் தலிபான்கள் ஷேக்குகளாக வளரத் தொடங்குமுன் ஒரு உண்மையான அராபிய ஷேக் (பின்லாடன்) அங்கு வந்துவிட்டார். பின் லாடனின் நிதி உதவி, இராணுவ உதவி ஆகியவற்றுடன் இசுலாமிய சர்வதேசியம் என்ற கருத்தில் இரு தரப்புக்கும் இருந்த ஒற்றுமை அவர்களை ஓரணியாக்கிவிட்டது.

***

## இது இசுலாத்துக்கு எதிரான போரா?

இப்போது பின் லாடனும் தலிபானும் அமெரிக்க ஆதிக்கத்தை ஒழித்து இசுலாத்தை நிலைநாட்டும் புனிதப் போரை நடத்துவதற்காகவே பிறந்து வந்தவர்கள் போல வீர வசனம் பேசுகிறார்கள். ஆப்கான், பாலஸ்தீனம், செசன்யா, போஸ்னியா, காசுமீர் என உலகெங்கும் முசுலீம்கள் மட்டும்தான் ஒடுக்கப்படுவது போலச் சித்தரிக்கிறார்கள்.

வரலாற்று அறிவற்ற நபர்கள் மட்டும்தான் இதை நம்ப முடியும். தனது சுரண்டலுக்காகவும் ஆதிக்கத்திற்காகவும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்கா நடத்திய போர்கள், கொலைகளை ஒப்பிடும்போது இவர்கள் போடும் பட்டியல் மிகச் சிறியது. தனது ஆதிக்கத்தை எதிர்த்த பாதிரியார்களையும் ஆர்ச்பிஷப்புகளையும் கூடச் சுட்டுக்கொல்ல அமெரிக்கா தயங்கியதில்லை என்பதே வரலாறு.

அமெரிக்காவின் இந்த ஆக்கிரமிப்பை ''இசுலாத்துக்கெதிரான போர்'' என்று சித்தரிப்பதன் மூலம் ஏதோ மத நோக்கங்களுக்காக கிறித்தவ - யூதக் கூட்டணி இசுலாம் மீது போர் தொடுத்திருப்பதாக உலக முசுலீம்களை நம்பச் சொல்கிறார்கள். யூனோகால் எண்ணெய் முதலாளிகளுடன் தலிபான் முல்லாக்கள் 1997-இல் அமெரிக்கா போனார்களே அது ஹஜ் யாத்திரையும் அல்ல; இப்போது அமெரிக்கா தொடுத்திருப்பது கிறித்தவத்தை நிலைநாட்டும் போரும் அல்ல.

நிறவெறியும், இசுலாமிய மத வெறுப்பும் அமெரிக்க ஏகாதிபத்தியப் பண்பாட்டின் ஒரு முகம். அவ்வளவுதான். அதன் சாரம் உலக மேலாதிக்கம். இதை இருட்டடிப்பு செய்துவிட்டு ஜார்ஜ் புஷ்ஷின் வசனத்தைப் பிடித்துக் கொண்டு 'ஜிகாத்'க்கு அணி திரளுமாறு கூறுவதன் மூலம் இன்றைய போருக்கு மட்டுமல்ல, நாளைய இசுலாமியக் கொடுங்கோல் ஆட்சிக்கும் இப்பொழுதே அச்சாரம் போடுகிறார்கள்.

## எது புனிதப் போர்?

தலிபானின் முல்லா ஓமர் ''அமெரிக்க இசுரேல், இந்தியா, ரசியா ஆகிய நாடுகளுக்கு எதிராக ஜிகாத்'' என்று அறிவித்திருக்கிறார். அருமையான அறிவிப்புதான்! ஆனால் தாக்குதலுக்குத் தளம் கொடுத்து நேரடியாக அமெரிக்கக் கைக் கூலி வேலை செய்யும் பாகிஸ்தான் அரசு, உஸ்பெக் அரசு, நேட்டோ கூட்டணியின் துருக்கி, வடக்கு முன்னணிக்கு ஆயுதம் தரும் ஈரான், அமெரிக்காவின் அருமை நண்பனான சவூதி அரேபியா போன்ற முசுலீம் நாடுகளுக்கு எதிராகவும் 'ஜிகாத்' என்று முல்லா ஓமர் ஏன் கூறவில்லை?

ஏனென்றால் ''இன்ஃபிடல்களுக்கு'' (இசுலாத்தின் நம்பிக்கையற்றவர்களுக்கு) எதிராக மட்டும்தான் 'ஜிகாத்' நடத்த முடியும். இந்த இரட்டை வேடத்திற்குப் பெயர் புனிதப் போர்!

சவூதியின் புனித மண்ணில் ''இன்ஃபிடல்கள்''

**கஞ்சா விற்ற காசில் ஆட்சி செய்த தாலிபான் ஆடு திருடினால் தூக்கிலேற்றுகிறது.**



படிப்பகம்

www.padippakam.com





சவுதி மன்னன் ஃபாத்

கால் வைத்ததனால் கொதித்துப் போன பின் லாடன் "இன்ஃபிடல்களான" சி.ஐ.ஏ. கொலைகாரர்களிடம் காசும், ஆயுதமும் வாங்கிப் புனிதப் போர் நடத்தினாரே, அது அவமானமாகப் படவில்லையா?

கஞ்சா வியாபாரம் செய்து புனிதப் போர் நடத்தலாம் என்று தலிபானுக்கும், பின் லாடனுக்கும் சொல்லிக் கொடுத்தது மறைநூலா, சி.ஐ.ஏ.வின் பயிற்சி நூலா?

சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆப்கன் போருக்கு ஆட்களும் காசும் தந்து உதவிய சவுதி மன்னர், அதே நேரத்தில் நிகராகுவாவில் ஏழை விவசாயிகளையும், பெண்களையும், குழந்தைகளையும் கழுத்தை அறுத்துக் கொன்ற சி.ஐ.ஏ. - காண்ட்ரா கொலைப் படைக்கும் காசு கொடுத்தார். அது பாவமில்லையா, கிறித்தவனை கிறித்தவன் கொல்லட்டும் என்ற ராஜதந்திரமா?

ஆப்கானில் ஜிகாத் நடந்த அதே நேரத்தில் வெள்ளை நிறவெறி அரசின் கூலிப்படையான ரினாமோ (RENAMO)வுக்குக் காசு கொடுத்து மொசாம்பிக் விடுதலையைச் சீர்குலைத்தது யார்? அதுவும் சவுதி மன்னர்தான். கறுப்பின மக்கள் விடுதலைக்கெதிராக கிறித்தவ - வெள்ளை நிறவெறியர்களுடன் கூட்டு சேர்ந்து சவுதியின் இசுலாமிய அரசு நடத்திய இந்தப் போருக்கு என்ன பெயர் - ஜிகாத் தானா?

**எண்ணெய் வியாபாரத்தில் அமெரிக்கக் கூட்டு - பாலஸ்தீனத்துக்கு வேட்டு!**

பாலஸ்தீன மக்களின் தாயகத்தை மறுத்து, பாலஸ்தீனத்தை ஆக்கிரமிக்கவும், இதுவரை சுமார் ஒரு லட்சம் பாலஸ்தீன மக்களைக் கொல்லவும் இசுரேலின் யூத வெறி அரசுக்கு உடந்தையாக இருக்கிறது அமெரிக்கா. அமெரிக்க அரசை ஆட்டிப் படைக்கும் யூதர்கள்தான் இதற்குக் காரணம் என்கின்றன இசுலாமிய அமைப்புகள்.

வளைகுடா ஷேக்குகளை அமெரிக்கா ஆட்டிப் படைக்க என்ன காரணம்? பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக எல்லா அரபு நாடுகளும் ஒன்று சேர என்ன தடை? எண்ணெய் வர்த்தகத்தில் அமெரிக்காவின் கூட்டு; அமெரிக்க நிறுவனங்களில் ஷேக்குகள் வைத்திருக்கும் பங்கு. இந்தக் கூட்டணிக்கு எதிராக யார் புனிதப் போர் நடத்துவது?

அமெரிக்கக் கைக்கூலியான ஷா அரசைத் தூக்கியெறிந்த ஈரான் மீது ஈராக்கை ஏவிவிட்டதும், இரண்டு தரப்புக்கும் ஆயுதம் விற்றதும் ரீகன் - சவுதி கூட்டணிதான் என்று பின் லாடனுக்குத் தெரியாதா?

இந்தியாவின் ஏழை முசுலீம் சிறுமிகளை கிழட்டு ஷேக்குகள் நிக்காஹ் செய்வதும், பங்களாதேஷ் முசுலீம் சிறுவர்களை விலைக்கு வாங்கி ஒட்டகத்தின் முதுகில் கட்டி பாலைவனத்தில் பந்தயம் விடுவதும், வீட்டு வேலைக்கு வரும் பெண்களை வைப்பாட்டியாக்கிக் கொள்வதும், சவுதி ஷேக்குகள் விலைமாதர்களுடன் நடத்தும் சல்லாபங்கள் லண்டன் பத்திரிகைகளில் சந்தி சிரிப்பதும் உலகுக்கே தெரியும் - ஷபனா ஆஸ்மியை விபச்சாரி என்று கூறும் இமாம்களுக்கு மட்டும் தெரியாதா?

> வெள்ளை நிறவெறி அரசின் கூலிப்படையான ரினாமோவுக்குக் காசு கொடுத்து மொசாம்பிக் விடுதலையைச் சீர்குலைத்ததும் சவுதி மன்னர்தான். கறுப்பின மக்களுக்கெதிராக வெள்ளை நிறவெறியர்களுடன் சேர்ந்து சவுதி அரசு நடத்திய இந்தப் போருக்கு என்ன பெயர் - ஜிகாத் தானா?

**வெளிநாட்டு முசுலீமுக்கு சவுதியில் குடியுரிமை உண்டா?**

அகதிகளுக்குக் கூட பல நாடுகள் குடியுரிமை வழங்குகின்றன. ஆனால் பாலைவனத்தை பணம் காய்க்கும் தோட்டமாக மாற்றுவதற்கு 20,30 ஆண்டுகள் உழைக்கும் தெற்காசிய முசுலீம் உழைப்பாளிகளுக்குக் கூட சவுதியில் குடியுரிமை கிடையாது. இந்த அநீதி ஏமனிலிருந்து சவுதிக்கு குடிபெயர்ந்த சர்வதேச இசுலாமியப் போராளி பின் லாடனுக்குத் தெரியாதா? அல்லது கோடீசுவரனாக இல்லாத முசுலீம்களெல்லாம் "இன்ஃபிடல்கள்" என்று ஷரியத் கூறுகிறதா?

வளைகுடாப் போரில் அமெரிக்க - சவுதி கூட்டணியை ஏமன் அரசு ஆதரிக்க மறுத்ததனால் ஒரே நொடியில் 10 இலட்சம் ஏமன் தொழிலாளிகளின் (இவர்களும் முசுலீம்கள்தான்) விசாவை ரத்து செய்து நாட்டை விட்டே துரத்தியதே சவுதி அரசு, அப்போது சவுதி தூதரக வாயிலில் எந்த இசுலாமிய அமைப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியதென்று சொல்ல முடியுமா?

சுரண்டல், அடக்குமுறை, களவு, சூது, விபச்சாரம், அமெரிக்கக் கைக்கூலித்தனம் ஆகிய அனைத்தின் ஒன்று திரண்ட வடிவம்தான் சவுதி மன்னராட்சி. ஜனநாயகம், பேச்சுரிமை, எழுத்துரிமை, தொழிற்சங்க உரிமை எந்த உரிமையும் அங்கு கிடையாது. ஆனால் குடிமக்கள் 5 வேளை தொழுகை செய்கிறார்களா என்று கையில் தடிக்கம்புடன் கண்காணிக்கும் முட்வா என்ற "முல்லா போலீசுப் படை" உண்டு.

"ரசியாவில் எச்சில் துப்பும் உரிமை இல்லை, சீனாவில் சிறுநீர் கழிக்க உரிமை இல்லை" என்று உலக ஜனநாயகத்தைப் பற்றிப் பெரிதும் கவலைப்படும் அமெரிக்க அரசு சவுதியைப் பற்றி மட்டும் ஒரு வார்த்தை பேசியதில்லை. அந்த அளவு புனிதமான சகோதரத்துவ உறவு!

**தலிபானின் வீரம்!**

சவுதியின் இந்த சீனியர் தாலிபான்கள் தான் ஆப்கனின் ஜூனியர் தாலிபான்களை உருவாக்கினார்கள். இவர்களும் ஆட்சிக்கு வந்தவுடன் "ஐந்து வேளை தொழுகை செய்யாவிட்டால் தடியடி, பர்தா அணியாத பெண்கள் முகத்தில் திராவக வீச்சு, வேலைக்குப் போகும் பெண்களுக்குத் தண்டனை" என்று கறாராக இசுலாமிய ஆட்சியை அமல்படுத்தி அனைவருக்கும் சொர்க்கத்தில் இடத்தை உத்திரவாதம் செய்தார்கள்.

இந்த வீரப்புதல்வர்கள் பாகிஸ்தானில் பயிற்சி எடுத்தபோது ஆட்சியிலிருந்தவர்



புஷ்ஷுடன் சவுதி இளவரசர் அப்துல்லா

www.padippakam.com





**மெக்டோனால்டு உணவு விடுதியில் பாகிஸ்தான் பெண்கள்: அரசியலையும், பொருளாதாரத்தையும் அமெரிக்காவிற்கு அடகு வைத்தபின், பண்பாட்டை மட்டும் காப்பாற்றி விடுமா இசுலாமிய சர்வதேசியம்?**

பெனாசிர் புட்டோ என்ற பெண்மணி. இசுலாமிய நாட்டைப் பெண் ஆளக்கூடாது என்று இவர்கள் எதிர்த்திருக்கலாம்; குறைந்தபட்சம் பர்தா அணியாததற்காக பெனாசிர் முகத்தில் ஆசிட் ஊற்றியிருக்கலாம்; அல்லது நவாஸ் செரீபும், முஷாரப்பும் ஏன் தாடி வைக்கவில்லை என்று கண்டித்திருக்கலாம்.

ஆனால் காசு கொடுப்பவனிடமும், சோறு போடுபவனிடமும் எப்படி எதிர்த்துப் பேசமுடியும்? ஏழை எளிய இளிச்சவாய் முசுலீம்களுக்குத் தானே மத ஒழுக்கம்!

இமாம்களோ, சங்கராச்சாரிகளோ, ஆதீனங்களோ, போப்புகளோ... மதவாதிகள் யாராக இருந்தாலும் அவர்கள் ஏகாதிபத்தியங்களின் கைக்கூலிகளாகவும் மக்கள் விரோதிகளாகவும்தான் இருந்திருக்கிறார்கள்.

### இசுலாமிய மதவாதம் அமெரிக்க கையாள்

இந்தோனேசியாவில் அமெரிக்காவை எதிர்த்த சுகர்னோவின் ஆட்சியைக் கவிழ்த்து 17 இலட்சம் மக்களைக் கொலை செய்த கொடுங்கோலன் சுகார்த்தோவுக்குத் துணை நின்றவை முசுலீம் மதவாத அமைப்புகள். கிழக்கு திமோரில் கொத்துக் கொத்தாக பல இலட்சம் கிறித்தவ மக்களை சுகார்த்தோவின் இராணுவம் கொலை செய்தபோதும் அமெரிக்கா கண்டு கொள்ளாததற்குக் காரணம் - சுகார்த்தோ. ஒரு அமெரிக்கக் கைக்கூலி என்பதுதான்.

பாகிஸ்தான் இராணுவம் வங்கதேச முசுலீம்களைக் கொன்று குவித்தபோது பாகிஸ்தானுக்கு அமெரிக்கா துணை நின்றதற்குக் காரணமும் பாக். அரசு அமெரிக்க அடிவருடி என்பதுதான்.

சமீபத்தில் எகிப்திய அரசு கொண்டு வந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்தை எதிர்த்துக் கலகம் செய்தவர்கள் வேறு யாருமல்ல; பின் லாடனை இசுலாமிய சர்வதேசியத்துக்குப் பயிற்றுவித்த ஜமாத்-ஏ-இசுலாமி அமைப்பினர்தான்.

பாகிஸ்தானில் நிலச்சீர்திருத்தம் என்பதே செய்யப்படாமல், 1000, 2000 ஏக்கர் பண்ணையார்களுக்கு ஆதரவாக நிற்பவையும் மதவாத அமைப்புகள்தான்.

''இசுலாமிய நாடுகளுக்கெதிராக அமெரிக்கா தொடர்ந்து கடைப்பிடித்து வரும் கொள்கைகள்'' என்று பேசுபவர்கள், இரண்டு கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும்.

**முதலாவதாக** ''இசுலாமிய மக்களுக்கெதிராக இசுலாமிய அரசுகள் கடைப்பிடித்து வரும் கொள்கைகள்'' பற்றி இவர்கள் என்ன சொல்கிறார்கள்?

இசுலாமிய மதவாத அமைப்புகளின் துணையுடன், இசுலாத்தின் பெயரால் ஆட்சி நடத்தும் சர்வாதிகாரிகளின் துணையுடன் தான் அமெரிக்கா முசுலீம் நாடுகளைக் கொள்ளையடித்திருக்கிறது. ஒரு இறை நம்பிக்கை என்ற வரம்பைக் கடந்து, பண்ணையார்களின் நிலத்தையும், ஷேக்குகளின் எண்ணெய் வயல்களையும் காப்பாற்றுவதற்கும், முசுலீம் மக்களின் சமூக வாழ்வைக் கட்டுப்படுத்தி ஜனநாயகத்தை மறுப்பதற்கும், இசுலாம் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படும் வரையில் அமெரிக்காவுக்குக் கவலையில்லை. அமெரிக்காவும் சர்வாதிகாரத்தைத்தான் விரும்புகிறது - ஜனநாயகத்தை அல்ல;

இசுலாத்தைப் போலவே அமெரிக்காவும் சொத்துடைமையைப் பாதுகாக்கத்தான் விரும்புகிறது; சோசலிசத்தை அல்ல.

பார்ப்பன - பனியா தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்களுக்கு ஆதரவான பாசிச பாரதீய ஜனதா ஆட்சியின் துணையில்லாமல், இந்தியாவை அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்கள் கொள்ளையிட முடியுமா? பாரதீய ஜனதாவை எதிர்க்காமல் அமெரிக்க ஆதிக்கத்தை முறியடிக்கத்தான் முடியுமா?

பாரதீய ஜனதாவின் தலைமையின் கீழ் அமெரிக்க ஆதிக்கத்தை முறியடிக்க முடியும் என்று எண்ணுவது முட்டாள்தனமென்றால், சதாம் உசேன்கள், பின் லாடன்கள் தலைமையில் அமெரிக்காவை வீழ்த்தலாம் என்று கனவு காண்பதும் முட்டாள்தனம்தான்.

**இரண்டாவதாக,** இசுலாமிய நாடுகளுக்கு எதிராக அமெரிக்கா கடைப்பிடித்து வரும் கொள்கைகள் எனப்படுபவை, உலக நாடுகளுக்கெதிராக அமெரிக்கா தொடுத்து வரும் தாக்குதலின் ஒரு அங்கம்தான். சந்தேகமிருப்பவர்கள் வரலாற்றைப் படியுங்கள்; அல்லது இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ள அமெரிக்க ஆக்கிரமிப்புப் பட்டியலைப் படியுங்கள்.

உண்மை இவ்வாறிருக்க, ''நிகராகுவா, எல் சால்வடார், கவுதமாலா, கொலம்பியா, பிரேசில் போன்ற நாடுகளில் அமெரிக்கா நடத்தும் நரவேட்டையை கண்டு கொள்ள மாட்டோம்; இந்தோனேசிய அரசு கிழக்கு திமோர் (கிறித்தவ) மக்களை வேட்டையாடுவதையும், ஈராக்-துருக்கி குர்து மக்களை இனப் படுகொலை செய்வதையும், தாஜிக் - உஸ்பெக் - ஷியா முசுலீம்களை தலிபான் படுகொலை செய்வதையும், பாகிஸ்தான் மொஹாஜிர்கள், பலூச்களை நசுக்குவதையும் கண்டு கொள்ள மாட்டோம்; ஆப்கன், போஸ்னியா, செசன்யா, ஈராக் தான் எங்கள் உலகம்'' என்ற அணுகுமுறை விபரீதமானது. உலக மக்கள் பிறரிடமிருந்து முசுலீம்களைத் தனிமைப்படுத்தக் கூடியது.

முசுலீம்களை இவ்வாறு தனிமைப்படுத்தத்தான் அமெரிக்காவும் விரும்புகிறது. அதனால்தான் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பிற நாடுகளிலும் பல்லாயிரம் மக்கள் பங்கு கொண்ட போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்திருந்தும் அமெரிக்கத் தொலைக்காட்சிகள் அவற்றை வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்கின்றன. உலகெங்கும் முசுலீம்கள் மட்டும்தான் அமெரிக்காவை எதிர்ப்பது

படிப்பகம்

www.padippakam.com



போலச் சித்தரிக்கின்றன. இசுலாமிய நாடுகள் என்று பிரித்துக் காட்டுவது அந்த வகையில் அமெரிக்காவுக்கு வசதியாகவே உள்ளது.

**நாடுகளை மத அடிப்படையில் பிரிப்பது சரியா?**

நாடுகளை இசுலாம், கிறித்தவம் என்று மதத்தின் அடிப்படையில் பிரிப்பதே ஒரு மோசடியாகும். கொழுத்த பணக்கார நாடான சவூதியும் கஞ்சிக்கே வழியில்லாத வங்காள தேசமும் முசுலீம் நாடுகள்; வல்ல ரசான ஜப்பானும் வறுமையால் விபச்சார விடுதியாகிப் போன தாய்லாந்தும் பவுத்த நாடுகள்; உலக மேலாதிக்கவாதி அமெரிக்காவும் அதனால் நசுக்கப்படும் நிகராகுவாவும் கிறித்தவ நாடுகள் என்று வகை பிரிக்க முடியுமா?

இவ்வாறு பிரிப்பது அமெரிக்காவைப் போன்ற ஏகாதிபத்திய நாடுகளுக்குத்தான் பெரிதும் பயன்படும் என்பதை சொல்லத் தேவையில்லை. பணக்காரன் ஏழையைப் பார்த்து நீயும் நானும் ஒரு சாதி என்பதும், முதலாளி தொழிலாளியிடம் நீயும் நானும் ஒரு மதம் என்று சொல்வதும் சொத்தைப் பிரித்துக் கொடுப்பதற்கல்ல, பாதுகாத்துக் கொள்வதற்குத்தான், ''நீயும் நானும் முசுலீம் நாடு'' என்று பேசுவதும் இந்த ரகம்தான்.

இதற்கு மேலே ஒரு படி சென்று முசுலீம்களுக்கு தேசமில்லை என்கிறார்கள் மதவெறியர்கள். ''காசுமீரி இனம், பண்பாடு என்று எதுவும் தனியாகக்கிடையாது என்றும் இசுலாமிய சர்வதேச இயக்கத்தின் அங்கம் என்ற முறையில் தலிபான்களை காசுமீருக்கு வரவேற்பதாகவும்'' (இந்து - 28.10.2001) இசுலாமியப் பெண்கள் அமைப்பின் தலைவி ஆந்த்ரபி பேட்டியளிக்கிறார்.

சமீபத்தில் பாரதீய ஜனதா அரசால் தடை செய்யப்பட்டிருக்கும் சிமி (SIMI) என்ற அமைப்பு, ''ஜனநாயகம், மதச்சார்பின்மை, தேசியம், பல கடவுள் வழிபாடு, சோசலிசம்'' ஆகியவற்றை ஒழிப்பதுதான் எங்கள் கொள்கை என்று பகிரங்கமாகப் பிரகடனம் செய்கிறது. ''இசுலாமிய ஆட்சி நடைபெறாத நாட்டில், இறைவனின் சட்டமின்றி வேறு சட்டத்திற்குப் பணிந்து வாழும் முசுலீம்கள் நரகத்திற்குச் செல்வார்கள்'' என்று கூறும் குரான் வசனத்துடன் தொடங்குகிறது சிமியின் இணையத் தளம்.

சிமி மீதான தடையை ஜனநாயக வாதிகள் எவ்வாறு எதிர்ப்பது? ''பஜ்ரங் தள் அமைப்பைத் தடைசெய்யாதபோது சிமிக்கு மட்டும் ஏன் தடை?'' என்று இந்துத்துவ அரசைக் கண்டிக்க மட்டும்தான் முடியும்.

இத்தகைய மதவாத அமைப்புகள் தங்கள் நடவடிக்கை மூலம் சிறுபான்மையினர் உரிமைக்குக் குரல் கொடுக்கும் மதசார்பற்ற, ஜனநாயக சக்திகளை இந்து பாசிஸ்டுகளிடம் காவு கொடுக்கிறார்கள். அமெரிக்கா முதல் ஆஸ்திரேலியா வரை பல்வேறு உலக நாடுகளிலும் ஆப்கன் மக்களுக்காகக் குரல் கொடுக்கும் இசுலாமிய ரல்லாத மக்களையும், அவர்களது ஜனநாயக உணர்வையும் கொச்சைப்படுத்துகிறார்கள்.

**இசுலாமிய சர்வதேசியம்: ஒரு மாயமான்!**

இசுலாமிய சர்வதேசியம் பேசுவோர் ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ளட்டும். உலக வர்த்தக மையமும் பென்டகனும் தகர்க்கப்பட்ட நியூயார்க்கிலும் வாஷிங்டன்னிலும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் செப்டம்பர் 20-ம் தேதியே துவங்கிவிட்டன. அதாவது இசுலாமிய சர்வதேசியம் விழித்துக் கொள்ளு முன்பே தொழிலாளி வர்க்க சர்வதேசியம் விழித்துக் கொண்டு விட்டது. அமெரிக்க அரசின் போர் வெறிப் பிரச்சாரத்தையும் மீறி பல்லாயிரக்கணக்கில் திரண்டவர்கள் கம்யூனிஸ்டுகள், இடது சாரிகள், ஜனநாயக வாதிகள்.

தலிபானின் மொழியில் இவர்களுடைய பெயர் காஃபிர்கள்; ஈரான் முதல் இந்தோனேசியா வரை பல்வேறு நாடுகளிலும் இசுலாமிய ஆட்சிகளால் வேட்டையாடிக் கொல்லப்பட்டவர்களின் வாரிசுகள்தான் போரை எதிர்த்துப் போராடுகிறார்கள்.

காஃபிர்கள் 'முசுலீம்களுக்காக'க் குரல் கொடுக்கத் தொடங்கிய பின்னும், ஆப்கன் குழந்தைகள் அமெரிக்க ஏவுகணைகளுக்குப் பலியாகிச் சிதறத் தொடங்கிய பின்னரும், இசுலாத்தின் பிறப்பிடத்திலிருந்து, இசுலாமிய சர்வதேசியத்தின் பிறப்பிடத்திலிருந்து ஒரு சத்தத்தையும் காணோம். இசுலாத்தை உலகெங்கும் பரப்ப ஆண்டுக்கு 5 பில்லியன் டாலர் செலவிடுகிறாராம் சவூதி அரசர். எப்படி இருக்கிறது இசுலாமிய சகோதரத்துவம்?

இசுலாமிய அமைப்புகள் ஆத்திரப்பட்டுப் பயனில்லை. தங்கள் கோபத்தை அவர்கள் சவூதி அரச குடும்பத்தின் மீது காட்டட்டும். ஏழை முசுலீம்களை ஜமாத்தில் விசாரிப்பது போல சவூதி மன்னரையும் ஜமாத்தில் வைத்து விசாரிக்க முடியுமா என்று முயன்று பார்க்கட்டும். வர்க்க அரசியலின் உண்மை அப்போது விளங்கும்.

இப்படித்தான் 1987-இல் ஹஜ் யாத்திரை சென்ற ஈரானிய முசுலீம்கள் அங்கே எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். நிராயுதபாணிகளான 400 யாத்திரீகர் உடனே சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இன்று சவூதி அரச குடும்பத்தை அமெரிக்கக் கைக் கூலிகள் என்று சாடும் பின்லாடனுக்கு அன்று நடந்த இந்தச் சம்பவம் தெரிந்திருக்காது போலும். அவர் அப்போது ஆப்கானில் அமெரிக்கக் காசில் புனிதப் போர் அல்லவா நடத்திக் கொண்டிருந்தார்!

● சூரியன்

**இந்தோனேசியா : அமெரிக்காவிற்கு எதிராக இசுலாமிய அமைப்பின் அறைகூவல். 60-களில் கம்யூனிஸ்டுகளை வேட்டையாட அமெரிக்காவின் கூலிப்படை. இன்று அமெரிக்காவை எதிர்க்கும் புனிதப் படையா?**


படிப்பகம்

www.padippakam.com



*"அமெரிக்கா உங்களை அழைக்கிறது. உலகின் தலைசிறந்த சுதந்திர நாடு உங்களை அழைக்கிறது. வெறுப்பு, வன்முறை, கொலை, தீமை ஆகிய வற்றை நிராகரிப்பதன் மூலம் தனது அடிப்படை மதிப்பீடுகளை உருவாக்கிக் கொண்ட நாடு உங்களை அழைக்கிறது."*

**– ஜார்ஜ் புஷ், போருக்கு முன் ஆற்றிய உரையில்.**

*"அமெரிக்காவில் கொல்லப்பட்டவர்களுக்காக ஒரு நிமிட மவுனம் இருக்க வேண்டுமாம்; அமெரிக்காவால் கொல்லப்பட்டவர்களுக்கு...? 59 நிமிட மவுனமா?"*

**– ஒரு லத்தீன் அமெரிக்க மாணவி**

# காலனியாக்கம், புதிய காலனியாதிக்கம், மறுகாலனியாக்கம்: அமெரிக்க பயங்கரவாதத்தின் வரலாறு

ஆப்கானிஸ்தானைத் தனது வெடி குண்டுகளால் தோண்டியெறிந்து கொண்டிருக்கிறது அமெரிக்கா. 'அமெரிக்காவிலிருந்து அன்புடன்' என்று எழுதப்பட்ட உணவுப் பொட்டலங்களும், 'அமெரிக்காவிலிருந்து வெறுப்புடன்' என்று எழுதப்படாத கொத்துக் குண்டுகளும் (Cluster Bombs) ஒரே நேரத்தில் வீசப்படுகின்றன. இரண்டின் நிறமும் மஞ்சள்!

பசியால் துடிக்கும் மக்கள், வெடி குண்டுகளை உணவுப் பொட்டலமெனக் கருதித் தொட்டவுடன் வெடித்துச் சிதறுகிறார்கள் என்கிறது ஒரு செய்தி. இது அமெரிக்க பயங்கரவாதத்தின் ஒரு உருவகம்.

இந்தப் போருக்கு அமெரிக்க அரசு சூட்டியுள்ள பெயர் 'நீடித்த சுதந்திரம்'. ஆக்கிரமிப்பின் மூலம் ஆப்கன் மக்களின் சுதந்திரத்தையும், கருப்புச் சட்டங்களின் மூலம் அமெரிக்க மக்களின் சுதந்திரத்தையும் ஒரே நேரத்தில் பறிக்கும் நடவடிக்கைக்குப் பெயர் நீடித்த சுதந்திரம்! இந்த வக்கிரப் புத்தியின் வேர் அமெரிக்க வரலாற்றிலேயே இருக்கிறது.

இலட்சக்கணக்கான செவ்விந்திய மக்களை வெட்டிக் கொன்று நாய்களுக்குத் தீனியாகப் போட்டான் கொலம்பஸ். அவனுடன் ஐரோப்பாவிலிருந்து கசாப்புக் கத்தியைக் கொண்டு சென்ற பாதிரிகள் "கிறிஸ்துவின் புகழைக் கொண்டு செல்வதாக" அதை வருணித்துக் கொண்டனர். கொல்லப்பட்டவர்களுக்காகத் தவறாமல் ஜெபிக்கவும் செய்தனர்.

ஆப்பிரிக்கக் கருப்பின மக்களை இலட்சக்கணக்கில் பிடித்துச் சென்று அடிமைகளாக்கி தங்கள் சொர்க்க பூமியை உருவாக்கிக் கொண்ட அமெரிக்கர்கள் கருப்பர்களை "நாகரிகப் படுத்துவதாக"க் கூறிக் கொண்டார்கள்.

மெக்சிகோவை ஆக்கிரமித்து 2 கோடி மக்களைக் கொன்று குவித்த போது அதை "தவிர்க்கவியலாத விதி" என்று வருணித்தார்கள்.

1917-இல் ரசியப் புரட்சியை முறியடிக்க அமெரிக்கக் கடற்படையை ஏவிய போது "அமெரிக்க இலட்சியங்களை ரசியாவில் புகுத்துவதாக"ச் சொல்லிக் கொண்டார்கள்.

இரண்டாம் உலகப் போரில் இறங்கிய போது "உலகை ஜனநாயகத்திற்குப் பாதுகாப்பானதாக ஆக்குகிறோம்" என்று சொல்லிக் கொண்டார்கள்.

பிறகு கம்யூனிச அபாயத்தைக் கட்டுப் படுத்துவது என்ற பெயரில் உலக மேலாதிக்கத்துக்காக நடத்திய போர்களனைத்தையும் "அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்புக்காக" "சுதந்திரத்திற்காக" நியாயப் படுத்தினார்கள்.

இன்று அமெரிக்காவின் போர் விமானங்கள் ஆப்கானுக்கு ஏந்திச் செல்வதும் மரணத்தை அல்ல; புஷ்ஷின் மொழியில் சொன்னால் அவை 'சுதந்திரத்தை' ஏந்திச் செல்கின்றன.

இப்படி உலகமுழுமைக்கும் அமெரிக்க 'சுதந்திரத்தை' எடுத்துச் சென்ற வரலாறு நெடியது. உலக வர்த்தக மையம் தகர்க்கப்பட்டதைச் சாக்காக வைத்து உலக வர்த்தகக் கழகத்தின் பயங்கரவாதத்தை சட்டப்பூர்வமாக நிலைநாட்டும் சதி தொடங்கியிருக்கிறது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களையும், ஜனநாயகத்துக்கான போராட்டங்களையும் பயங்கரவாதம் என முத்திரை குத்தி ஒடுக்குவதுதான் அந்தச் சதி. இதை எதிர்த்து முறியடிப்பதற்கு, உலக மகா பயங்கரவாதி அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு வரலாற்றை ஒரு பறவைப் பார்வையிலாவது நாம் அறிந்து கொள்வது அவசியம்.

## அமெரிக்கக் காலனியாதிக்கத்தின் துவக்கம்

உலகத்தை "அமெரிக்க முறைப்படியான உலகமாக" (Pax Americana) மாற்ற வேண்டும் என்ற மேலாதிக்கவாத சிந்தனை 19-ம் நூற்றாண்டின் இறுதியிலேயே அமெரிக்க ஆளும் வர்க்கத்திடம் தோன்றிவிட்டது.

19-ம் நூற்றாண்டில் மட்டும் அமெரிக்கா 114 போர்களை நடத்தியுள்ளது. முதல் உலகப் போர் தொடங்கு முன்பே உலகத்தை மறுபங்கீடு செய்து கொள்வதற்கான யுத்தத்தை ஸ்பெயின் நாட்டுடன் அமெரிக்கா தொடங்கிவிட்டது.

ஸ்பெயினின் காலனியாதிக்கத்திற்கு எதிராகப் போராடி 1821 இலேயே விடுதலை பெற்றது மெக்சிகோ. அந்நாட்டின் மீது மீண்டும் போர் தொடுத்து ஆக்கிரமித்துக் கொண்டது அமெரிக்கா.

இன்று சிலிகான் பள்ளத்தாக்கில் மின்னிக் கொண்டிருக்கும் பில் கேட்சின் சாம்ராச்சியத்தின் கீழே, லட்சக்கணக்கான மெக்சிகோ விவசாயிகளின் பிணங்கள் புதைந்திருக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அங்கமான கலிபோர்னியா என்றழைக்கப்படும் இந்த மாநிலமும் நியூ மெக்சிகோ என்ற மாநிலமும் சென்ற நூற்றாண்டில் மெக்சிகோவின் பகுதிகள்.

அடுத்து பிலிப்பைன்சையும் போர்ட்டோ ரிகோவையும், ஹவாய் தீவுகளையும் ஆக்கிரமித்துக் கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் "பசிபிக் பெருங்கடலை அமெரிக்காவின் உள்நாட்டு ஏரியாக மாற்றுவோம்" என்று முழங்கினார்கள்.

"பிரிட்டனையும் பிரான்சையும் போலப் பிற நாடுகளைக் காலனியாக்கிக் கொள்ளையடித்துச் சொத்துச் சேர்க்காமல் 'தன் சொந்த உழைப்பில்' முன்னேறிய நாடு அமெரிக்கா" என்ற கூற்று ஒரு இரட்டைப் பொய். மேற்கண்ட நாடுகளைக் கொள்ளையடித்தது மட்டுமின்றி, ஆப்பிரிக்கக் கருப்பின மக்களை அடிமைகளாக்கி, அவர்கள் உழைப்பிலும் மத்திய அமெரிக்க, தென் அமெரிக்க நாட்டு மக்களின் உழைப்பிலும் தான் அமெரிக்கச்

படிப்பகம்

www.padippakam.com



செல்வம் பெருகியது.

முதல் உலகப் போருக்கு முன்பே ஐரோப்பிய நாடுகளுக்குப் பொருள் ஏற்றுமதி செய்யும் தொழில் வளர்ச்சி பெற்ற நாடாகவும், கடன் கொடுக்கும் நாடாகவும் வளர்ந்து விட்டது அமெரிக்கா.

**ரசிய சோசலிசப் புரட்சிக்கு எதிராக ஆக்கிரமிப்பு**

முதல் உலகப் போரில் அமெரிக்கா பங்கு பெறவில்லை. ஆனால், 1917 நவம்பர் ரசியப் புரட்சியை அழிக்கும் திட்டத்தில் உடனே பங்கு பெற்றது.

மனிதர்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் உரிய பண்டமாகவும், விருப்பம் போல வெட்டிக் கொல்லத்தக்க மிருகமாகவும் கருதிய நாடு, அத்தகைய உழைக்கும் மக்கள் ஒரு நாட்டின் அரசதிகாரத்தையே கைப்பற்றும்போது அதை வேறு எப்படி எதிர்கொண்டிருக்கும்?

பிற ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து சோசலிச ரசியாவை முற்றுகையிட்டது அமெரிக்க இராணுவம். 1920 ஜனவரி வரையில் 12,000 வீரர்கள் கொண்ட அமெரிக்கக் கடற்படை போல்ஷ்விக் அரசை வீழ்த்தவும், சோவியத் யூனியனைத் துண்டாடவும் பலவாறாக முயன்று தோற்றது. அமெரிக்காவின் உலக மேலாதிக்க வெறியும் அதன் கம்யூனிச வெறுப்பும் பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்தவை.

**நாஜிகளுடன் கள்ளக்கூட்டு ஜெர்மனிக்கெதிராகப் போர்!**

இரண்டாம் உலகப்போரில் ஜெர்மன் - ஜப்பான் - இத்தாலியின் பாசிசக் கூட்டணி அடுக்கடுக்காக ஆக்கிரமிப்புகளைத் தொடர்ந்து கொண்டிருந்தபோது அதைத் தடுத்து பாசிசத்தை முறியடிப்பதற்காக அமெரிக்கா போரில் குதிக்கவில்லை.

சொல்லப் போனால் பொருளாதாரப் பெரு மந்தத்திலிருந்து தன்னை மீட்டுக் கொள்ளக் கிடைத்த பொன்னான வாய்ப்பாக இரண்டாம் உலகப் போரைப் பயன்படுத்திக் கொண்டது அமெரிக்கா. ஆயுத வியாபாரம் அவற்றில் மிக முக்கியமானது.

போர் முடிந்தபின் உருவாகவிருக்கும் உலக அமைப்பில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகப் போரில் இறங்கத் தயாராக இருந்த அமெரிக்கா, பேர்ல் துறைமுகத்தின் மீதான தாக்குதலை அதற்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது.

ரசிய சோசலிசப் புரட்சியின் விளைவாகக் கம்யூனிசத்திற்கு உலகெங்கும்



நாகசாகி அகதி முகாமில் உயிருக்குப் போராடும் மக்கள். கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 லட்சம்.

"இந்தப் புனிதமான ஆயுதம் நம் கையிலிருப்பதை ஒரு பெரும் வரப் பிரசாதமாக கருதுகிறோம்."

*- அணுகுண்டு வீச்சுக்குப் பின் அமெரிக்க அதிபர் ட்ரூமன்.*



நிகரகுவா சூறாவளியில் பல்லாயிரம் மக்கள் சாவு. உலக நாடுகளின் உதவிக்குக் கூடத் தடை விதித்தது அமெரிக்கா.



வியத்நாம்: மைலாய் விவசாயிகளின் கொலை அமெரிக்காவின் கோர முகத்தை உலகிற்குக் காட்டியது.


படிப்பகம்

www.padippakam.com



பெருகி வந்த செல்வாக்கு, பாசிசத்திற்கெதிரான மக்களின் கோபத்தை முதலாளித்துவத்தின் மீதான வெறுப்பாக மாற்றிக் கொண்டிருந்தது. காலனி நாடுகளின் விடுதலையை முழங்கிய கம்யூனிசம் உலகெங்கும் நடந்த தேச விடுதலைப் போராட்டங்களின் நேசசக்தியாகியது.

காலனி நாடுகளின் விடுதலைக்கும் கம்யூனிசத்திற்கும் உள்ள இந்தப் பிணைப்பு எல்லா ஏகாதிபத்திய நாடுகளையும் - குறிப்பாக அமெரிக்காவை - அச்சுறுத்தியது. **காலனியாதிக்கத்தைப் புதிய வடிவில் நிலைநாட்டும்** முயற்சியில் அமெரிக்க பயங்கரவாதத்தின் புதிய அத்தியாயம் தொடங்குகிறது.

***

### புதிய காலனியாதிக்கம்: கம்யூனிச எதிர்ப்பு தேசிய விடுதலை எதிர்ப்பு பயங்கரவாதம்!

ஹிரோஷிமா, நாகசாகியில் அமெரிக்கா வீசிய அணுகுண்டுகள்தான் இரண்டாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததாக ஒரு வரலாற்றுப் புரட்டு நம்மீது திணிக்கப்பட்டுள்ளது. ஜெர்மனியின் வீழ்ச்சி தொடங்கியவுடனேயே, ரசியாவின் செம்படை மஞ்சூரியாவில் நுழைந்தவுடனேயே "சரணடையைத் தயார்" என்று தூதுவிடத் தொடங்கிவிட்டது ஜப்பான். இதன் விளைவாக போருக்குப் பிந்தைய உலக அமைப்பில் ரசியாவின் செல்வாக்கு அதிகரிக்கும் என்பதாலும், ஜப்பானைத் தனது செல்வாக்கு மண்டலத்திற்குள் கொண்டு வர இயலாது என்பதாலும் அவசரமாக ஜப்பானில் தலையிட்டது அமெரிக்கா.

தனது புதிய அணு ஆயுதத்தின் திறனைச் சோதித்துப் பார்ப்பது, புதிய உலக ஆதிக்க சக்தியாகத் தனது வரவை 'கம்பீரமாக' அறிவிப்பது, ஜப்பானை தன் அணியில் கொண்டு வருவது - என்ற நோக்கங்களுக்காக 2 லட்சம் அப்பாவி மக்களைக் கொலை செய்தது அமெரிக்கா.

பல லட்சம் மக்களைக் கொலை செய்யத் தயங்காத அமெரிக்க அரசு, மன்னர் மீது அளவுகடந்த அன்பு காட்டியது. ஜெர்மனியுடன் சேர்ந்து உலகப் போரைத் தொடுத்து பல கோடி மக்களின் அழிவுக்குக் காரணமாயிருந்த ஜப்பானிய மன்னர் மீது "போர்க் குற்றம் சாட்டமாட்டோம்" என்றும் மன்னராட்சி தொடர்வதை ஆதரிப்பதாகவும் அறிவித்தது அமெரிக்கா. இதன் மூலம் ஜப்பானில் பாசிச எதிர்ப்பு ஜனநாயக சக்திகளோ, கம்யூனிஸ்டுகளோ செல்வாக்கு பெறுவதைத் தடுத்து பாசிஸ்டுகளின் கையிலேயே அதிகாரம் நீடிப்பதை உறுதி செய்து கொண்டது.

1945 இல் தென் கொரியாவில் நுழைந்தது. அமெரிக்க இராணுவம். ஜப்பானிய பாசிஸ்டுகளுக்கெதிராக உள்நாட்டுக் கம்யூனிஸ்டுகளும் ஜனநாயக சக்திகளும் இணைந்து அமைத்திருந்த பாசிச எதிர்ப்பு அரசைக் கலைப்பதாக அறிவித்தது.

ஜப்பானியப் போலீசு மற்றும் ஜப்பானின் உள்நாட்டுக் கைக்கூலிகள் துணையுடன் ஒரு லட்சம் மக்கள் தென் கொரியாவில் கொலை செய்யப்பட்டனர்.

ஒரு இலட்சம் மக்களுடைய பிணங்களின் மேல் அமெரிக்க ஆதரவு பாசிசக் கும்பலின் ஆட்சி தென் கொரியாவில் நிறுவப்பட்டது. அன்று அங்கே அமைக்கப்பட்ட அமெரிக்கப் படைத்தளம் இன்றும் நீடிக்கிறது.

அடுத்து அமெரிக்காவின் கவனம் சீனத்தை நோக்கித் திரும்பியது. மாவோவின் தலைமையில் முன்னேறி வந்த சீனப்புரட்சியைத் தடுக்க, 1947-இல் 50,000 அமெரிக்கத் துருப்புகள் சீனத்தை ஆக்கிரமித்தன. சியாங் கே ஷேக்கின் ஆட்சியை முட்டுக் கொடுத்து நிறுத்துவதன் மூலம் ஆசியாவில் தனது சாம்ராச்சியத்தை விரிவாக்க முனைந்தது அமெரிக்கா.

### ஐரோப்பாவில் மீண்டும் பாசிசம்

ஆசியாவில் கம்யூனிச அபாயத்தைக் கட்டுப்படுத்த முயல்வதற்குள் மேற்கு ஐரோப்பாவையும் அச்சுறுத்தியது கம்யூனிசம். கிரீஸ் நாட்டில் கம்யூனிஸ்டுகளின் தலைமையிலான விவசாயிகள் - தொழிலாளர் கூட்டணி செல்வாக்கு பெற்றிருந்தது. நாஜிப் படைகள் தோற்றுப் பின்வாங்கியவுடன் உள்ளே நுழைந்த பிரிட்டிஷ் இராணுவம், நாஜி ஆதரவுக் கும்பலை மீண்டும் ஆட்சியிலமர்த்தியது.

மக்களின் எதிர்ப்பை மீறி அந்தப் பொம்மையாட்சியைக் காப்பாற்ற பிரிட்டனால் இயலவில்லை. உடனே 1947-இல் உள்ளே நுழைந்தது அமெரிக்க இராணுவம். அந்தச் சின்னஞ்சிறிய நாட்டில் 1,60,000 பேரைக் கொன்று குவித்தது.

பொம்மை ஆட்சியை நிறுவி, அதன் துணையுடன் படுகொலைகள் நடத்தி தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளும் வழிமுறையை, கிரீஸில் அமெரிக்கா கற்றுக் கொண்டது. பின்னாளில் வியத்நாமிலும், மத்திய அமெரிக்க நாடுகளிலும் இந்த அனுபவத்தைத்தான் அமெரிக்கா பிரயோகித்தது.

இத்தாலியிலும், கம்யூனிஸ்டுகள் செல்வாக்கு பெற்றிருந்தனர். விவசாயிகள் தொழிலாளர்களின் படை வடக்கு இத்தாலியை விடுதலை செய்து நாஜிப் படைகளைத் தன் சொந்த வலிமையால் வெளியேற்றியிருந்தது.

இந்தச் செல்வாக்கின் காரணமாக 1948-இல் நடைபெறவிருந்த தேர்தலில் கம்யூனிஸ்டுகள் பெரும்பான்மையாக வெற்றி பெறுவர் என்று எச்சரித்தது சி.ஐ.ஏ.

உடனே முசோலினியின் பாசிஸ்டு போலீசு படையைப் பயன்படுத்தி அடக்குமுறை ஏவப்பட்டது; தொழிற்சங்கங்கள் தடை செய்யப்பட்டன. இத்தாலிக்கான உணவு சப்ளை துண்டிக்கப்பட்டது.

கம்யூனிஸ்டுகளுக்கு ஓட்டளித்தால் தொடர்ந்து என்ன நடக்கும் என்பது இத்தகைய நடவடிக்கைகள் மூலம் மக்களுக்குப் 'புரிய' வைக்கப்பட்டது. இவையனைத்தையும் மீறி கம்யூனிஸ்டுகள் ஜெயித்தால், இத்தாலியை ஆக்கிரமிக்கத் தயார் நிலையில் நின்றது அமெரிக்க இராணுவம். கம்யூனிஸ்டு கட்சி தோற்கடிக்கப்பட்டது.

மக்கள் கம்யூனிஸ்டுகளுக்கு ஓட்டளித்தால் அமெரிக்கா அவர்களை என்ன பாடுபடுத்தும் என்பதைத் தேர்தலுக்கு முன்னரே அனுபவிக்குமாறு செய்து, பிறகு தேர்தலை நடத்தினால் மக்கள் வேறு வழியின்றி 'ஜனநாயகத்தின் அருமையை'ப் புரிந்து கொள்வர் என்பது இத்தாலியில் அமெரிக்கா கண்டுபிடித்த அனுபவம். பின்னாளில் நிகராகுவாவில் சாண்டினிஸ்டா அரசைத் தேர்தலில் தோற்கடிக்க இந்த உத்திதான் பயன்படுத்தப்பட்டது.

### அமெரிக்கா - ஏகாதிபத்திய உலகின் தலைவன்

இரண்டாம் உலகப் போர் முடிந்தவுடனேயே இத்தகைய அப்பட்டமான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபடக் காரணமிருந்தது. ஜப்பானிய, ஜெர்மானிய சாம்ராச்சியங்கள் கலைக்கப்பட்டு விட்டன. போரின் காரணமாக ஏற்கனவே பொருளாதார ரீதியில் பலவீனமடைந்திருந்த பிரிட்டன் தேசிய விடுதலைப் போராட்டங்கள் காரணமாகத் தன் காலனிகளையும் இழந்து கொண்டிருந்தது.

சோவியத் ஒன்றியமோ ஹிட்லரை முறியடிப்பதற்குத் தன் மக்கள் தொகையில் 10 சதவீதத்தை - 2 கோடிப் பேரை - பலி கொடுத்திருந்தது. சோவியத் ரசியாவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் போரில் சீர்குலைந்து புனரமைக்க வேண்டிய நிலையில் இருந்தன.

ஆனால் உலக மேலாதிக்கத் திட்டத்துடன் பொருத்தமான தருணத்தில் போரில் நுழைந்த அமெரிக்கா போரின் காரணமாக பாதிக்கப்படவில்லை. மாறாக ஆதாயம் அடைந்தது. நாடுகளின் நாணய மதிப்பைத் தீர்மானிப்பதற்கான தங்க இருப்பைப் பொறுத்தவரை உலக நாடுகளின் தங்க இருப்பில் 68% அமெரிக்

www.padippakam.com



காவின் கையில் இருந்ததால் டாலர் தீர்மானிக்கும் நாணயமானது.

உலக வங்கி, காட், ஐ.எம்.எஃப் ஆகிய நிறுவனங்களையும், டாலரையும் வைத்து சோசலிச முகாம் தவிர்த்த பிற நாடுகள் அனைத்தையும் தன் குடையின் கீழ் கொண்டுவர முடியும் என்று அமெரிக்க ஆளும் வர்க்கம் கருதியது.

அனைத்துக்கும் மேலாக 'இறுதி ஆயுதம்' என்றழைக்கப்பட்ட அணு ஆயுதம் அன்று அமெரிக்காவிடம் மட்டும்தான் இருந்தது. உலக சாம்ராச்சியம் கிட்டத்தட்ட கைக்கு வந்து விட்டதாகவே அமெரிக்க ஆளும் வர்க்கம் கருதியது.

### கம்யூனிச எதிர்ப்பு மூளைச்சலவை

இருந்தாலும் அமெரிக்காவின் சாம்ராச்சியக் கனவுக்குத் தடையாக நின்றது கம்யூனிசம் பெற்றிருந்த செல்வாக்கு. தம்மைப் பலிகொடுத்து ஹிட்லரை வீழ்த்திய சோவியத் ரசிய மக்கள் மீது ஐரோப்பிய, அமெரிக்க மக்கள் பெரும் அன்பும் நன்றியும் கொண்டிருந்தனர்.

நீண்ட போருக்குப் பின் அமைதியான வாழ்க்கையை மக்கள் விரும்பினார்கள். "பகுதியளவிற்காவது கட்டாய இராணுவச் சேவையைத் தொடரவேண்டும்" என 1945 இல் அதிபர் ட்ரூமன் அறிவித்த போது அதை எதிர்க்கத் தொடங்கினர் மக்கள்.

உலகளவில் ஆதிக்கத்திற்குத் தேவையான பிரம்மாண்டமான உலகு தழுவிய இராணுவ எந்திரத்தைக் கட்டியமைப்பதற்கும், அதற்கு வேண்டிய அளவுக்கு இராணுவச் செலவினங்களை அதிகரிப்பதற்கும் ஏற்ப அமெரிக்க மக்களின் "சமாதானம் விழையும் மனநிலையை" ஒழிக்க வேண்டியிருந்தது.

அமெரிக்காவின் பாதுகாப்பையும், உலக சமாதானத்தையும் அச்சுறுத்துகின்ற, ஹிட்லரைவிடக் கொடிய எதிரியாக சோவியத் யூனியன் சித்தரிக்கப்பட்டது. கம்யூனிஸ்டுகள் ரசிய உளவாளிகளாகவும், கம்யூனிச ஆதரவுக் கருத்து கொண்டவர்கள் அமெரிக்கப் பண்பு இல்லாதவர்களாகவும் சித்தரிக்கப்பட்டனர். 'மெக்கார்த்தியிசம்' எனும் இந்தக் கம்யூனிச எதிர்ப்பு இயக்கம் 1948 முதல் 8 ஆண்டுகள் இடையறாது தொடர்ந்தது.

அமெரிக்காவின் அரசுத் தலைமையகத்திலேயே 205 கம்யூனிஸ்டுகள் இருப்பதாகவும், ஹாலிவுட் கம்யூனிஸ்டுகளால் நிரம்பி வழிவதாகவும் விதவிதமான பொய்ப் பிரச்சாரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. சார்லி சாப்ளின், பால் ராப்சன் உள்ளிட்ட புகழ் பெற்ற கலைஞர்களும்,

## வளைகுடா எண்ணெய்க்காக....
## 35 ஆண்டுகளாக எரிகிறது பாலஸ்தீனம்!





மேலே: இசுரேலின் குண்டு வீச்சால் தகர்க்கப்பட்ட பெய்ரூட் நகரம்.

கீழே: இசுரேலின் அதி நவீன இராணுவத்தை கல்லெறிந்து தாக்கும் பாலஸ்தீனச் சிறுவன்.

www.padippakam.com



அரசியல்வாதிகளும், அறிவு ஜீவிகளும் 'கம்யூனிஸ்டு' குற்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஸ்டாலினைக் கொடிய சர்வாதிகாரியாகவும், ரசியாவை இரும்புத்திரை நாடாகவும் சித்தரிக்கும் புனை கதைகள், கட்டுரைகள் பெருகின. பிரபல ஐரோப்பிய எழுத்தாளர்களும் அறிவுஜீவிகளும் சி.ஐ.ஏ.வால் விலைக்கு வாங்கப்பட்டு ஸ்டாலின் எதிர்ப்பு, கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தப்பட்டனர்.

''அமெரிக்க மக்களிடம் தியாக உணர்வையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டுமானால் கம்யூனிச அபாயம் பற்றிய பீதியை மக்களின் மூளைக்குள் அடித்து இறக்க வேண்டும்'' என்று அதிபர் ஐசன்ஹோவர் காலத்திய தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலின் ஆவணம் கூறுகிறது (NSC-68, Chomsky).

## சீனப்புரட்சி - கம்யூனிசத்தின் பதிலடி

மக்களின் மூளையில் கம்யூனிச எதிர்ப்பை அடித்து இறக்குவதற்குள் அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் தலையில் பேரிடியாய் இறங்கியது 1949 சீனப் புரட்சியின் வெற்றி. சியாங்-கே-ஷேக்கின் ஆட்சிக்கு முட்டுக் கொடுக்க முடியாமல் செஞ்சீனத்தை விட்டு வெளியேறியது அமெரிக்க இராணுவம்.

அடுத்த ஆண்டிலேயே (1950-ல்) துவங்கியது கொரியப் போர். அமெரிக்க ஆதரவு பொம்மையாட்சி வடகொரிய எல்லையில் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. அதற்கு வடகொரியா கொடுத்த பதிலடியை சாக்காக வைத்து வடகொரியாவை ஆக்கிரமித்தது அமெரிக்க இராணுவம்.

ஏறத்தாழ தமிழகத்தின் அளவே உள்ள அந்த நாட்டில் அமெரிக்காவின் 20 லட்சம் துருப்புகளை வடகொரியா எதிர்கொண்டது. பள்ளிகள், ஆலைகள், மருத்துவமனைகள், வீடுகள் என மொத்த நாடும் தரைமட்டமாக்கப்பட்டது. இரசாயன ஆயுதம், கிருமி ஆயுதம் அனைத்தையும் பயன்படுத்தி 30 லட்சம் மக்களைக் கொலை செய்தது அமெரிக்கப் படை.

வடகொரியாவின் அண்டை நாடான சீனாவையும் அப்படியே ஆக்கிரமிப்பது என்ற அமெரிக்காவின் சதியை அறிந்த சீனாவும் போரில் இறங்கியது. ''ரசியாவும் தலையிடக்கூடும் - உலகப் போர் மூளும் - உலக மக்களின் எதிர்ப்பைச் சந்திக்க நேரும்'' என்ற அச்சத்தால் அமெரிக்கா பின்வாங்கியது. 1953 இல் போர் முடிந்த பின் சியாங் - கே - ஷேக்கின் தைவானில் ஒரு தளம் அமைத்தது அமெரிக்க இராணுவம்.

ஆசியாவில் காலூன்றுவதற்கு அமெரிக்கா முயன்று கொண்டிருக்கும்போதே ஐரோப்பாவில் செக்கோஸ்லோவாகியா அதன் பிடியிலிருந்து நழுவி சோசலிச முகாமுக்குச் சென்றது. கிரீஸில் அமெரிக்க ஆதரவு பொம்மையாட்சியை எதிர்த்த போராட்டங்கள் உக்கிரமாயின. இவையனைத்தையும் 'கம்யூனிச அபாயம்' 'ரஷிய சதி' என்றே சித்தரித்தது அமெரிக்கா.

## தேசிய விடுதலை, ஜனநாயகத்தின் எதிரி அமெரிக்கா!

கம்யூனிசம் என்ற கொள்கை தன் இயல்பிலேயே ஜனநாயகத்துக்கு விரோதமானது என்றும், அமெரிக்காதான் இயல்பிலேயே 'ஜனநாயகத்தின் காவலன்' என்றும் ஒரு கட்டுக்கதையை உலகெங்கும் பரப்பி 'அறிவாளிகளை' மூளைச் சலவை செய்து வைத்திருக்கிறது அமெரிக்கா.

ஆனால், மன்னராட்சியை ஒழித்து ஜனநாயகத்தை நிறுவிய நாடுகளில் தலையிட்டு மீண்டும் மன்னராட்சியை உருவாக்குவது; பாராளுமன்றத்தை ஒழித்து இராணுவ சர்வாதிகாரத்தை நிறுவுவது; மதச்சார்பற்ற ஆட்சியை ஒழித்து மதவெறியர்களின் ஆட்சியை உருவாக்குவது என்று வரலாறு முழுவதும் ஜனநாயக விரோதியாக மட்டுமே அமெரிக்கா செயல்பட்டிருக்கிறது.

ஏகாதிபத்தியச் சுரண்டலையும், அமெரிக்க அடிமைத்தனத்தையும் ஒப்புக் கொள்ளாமல் ''சுதந்திரம் - ஜனநாயகம்'' என்று முழங்கிய நாடுகளுக்கும், முனுமுணுத்த நாடுகளுக்கும் கூட இதுதான் நேர்ந்திருக்கிறது.

1951-இல் ஈரானின் ஜனநாயகப் புரட்சி, மன்னன் ஷாவை நாட்டை விட்டு விரட்டியது. அந்நிய நிறுவனங்களுக்கு - குறிப்பாக பிரிட்டனுக்குச் சொந்தமான எண்ணெய் வயல்களனைத்தையும் நாட்டுடைமையாக்கியது மொசுமத் மொசாதேயின் அரசு.

ஆனால் மன்னன் ஷாவின் இராணுவ அதிகாரிகளை ஒழித்துக் கட்டவும், மக்களை ஆயுத பாணியாக்கவும் மொசாதே தவறினார். இந்த விரிசலில் உள்ளே நுழைந்து இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி மீண்டும் ஷாவை மன்னனாக்கியது சி.ஐ.ஏ. இரானின் எண்ணெய் வயல்களில் 40 சதவீதத்தை அமெரிக்க நிறுவனங்கள் விழுங்கின

ஷாவின் உளவுப்படையான 'சாவக்' சி.ஐ.ஏ.வாலும், இசுரேலாலும் பயிற்றுவிக்கப்பட்டது. அதன் பின் வந்த ஆண்டுகளில் நினைத்துப் பார்க்கவே முடியாத சித்திரவதைகளும் படுகொலைகளும் ஈரானில் தொடங்கின. பல ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகளும் தேசிய விடுதலைப் போராளிகளும் தேடிப் பிடிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். அந்தப் பிராந்தியத்தில் இசுரேலுக்கு அடுத்து அமெரிக்காவின் அடியாள் அரசானது ஷாவின் ஈரான்.

1952-இல் மத்திய அமெரிக்காவின் சின்னஞ்சிறிய நாடான கவுதமாலாவில் தலையிட்டது சி.ஐ.ஏ. 1944-இல் இராணுவ சர்வாதிகாரத்தைத் தூக்கியெறிந்து நிலைநாட்டப்பட்ட நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி நிலச் சீர்திருத்தத்தை அமல்படுத்தத் தொடங்கியது.

உடனே அரங்கேறியது இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு. இன்றுவரை கவுதமாலாவில் அமெரிக்க ஆதரவு இராணுவ ஆட்சிகளே தொடர்கின்றன. இலங்கையைக் காட்டிலும் சிறிதான இந்த நாட்டில் இராணுவ ஆட்சியால் கொலை செய்யப்பட்ட மக்கள் ஒன்றரை லட்சம் பேர்.

1959 கியூபாவில் அமெரிக்க ஆதரவு இராணுவ ஆட்சியை வீழ்த்தி அதிகாரத்தைக் கைப்பற்றியது காஸ்டிரோவின் படை. கவுதமாலாவைப் போலவே ஒரு இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பை நடத்த முயன்று தோற்ற கென்னடி அரசு, அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவதாக மிரட்டியது.

கியூபா மீது அமெரிக்கா கொடுத்த நெருக்கடிகளும் மிரட்டலும் அருகாமையில் இருந்த மத்திய அமெரிக்க நாடான டொமினிக்கன் ரிபப்ளிக்கில் ராணுவ சர்வாதிகாரம் தூக்கியெறியப்படுவதை நிறுத்தவில்லை.

தேசிய ஜனநாயகவாதியான ஜுவான் போஷ் அங்கு அதிபரானவுடன் வழக்கம் போல ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தியது சி.ஐ.ஏ. ஆனால் இராணுவத்தின் இளநிலை அதிகாரிகள் மீண்டும் போஷ்ஷின் ஆட்சியை நிறுவினர். இதைச் சகிக்க முடியாத கென்னடி அரசு 40,000 அமெரிக்கத் துருப்புகளை அனுப்பி மீண்டும் அங்கே அமெரிக்க ஆதரவு பொம்மையாட்சியை நிறுவியது.

## சதியும் கொலையுமே வெளியுறவுக் கொள்கை!

1973-இல் சிலியில் சி.ஐ.ஏ. நடத்திய ஆட்சிக் கவிழ்ப்பு உலகளவில் அமெரிக்காவை அம்பலப்படுத்துவதில் பெரும்பங்காற்றியது. 1970இல் சிலியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வென்றார் சோசலிஸ்டு கட்சித் தலைவர் சால்வடார் அலண்டே. உடனே ஒரு ஆட்சிக் கவிழ்ப்பு நடத்த முயன்று தோற்றது சி.ஐ.ஏ. சிலியின் செம்புச் சுரங்கங்களை அமெரிக்க நிறுவ

www.padippakam.com



னங்களிடமிருந்து பறித்து நாட்டுடைமை யாக்கும் சட்டத்தை இயற்றினார் அலண்டே.

ஜெனரல் பினோசட் என்ற கைக்கூலியை வைத்து அலண்டேயைக் கொலை செய்து இராணுவ ஆட்சியை நிறுவியது சி.ஐ.ஏ. அடுத்த சில வாரங்களுக்குள் பல ஆயிரம் கம்யூனிஸ்டுகள் கொலை செய்யப்பட்டனர். மேலும் பல்லாயிரம் பேர் காணாமல் போயினர்.

ஆயுதம் தாங்கிய மக்கள் படை இல்லாமல், நாடாளுமன்றம் மூலம் கம்யூனிஸ்டுகள் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்பதற்கு, அத்தகைய நாடாளுமன்ற ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியாது என்பதற்கும் சிலி ஒரு பாடமானது.

சிலியில் அலண்டே கொலை என்பது ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே. சி.ஐ.ஏ. கொலை செய்த தலைவர்கள், கவிழ்த்த ஏகாதிபத்திய அரசுகள் பட்டியலிட்டு மாளாதவை.

1958-இல் இலங்கை பிரதமர் சாலமன் பண்டாரநாயகா, 1961-இல் காங்கோ பிரதமரும் விடுதலைப் போராளியுமான பாட்ரிஸ் லுமும்பா, 1967-இல் லத்தீன் அமெரிக்கப் போராளி சே குவாரா, 1969-இல் மொசாம்பிக் விடுதலை முன்னணியின் தலைவர் மாண்ட்லேன், 1973-இல் கினியாவின் ஆப்பிரிக்க சுதந்திரக் கட்சித் தலைவர் அமில்கார் கப்ரால்... இவர்கள் சி.ஐ.ஏ.வால் படுகொலை செய்யப்பட்ட தலைவர்களில் சிலர்.

சிலியை விஞ்சக்கூடிய கொடூரமான ஆட்சிக் கவிழ்ப்பு இந்தோனேசியாவில் நடந்தது. அங்கு ஆட்சிக்கு வந்த சுகர்னோவின் மதச்சார்பற்ற அரசு ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகளைப் பிரகடனம் செய்தது.

இசுலாமிய மதவெறி அமைப்புகளைத் தூண்டிவிட்டு இராணுவ அதிகாரி சுகார்த்தோவின் தலைமையில் 1965-இல் சி.ஐ.ஏ. ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தியது. சில மாதங்களில் சுமார் 7 லட்சம் கம்யூனிஸ்டுகளும், கம்யூனிஸ்டு சங்கங்களைச் சேர்ந்த விவசாயிகளும் தொழிலாளர்களும் கொலை செய்யப்பட்டனர். கம்யூனிசம் என்ற பேச்சே தடை செய்யப்பட்டது.

பிலிப்பைன்சில் மார்க்கோசின் நடத்திய ஆட்சிக் கவிழ்ப்புக்கும், தாய்லாந்தில் இராணுவ சர்வாதிகாரத்திற்கும் பக்கபலமாக நின்றது அமெரிக்கா. ஆனால் தென்கிழக்காசியாவில் அமெரிக்கத் திமிருக்கு முடிவுகட்ட வியத்நாம் காத்துக் கொண்டிருந்தது.

**"இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய எல்லா அமெரிக்க அதிபர்களையும் 'போர்க் கிரிமினல்' என்று நிரூபிப்பதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன."**

*நோம் சாம்ஸ்கி, அமெரிக்க அறிஞர்*




ட்ரூமன்


கார்ட்டர்


ஐசனோவர்


ரீகன்


ஜான்சன்


தந்தை புஷ்


கென்னடி


கிளிண்டன்


நிக்சன்


மகன் புஷ்


ஈரானின் மன்னன் ஷா


தென் வியத்நாம் சர்வாதிகாரி நகுயன் வான் தியூ


இந்தோனேசிய சர்வாதிகாரி – சுகார்த்தோ


சிலி சர்வாதிகாரி பினோசட்

## அமெரிக்கா உருவாக்கிய குட்டி இட்லர்கள்

www.padippakam.com



### வியத்நாம்: அவமானத்தால் துடிக்கிறது அமெரிக்கா

தென் வியத்நாமின் பொம்மை ஆட்சியைக் காப்பாற்ற 1965-இல் அமெரிக்க இராணுவம் வியத்நாமில் இறங்கியது. இரண்டே ஆண்டுகளுக்குள் வியத்நாமில் அமெரிக்கத் துருப்புகளின் எண்ணிக்கை 5 லட்சமாகியது. வியத்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகளில் அமெரிக்க இராணுவம் நடத்திய அட்டூழியங்கள் உலகறிந்தவை.

இரண்டாம் உலகப் போரில் உலகம் முழுவதும் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுகளின் அளவைக் காட்டிலும் அதிகமான குண்டுகள் வியத்நாம் மீது மட்டும் போடப்பட்டன. நாபாம் தீக்குண்டுகள், குகைகளில் புகுந்து தாக்கும் ராக்கெட்டுகள், இரசாயன ஆயுதங்கள், விவசாயத்தை அழிக்கும் பயிர்க்கொல்லி மருந்துகள்.. என அணு குண்டு ஒன்றைத் தவிர அனைத்தும் இந்நாட்டு மக்கள் மீது வீசப்பட்டன. சாவு எண்ணிக்கைக்குக் கணக்கில்லை. பல பத்து லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்.

அமெரிக்கப் பொருளாதாரம் ஆட்டம் காணத் தொடங்கியது. அமெரிக்க மாணவர்கள் மீது திணிக்கப்பட்ட கட்டாய இராணுவச் சேவை அமெரிக்காவெங்கும் அதிருப்தியையும் வெறுப்பையும் தோற்றுவித்தது. 1950களில் செல்வாக்கு பெறத் தொடங்கிய கருப்பின சிவில் உரிமை இயக்கத் தலைவர்கள் கொலை செய்யப்பட்டதும், கருப்பின மக்கள் வியத்நாமில் காவு கொடுக்கப்படுவதும் அவர்களிடையே பெரும் எதிர்ப்பு அலையைத் தோற்றுவித்தது.

வியத்நாம் ஆக்கிரமிப்பு மட்டுமின்றி தென் அமெரிக்க, மத்திய அமெரிக்க நாடுகளில் சி.ஐ.ஏ. நடத்திய ஆட்சிக் கவிழ்ப்புகள், அமெரிக்க ஆதரவு இராணுவ சர்வாதிகாரிகள் நடத்திய கொலைகள், தென் ஆப்பிரிக்க நிறவெறிக்கு எதிரான ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் போராட்டம், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் எழுச்சி, தென் ஆப்பிரிக்க நிறவெறி அரசுக்கும் இசுரேலின் யூதவெறி அரசுக்கும் அமெரிக்கா அளித்து வந்த ஆதரவு இவையனைத்தும் ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் உலகெங்கும் அமெரிக்க எதிர்ப்புக் கிளர்ச்சிகளைத் தோற்றுவித்தன.

அனைத்துக்கும் மேலாக, வியத்நாமிய மக்களின் உறுதியும், கம்யூனிஸ்டுகளின் வீரம் செறிந்த போராட்டமும் அமெரிக்க இராணுவத்தின் தார்மீக பலத்தைக் குலைத்தன. இன்னும் எத்தனை ஆண்டுகள் போரிட்டாலும் வெற்றி பெற முடியாத இந்தப் போரிலிருந்து பின்வாங்குவதைத் தவிர அமெரிக்க அரசுக்கு வேறு வழியின்றிப் போனது.

அடுத்து அமெரிக்க மக்களின் போர் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் அரசை அச்சுறுத்தின. இதற்குமுன் அமெரிக்கா இழைத்த அநீதிகள் - ஆக்கிரமிப்புகளின் போதெல்லாம் உள்நாட்டில் இத்தகைய பெரும் எதிர்ப்பை அமெரிக்க ஆளும் வர்க்கம் சந்தித்ததில்லை. இதுவரை வெளிநாட்டு மக்களுக்கு எதிராகத் திருப்பப்பட்டிருந்த துப்பாக்கி இப்போது உள்நாட்டு மக்களுக்கு எதிராகவும் திருப்பப்பட்டதால் அமெரிக்க அரசின் ஜனநாயக வேடம் கலைந்து கொண்டிருந்தது.

'மாபெரும்' அமெரிக்க வல்லரசு அவமானப்பட்டு, தோற்று, தலைகுனிந்து 1975-இல் வியத்நாமிலிருந்து தப்பியோடி வந்தது.

தென் கிழக்காசியாவில் அடிவாங்கிய அமெரிக்காவை மீண்டும் செருப்பாலடித்தது ஈரானின் புரட்சி. அமெரிக்கக் கைக்கூலியான ஷாவின் அரசு 1979-இல் தூக்கியெறியப்பட்டது. அதைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த கொமெய்னியின் அரசு கம்யூனிஸ்டுகளையும், மதச்சார்பற்றவர்களையும் வேட்டையாடிக் கொலை செய்தது அமெரிக்காவிற்கு மகிழ்ச்சியை அளித்தாலும், ஈரான் அரசு அமெரிக்க எதிர்ப்பாளராகவே இருந்தது.

ஷாவிற்கு அடைக்கலம் கொடுத்ததுடன் ஈரானின் சொத்துக்களை முடக்கியது அமெரிக்கா. டெஹ்ரானின் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அனைவரையும் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்தது ஈரான். அவர்களை மீட்பதற்கு அதிபர் கார்ட்டரின் அரசு செய்த முயற்சிகள் தோற்றன. வேறு வழியின்றி ஈரான் அரசுடன் சமரசம் செய்து கொண்டு பணயக் கைதிகளை மீட்டது அமெரிக்க அரசு.

அமெரிக்காவின் காலடியிலேயே உள்ள சின்னஞ்சிறிய மத்திய அமெரிக்க நாடான நிகராகுவாவில் அமெரிக்கக் கைக்கூலி சர்வாதிகாரியான சொமோசாவின் அரசைத் தூக்கியெறிந்தனர் சாண்டினிஸ்டாக்கள்.

பொருளாதாரத் தேக்கம், ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஜப்பானிய நாடுகளின் வர்த்தகப் போட்டியைச் சமாளிக்கவியலாத நிலை, இராணுவச் செலவினங்களின் அதிகரிப்பு போன்றவற்றுடன் தொடர்ந்த தோல்விகளால் அமெரிக்க 'தேசியப் பெருமிதத்திற்கு' ஏற்பட்ட அவமானம் ஆகியவற்றுடன் 70களின் முடிவை எதிர்கொண்டது அமெரிக்க ஆளும் வர்க்கம்.

### ஏகாதிபத்தியமாகிறது ரசியா - பனிப்போர் துவக்கம்

உலக மேலாதிக்கத்துக்கான வெறித்தனமான நடவடிக்கைகளில் இரண்டாம் உலகப் போர் முடிந்த தருணத்திலிருந்தே அமெரிக்கா ஈடுபட்டிருந்த இதே காலகட்டத்தில், அதனை எதிர்த்து நின்ற சோசலிச முகாமில் தோன்றிய பாரிய பின்னடைவு மிகவும் முக்கியமானது.

ஸ்டாலின் மறைவிற்குப் பின் அரசு முதலாளித்துவப் பாதைக்குத் திரும்பிய சோவியத் மெல்ல மெல்ல தானே ஒரு ஏகாதிபத்தியமாக வளரத் தொடங்கியது. சீனாவின் தலைமையிலான சோசலிச முகாம் என்பது ஒப்பளவில் சிறியதாகவே இருந்தது. ரசிய சமூக ஏகாதிபத்தியமோ உலக மேலாதிக்கத்திற்கு அமெரிக்காவுடன் போட்டி போடும் இன்னொரு வல்லரசானது.

உலக வங்கி, ஐ.எம்.எஃப் ஆகியவற்றுக்கு இணையாக, டாலருக்குப் பதில் ரூபிளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார - வர்த்தக வலைப்பின்னல்கள், இராணுவக் கூட்டு ஒப்பந்தங்கள் என்று தனது தலைமையில் இன்னொரு முகாமை ரசியா உருவாக்கியது. அமெரிக்க எதிர்ப்பு தேசிய விடுதலை இயக்கங்களை ஆதரித்து அவற்றைத் தனது முகாமுக்குள் இழுத்தது. ஆயுதப் போட்டியில் குறிப்பாக அணு ஆயுதப் போட்டியில் இறங்கி பொருளாதாரத்தை இராணுவமயமாக்கியது. அமெரிக்காவுக்குப் போட்டியாக உலகெங்கும் இராணுவத் தளங்களை நிறுவியது.

70களின் அமெரிக்க எதிர்ப்புக் கிளர்ச்சிகளும், அமெரிக்காவின் தோல்விகளும் ரசிய வல்லரசுக்குத் தெம்பூட்டியபோதும், பொருளாதார மேலாதிக்கத்தில் அமெரிக்காவுடன் போட்டி போடவியலாத பலவீனம், இராணுவச் செலவினங்கள் தோற்றுவித்த சுமை ஆகியவற்றுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தது ரசியா.

ரசிய மேலாண்மையின் நிருபனமாகவும் அதன் சரிவைத் துரிதப்படுத்தும் துவக்கமாகவும் அமைந்தது 1979-இல் ரசியா நடத்திய ஆப்கான் ஆக்கிரமிப்பு. அமெரிக்காவுக்கோ இந்த ரசிய ஆக்கிரமிப்பு என்பது வியத்நாம், ஈரான், நிகராகுவா ஆகியவற்றின் வரிசையில் ஒரு கூடுதல் தலைக்குனிவானது.

### பதிலிப் போர் - ரீகனின் தந்திரம்

''மீண்டும் உலக அரங்கில் அமெரிக்காவைத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்வேன்'' என்று முழங்கினார் 1980இல் பதவிக்கு வந்த ரீகன். தேங்கிக் கிடந்த பொருளாதாரத்தை இயங்கச் செய்ய தனியார்மயம், தொழிற்சங்க உரிமைகளைப் பறித்தல், ஆயுத விற்பனையை அதிகரித்தல்; நட்சத்திரப் போர்த் திட்டம் போன்ற அதிரடி இராணுவ நடவடிக்கைகள் மூலம் ரசியாவின்

www.padippakam.com



இராணுவச் செலவினத்தை அதிகரிக்கத் தூண்டி அதனை பொருளாதாரத் தற்கொலைக்கு இழுத்து விடுதல்; உலகெங்கும் அமெரிக்காவின் செல்வாக்கு மண்டலங்களை உறுதி செய்து இழந்த பெருமிதத்தை நிலைநாட்டுதல் - என அமைந்தது ரீகனின் உலகமேலாதிக்கத் திட்டம்.

ஆப்கானிஸ்தானில் ரசிய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போரிட்டு வந்த முஜாகிதீன்களைப் பயிற்றுவிக்கவும், ஆயுதம் கொடுக்கவும் பல கோடிக்கணக்கான டாலர்களைச் செலவிட்டது ரீகன் அரசு. அமெரிக்கா நடத்திய பதிலிப் போர்களிலேயே மிகவும் பிரம்மாண்டமானது ஆப்கன் போர்.

நிகராகுவாவின் சாண்டினிஸ்டா ஆட்சியைக் கவிழ்க்கவும் இதே தந்திரத்தை அமெரிக்கா கையாண்டது. ஆட்சியிலிருந்து தூக்கியெறியப்பட்ட சர்வாதிகாரி சொமோசாவின் கூலிப்படைக்கு பயிற்சியும் ஆயுதமும் அளித்து இடைவிடாமல் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டியது.

சாண்டினிஸ்டா அரசு அமல்படுத்திய நிலச்சீர்திருத்தம் மற்றும் பல மக்கள் நலத் திட்டங்கள் காரணமாக அது மக்கள் மத்தியில் பெற்று வந்த செல்வாக்கு அமெரிக்காவை அச்சுறுத்தியது. எல்சால்வடார், ஹோண்டுராஸ், கவுதமாலா போன்ற அருகாமையிலுள்ள மத்திய அமெரிக்க நாடுகளிலும் பிற லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் மிக மோசமான வறுமையும் அடக்குமுறையும் தலைவிரித்தாடும் போது இத்தகையதொரு 'ஆபத்தான முன்மாதிரி' தனக்கு அருகிலேயே உருவாவதை அமெரிக்காவால் எப்படி அனுமதிக்க இயலும்? "உடனே அறுத்தெறிய வேண்டிய புற்றுநோய் அமெரிக்க நிலப்பகுதியிலேயே உருவாகிவிட்டது" என்று அலறினார் அமைச்சர் ஜார்ஜ் ஷூல்ட்ஸ்.

காண்ட்ராஸ் என்ற சி.ஐ.ஏ.வின் கூலிப் படை குடியிருப்புகள், பாலங்கள், பள்ளிகள், மருத்துவமனைக்ளுக்கு குண்டு வைத்தது. ஆங்காங்கே வீடு புகுந்து மக்களைச் சுட்டுக் கொன்றது. உள்நாட்டுப் போரைச் சமாளிக்க இராணுவச் செலவுகளை அதிகரிக்கும் நிலைக்கு நிகராகுவா தள்ளப்பட்டது. கடனுதவிகளை நிறுத்துமாறு உலக வங்கியை நிர்ப்பந்தித்து நிகராகுவா பொருளாதாரத்தின் கழுத்தை நெறித்தது அமெரிக்கா. இத்தனைக்குப் பிறகும் சாண்டினிஸ்டா ஆட்சியைக் கவிழ்க்க இயலாமலும் நேரடியாக இராணுவத்தை அனுப்ப இயலாமலும் குமுறியது ரீகன் அரசு.

**லெபனானில் செருப்படி!**

1983-இல் லெபனான் மீது இசுரேல் நடத்திய ஆக்கிரமிப்புக்கும், பாலஸ்தீன




1949 சீனப்புரட்சி: அமெரிக்கத் திமிருக்கு மரண அடி!



ஸ்டாலின் - ஏகாதிபத்திய முகாமுக்கு எதிராக சோசலிச முகாம், தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவு!



ஹோசிமின் - அமெரிக்காவை புறமுதுகு காட்ட வைத்த வியத்நாமின் வீரம்!



1959: அமெரிக்காவின் வாயிலிலேயே அதனை எதிர்த்து வென்ற வீரஞ்செறிந்த கியூபா.

படிப்பகம்

www.padippakam.com



விடுதலை இயக்கத்தின் மீது இசுரேல் தொடுத்த தாக்குதலுக்கும் ஆதரவாகத் தன் படைகளை அனுப்பியது ரீகன் அரசு. அமெரிக்க இராணுவ முகாமின் மீது இசுலாமிய அமைப்பினர் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 240 அமெரிக்கத் துருப்புகள் வெடித்துச் சிதறவே பீதியடைந்து இடத்தைக் காலி செய்தது அமெரிக்கா.

மீண்டும் அமெரிக்காவைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்வதாகச் சவடால் அடித்த ரீகன் யாரையாவது அடித்து அமெரிக்கத் தலையை நிமிர்த்த வேண்டியிருந்தது. வெறும் ஒன்றேகால் லட்சம் பேர் மக்கள் தொகை கொண்ட (90 சதவீதம் கருப்பின மக்கள்) மேற்கிந்தியத் தீவான கிரெனடா மீது படையெடுத்தது அமெரிக்க இராணுவம்.

வளைகுடாவிலிருந்து வரும் அமெரிக்க எண்ணெய்க் கப்பல்களுக்கு கிரனடாவின் ரசிய ஆதரவு அரசினால் ஆபத்து ஏற்படக்கூடும் என்று கூறி கிரெனடா மீது குண்டுமழை பொழிந்தது. பிரதமர் மாரிஸ் பிஷப்பைக் கொலை செய்து தனது 'வலிமையை' நிரூபித்தது அமெரிக்கா.

வேறெங்கும் நேரடி இராணுவத் தலையீடு செய்து தனது வலிமையை ரீகனால் நிரூபிக்க முடியவில்லையெனினும் ரசிய ஆதரவு நாடுகளில் தனது கூலிப் படைகள் மூலம் பதிலிப் போர் நடத்துவது முன்னெப் போதும் இல்லாத அளவு ரீகன் ஆட்சிக் காலத்தில் அதிகரித்தது.

எத்தியோப்பியா, நமீபியா, கென்யா, சூடான், மேற்கு சகாரா ஆகிய ஆப்பிரிக்க நாடுகளில் சி.ஐ.ஏ.வால் பயிற்றுவிக்கப் பட்ட கூலிப்படைகள் பயங்கரவாத நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டன. தென் ஆப்பிரிக்க நிறவெறி அரசுடன் கூட்டுச் சேர்ந்து அங்கோலாவிலும் மொசாம்பிக்கிலும் பதிலிப் போர் நடத்தியது அமெரிக்க அரசு.

வியத்நாம் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அமெரிக்க சமூகத்தில் தோற்றுவித்த ஜனநாயக உணர்வையும், வியத்நாம் தோல்வி தோற்றுவித்த அவமானத்தையும் ஒரே நேரத்தில் ஒழித்து ஆதிக்க வெறியைத் தூண்டும் 'ராம்போ' வகை ஹாலிவுட் படங்கள் சரம் சரமாக வெளிவரத் தொடங்கின.

மத்திய அமெரிக்க நாடுகளான எல்சால்வடார், கவுதமாலாவில் அமெரிக்க ஆதரவு இராணுவ ஆட்சிகள் நாட்டையே கொலைக் களமாக்கிக் கொண்டிருந்தன. இராணுவ ஆட்சியை எதிர்த்த பாதிரியார்களும் கொலை செய்யப்பட்டனர். கன்னிகா ஸ்திரீகள் கற்பழிக்கப்பட்டனர்; பத்திரிகை அலுவலகங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. எல்லாவற்றையும் சி.ஐ.ஏ. அதிகாரிகள் உடனிருந்து இயக்கினர்.

சி.ஐ.ஏ. கைக்கூலியும், பனாமாவின் சர்வாதிகாரியுமான நொரீகோ சி.ஐ.ஏ.வுக்குத் தெரியாமல் நிகராகுவாவின் "காண்ட்ராஸ்" கூலிப் படையுடன் போதை மருந்து - ஆயுத வர்த்தகத் தொடர்பு வைத்திருப்பதை அறிந்தவுடன் பனாமாவின் மீது படையெடுத்து விமானத் தாக்குதல் நடத்தியது அமெரிக்க ராணுவம். தனது கையாள் மீது அமெரிக்கா எடுத்த இந்த 'ஒழுங்கு நடவடிக்கை'யில் 2000 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். நொரிகோ கைது செய்யப்பட்டு அமெரிக்கா கொண்டு செல்லப்பட்டான்.

பனாமா, கிரெனடா ஆகிய நாடுகள் மீது நடத்திய 'வெற்றிகரமான' போர்கள், உலகெங்கும் நடத்திய எண்ணற்ற பதிலிப் போர்கள், ரசியாவுடனான ஆயுதக் குவிப்புப் போட்டிகள் ஆகியவற்றின் மூலம் அமெரிக்காவை 'தலை நிமிரச் செய்ய' 1980-90இல் ரீகன் செய்த இராணுவச் செலவு 2,848 பில்லியன் டாலர்கள். 1970-80இல் வியத்நாம் மீது ஆக்கிரமிப்புப் போர் நடத்திய பத்தாண்டுகளில் ஆன இராணுவச் செலவோ 887 பில்லியன் டாலர்கள் மட்டுமே.

அமெரிக்கா பெரும் கடனாளியாவதற்கு இது வழிவகுத்த போதிலும், இந்தப் பத்தாண்டுகளின் இறுதியில் சோவியத் ஒன்றியம் வீழ்ந்தது; ஆப்கான் ஆக்கிரமிப்பு தோல்வியில் முடிந்தது; கிழக்கு ஐரோப்பா வீழ்ந்தது; சோவியத் ஒன்றியம் சிதறியது. போலி சோசலிசமும் ஒழிந்து முழுமையான முதலாளித்துவம் நிலைநாட்டப்பட்டது.

உலகின் கேள்விக்கிடமற்ற ஒற்றைத் துருவ ஆதிக்க சக்தியாக, உலக போலீசுக்காரனாக அமெரிக்கா தன்னை நிலைநாட்டிக் கொள்வதுடன் தொடங்குகின்றது - மறுகாலனியாக்கக் காலம் எனும் சமீபத்திய அத்தியாயம்.

### மறுகாலனியாக்கம்!

அமெரிக்க - சோவியத் வல்லரசுகளுக்கிடையேயான பனிப்போரும் பதிலிப் போர்களும் உக்கிரமாக நடந்து கொண்டிருக்கும்போதே, 80-களின் துவக்கத்திலிருந்தே பொருளாதார அரங்கில் ரசியா தோற்கத் தொடங்கிவிட்டது. உலக வங்கி, ஐ.எம்.எஃப் போன்ற நிறுவனங்கள் ரசிய ஆதரவு நாடுகளில் கணிசமானவற்றைத் தம் பிடிக்குள் கொண்டு வந்துவிட்டன.

பன்னாட்டு நிறுவனங்களின் பூதாகாரமான உலகு தழுவிய வளர்ச்சியானது உற்பத்தி, உழைப்புப் பிரிவினை, உழைப்புச் சந்தை, மூலதனம் ஆகிய அனைத்தையும் உலகமயமாக்கத் தொடங்கிவிட்டது. விஞ்ஞானத் தொழில் நுட்பப் புரட்சி, குறிப்பாக தகவல் தொழில் நுட்பப் புரட்சி இந்தப் போக்கை மேலும் விரைவுபடுத்தியது. ஒரே உலகச் சந்தைக்கும், அதனைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தும் உலக வர்த்தகக் கழகத்துக்குமான அடிப்படை உருவாகிவிட்டது.

ஆனால் பொருளாதார ரீதியில் உலக நாடுகளின் மீது தனிப்பெரும் மேலாண்மை செலுத்தும் நிலையில் அமெரிக்கா இல்லை. மாறாக, கடனாளியாக இருந்தது. ஜெர்மனி (ஐரோப்பிய ஒன்றியம்), ஜப்பான் போன்ற வல்லரசுகள் பொருளாதார ரீதியில் அமெரிக்காவை விஞ்சத் தொடங்கின.

கடனாளியான நிலையில், பனிப்போர் எதிரியான ரசியாவும் வீழ்ந்துவிட்ட நிலையில் அமெரிக்கா தனது இராணுவச் செலவுகளைக் குறைத்திருக்க வேண்டும்; மாறாக அதிகரித்தது.

உலகின் ஏழை நாடுகளையும், தனக்குப் பணிய மறுக்கும் நாடுகளையும், பிராந்திய வல்லரசுகளையும் மிரட்டித் தாக்கிப் பணிய வைப்பது; தன்னுடைய 'சேவைக்கு' மற்ற நாடுகளிடம் குறிப்பாக ஜப்பான், ஜெர்மனி, பிரான்சு போன்ற நாடுகளிடமும் நேட்டோ கூட்டாளிகளிடமும் கப்பம் வசூலிப்பது என்ற ரவுடியின் வேலையை மேற்கொள்ளத் தொடங்கியது அமெரிக்கா,

### வளைகுடாப் போர் - அமெரிக்க மேலாதிக்கத்தின் பிரகடனம்

1991-இல் ஈராக்கிற்கு எதிரான வளைகுடாப் போரை அறிவித்த ஜார்ஜ் புஷ் "அடுத்த அமெரிக்க நூற்றாண்டு துவங்கி விட்டது" என்றார்.

அமெரிக்க நூற்றாண்டின் துவக்கம் இரண்டு லட்சம் ஈராக்கியர்களை உடனே கொன்றது. அங்கே வீசப்பட்ட அணு ஆயுதங்களும், பொருளாதாரத் தடையும் பல லட்சம் மக்களை ஆண்டுதோறும் கொன்று வருகின்றன. போர்ச் செலவை குவைத், சவூதி அரேபியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலையில் கட்டியதுடன் ஈராக் மீது தண்டத்தொகை விதித்து வசூலித்து வருகிறது அமெரிக்க அரசு.

1991-இல் ஈராக் ஆக்கிரமிப்பு; 1992-இல் 'அமைதியை' நிலைநாட்ட சோமாலியாவில் தலையீடு; 1992-இல் யூகோஸ்லாவியா மீது கப்பற்படை முற்றுகை; 1993-இல் போஸ்னியாவில் குண்டு வீச்சு; 1994-இல் ஹெய்தியில் பொம்மையாட்சியை நிறுவுவதற்காகத் தலையீடு; 1995-இல் குரோஷியாவில்

www.padippakam.com



குண்டுவீச்சு; 1996-இல் காங்கோவில் சர்வாதிகாரி மொபுடுவைக் காப்பாற்ற இராணுவத் தலையீடு; 1997-இல் லைபீரியாவிலும் அல்பேனியாவிலும் வெளிநாட்டவர்களைக் காப்பாற்றுவது என்ற பெயரில் தலையீடு; 1998- இரசாயன ஆயுதம் தயாரிப்பதாகப் பொய்க் குற்றம் சாட்டி சூடான் மீது ஏவுகணைத் தாக்குதல்; பின்லாடனின் முகாமைத் தாக்குவது என்ற பெயரில் ஆப்கான் மீது ஏவுகணைத் தாக்குதல்; 1998 இரசாயன ஆயுதம் தயாரிப்பதாகப் பொய்க்குற்றம் சாட்டி ஈராக் மீது மீண்டும் ஏவுகணைத் தாக்குதல்; 1999-இல் யூகோஸ்லாவியா மீது படையெடுப்பு, அணு ஆயுதத் தாக்குதல்; 2000 ஏமனில் அமெரிக்கக் கப்பல் தாக்கப்பட்டதற்காகக் கடற்படை மிரட்டல்; 2001 மாசிடோனியாவில் 'அமைதி' ஏற்படுத்த இராணுவத் தலையீடு; தற்போது ஆப்கானிஸ்தான்...

உலகில் எல்லா மூலைகளிலும் அமெரிக்க இராணுவத் தளங்கள் உலக மக்களை அச்சுறுத்துகின்றன. ஐரோப்பாவில் ஒரு லட்சம் துருப்புகள், பசிபிக் கடலில் ஒரு லட்சம் துருப்புகள், வளைகுடாவில் 25,000 துருப்புகள், இந்துமாக் கடலில் கடற்படைத் தளம், பிலிப்பைன்சில் தளம், தென் கொரியாவில் தளம், ஜப்பானில் டோக்கியோ நகரம் உள்ளிட்டு எங்கும் அமெரிக்க இராணுவத்தின் 'பாதுகாப்பு'!

ரசியாவின் வீழ்ச்சிக்குப் பிறகுப் பிறந்திருக்கும் புதிய 'அமெரிக்க நூற்றாண்டில்' அமெரிக்க அரசின் உலகக் கடமையையும் தொழிலையும் பற்றி சிகாகோ டிரிப்யூன் என்ற அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் நாளேடு கீழ்க்கண்டவாறு பொருள்பட எழுதியது:

"ஒரு அடியாள்படையாகச் செயல்பட நாம் தயாராக இருக்க வேண்டும். பாதுகாப்புச் சந்தையில் (அதாவது இராணுவ வலிமையில்) நாம் பெற்றிருக்கும் ஏகபோக வலிமையை, நமது போட்டியாளர்களுக்கு (ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகள்) விற்பதன் மூலம், உலகப் பொருளாதாரக் கட்டமைப்பின் மீது நம் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும்."

உலகின் மிகப் பெரிய கிரிமினலும், ரவுடியும், போலீசும் - இவையனைத்தும் ஒன்றாய்ச் சேர்ந்த பயங்கரவாதியும் யார் என்பதற்கு இதைவிட வேறு விளக்கமே தேவையில்லை.

இந்த பயங்கரவாதிக்கெதிரான உலகப் போரைத் துவங்குவதொன்றுதான் உலக நாடுகளும், மக்களும் நீடித்த சுதந்திரம் பெறுவதற்கான ஒரே வழி.

●




தற்போது இங்கிலாந்தில் இருக்கும் சிலி சர்வாதிகாரி பினோசெட்டைத் தண்டிக்கக் கோரும் சிலி மக்கள் ஆர்ப்பாட்டம். உள்ளே சி.ஐ.ஏ. உதவியுடன் பினோசெட்டால் கொலை செய்யப்பட்ட அதிபர் அலண்டே.



ஜப்பான் - அமெரிக்க இராணுவத் தளத்தை வெளியேற்றக் கோரும் ஆர்ப்பாட்டம்.



கொலம்பியா: முன்னேறுகிறார்கள் அமெரிக்க எதிர்ப்பு கொரில்லாக்கள்.

www.padippakam.com






## ம.க.இ.க - வி.வி.மு - பு.மா.இ.மு - பு.ஜா.தொ.மு

# போர் எதிர்ப்பு – பொடோ எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

செப்.11 தாக்குதலை முகாந்திரமாகக் கொண்டு அமெரிக்க அரசு தூண்டிய போர் வெறியை எதிர்த்து உலகெங்கும் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

"அமெரிக்காவின் மீதான தாக்குதலுக்கு மகிழ்ச்சி கொள்வோம்" "உலகின் முதல்நிலை பயங்கரவாதி அமெரிக்காதான்" - என்பன போன்ற முழக்கங்கள் அடங்கிய சுவரொட்டிகள் செப்.11 தாக்குதல் நடந்தவுடனே எமது அமைப்புகளின் சார்பில்தமிழகம் முழுவதும் ஒட்டப்பட்டன. இந்த முழக்கங்களை விளக்கும் சிறு வெளியீடுகள் சுமார் 40,000 பிரதிகள் தமிழகமெங்கும் விற்பனை செய்யப்பட்டன.

நியூயார்க் தாக்குதலைக் 'கடுமையாகக் கண்டித்து' விட்டு, அதன் பிறகுதான் அமெரிக்காவின் தவறுதலை விமரிசிக்க வேண்டும் என்ற கோழைத்தனமான சந்தர்ப்பவாதத்திற்கு நேர் எதிரான அணுகுமுறையைக் கொண்டிருந்தது எமது பிரச்சாரம்.

***

ஆப்கான் மீதான ஆக்கிரமிப்பு தொடங்கியவுடனே 'அமெரிக்க பயங்கரவாதியே, ஆப்கானை விட்டு வெளியேறு' என்ற முழக்கத்துடன் சென்னை, திருச்சி, தஞ்சை, நெய்வேலி, கம்பம், மதுரை, ஈரோடு, தர்மபுரி, கோவை ஆகிய நகரங்களில் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இராணுவ ஆட்சி நடைபெறும் பாகிஸ்தானில் கூட அமெரிக்கத் தூதரக வாயிலில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. ஆனால் தமிழக அரசு சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரக வட்டாரத்திலேயே ஆர்ப்பாட்டம் நடத்தக் கூடாதென அனுமதி மறுத்து 'இந்திய ஜனநாயகத்தின்' யோக்கியதையை நிரூபித்தது.

நூற்றுக்கணக்கான தோழர்கள் பங்கு கொண்ட இந்த ஆர்ப்பாட்டங்களில், அமெரிக்காவின் உலக மேலாதிக்க வெறியை அம்பலப்படுத்தியும் எதிர்த்தும் உரையாற்றினார்கள் பேச்சாளர்கள். ஜார்ஜ் புஷ்ஷைக் கொடிய பயங்கரவாதியாகச் சித்தரிக்கும் காட்சி விளக்கத்துடன் திருச்சியில் ஊர்வலம் நடைபெற்றது. சென்னையில் 3000 போர் எதிர்ப்புச் சுவரொட்டிகளும், ஆட்டோ பிரச்சாரமும் உள்ளாட்சித் தேர்தல் கூச்சலை மீறிப் போர் எதிர்ப்பு முழக்கத்தை மக்களிடம் கொண்டு சென்றன.

***

உலக பயங்கரவாதி அமெரிக்காவின் அடியொற்றி 'பொடோ'வை அவசரச் சட்டமாக அறிவித்தது இந்து மதவெறி பாரதீய ஜனதா அரசு. பயங்கரவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரில் மறுகாலனியாக்கத்துக்கு எதிரான அனைத்துப் போராட்டங்களையும் நசுக்குவதை நோக்கமாகக் கொண்ட இந்தக் கருப்புச் சட்டத்துக்கு எதிராக நவம்பர் -7 ரசியப் புரட்சி நாளன்று தமிழகமெங்கும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. சென்னையில் பொதுக்கூட்டமும், திருச்சி - தஞ்சை நகரங்களில் கண்டனப் பேரணியும் நடைபெற்றன.

ஆப்கான் போர் முடிவடைந்தாலும், மறுகாலனியாக்கம் அமெரிக்க மேலாதிக்கத்திற்கெதிரான நமது போராட்டம் தொடரும்.

---



# ஒரு பயங்கரவாதக் கொலை!

அமெரிக்காவின் தீக்குண்டுகள் ஆப்கான் மக்களை எரித்துக் கொண்டிருக்கின்றன. வேட்டுச்சத்தம் ஏதுமின்றி, மவுனமாக ஆயிரக்கணக்கான மக்களைக் கொலை செய்து கொண்டிருக்கிறது அமெரிக்காவால் வழி நடத்தப்படும் பயங்கரவாதப்பொருளாதாரக் கொள்கை.

திருச்சி தெப்பக்குளம், என்.எஸ்.சி.போஸ் சாலை ஆகிய பகுதிகளில் தரைக்கடை வியாபாரம் செய்து வந்த சிறிய, ஏழை வியாபாரிகளை, நகரை அழகுபடுத்துவது என்ற பெயரில் மாநகராட்சி அப்புறப்படுத்தியதை எதிர்த்து தரைக்கடை வியாபாரிகள் சங்கம் விடாப்பிடியாகப் போராடி வந்தது. வாழவழியின்றி விரட்டப்பட்ட வியாபாரிகள் இந்தத் தீபாவளிக்கு முன் சில நாட்களாவது கடைபோட அனுமதிக்குமாறு மாநகராட்சி ஆணையரிடம் கோரியுள்ளனர். உலக வங்கியிடம் மாநகராட்சி ரூ. 230 கோடி கடனுக்கு விண்ணப்பித்திருப்பதாகவும் தரைக்கடை போன்ற ஆக்கிரமிப்புகள் இருந்தால் உலகவங்கி கடன் தராது என்றும் கூறி நான்கு நாட்கள் கடை போடுவதற்குக் கூட ஆணையர் கருத்தையா பாண்டியன் அனுமதி மறுத்திருக்கிறார். "இப்படி நீங்கள் இரக்கமின்றி நடந்து கொண்டால் நாங்கள் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை" என்று வியாபாரிகள் கூறியதற்கு "செத்தால் சாவுங்கள். நான் எதுவும் செய்ய முடியாது" என்று திமிராகப் பதில் சொல்லியிருக்கிறான் அந்த ஆணையர்.

ஏற்கனவே ஆர்ப்பாட்டம், மறியல், தடையை மீறிக் கடை போடுவது, கருணாநிதி காரை மறித்தது உள்ளிட்ட பல போராட்டங்கள் நடத்தியும் தீர்வு காண முடியாத நிலையில், திருச்சி தரைக்கடை வியாபாரிகள் சங்கத்தைச் சேர்ந்த அசோக்குமார் என்ற இளைஞர் 10.11.2001 அன்று நடத்தப்பட்ட நகராட்சிக்கெதிரான தீக்குளிப்புப் போராட்டத்தில் படுகாயமுற்று 16.11.2001 அன்று மருத்துவமனையில் இறந்துவிட்டார். அவருக்கு நமது அஞ்சலியையும், அவரது குடும்பத்தாருக்கு நம் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



# இருபதாம் நூற்றாண்டில் அமெரிக்க ஆக்கிரமிப்புகள் மற்றும் தலையீடுகள்

## மத்திய அமெரிக்க நாடுகள்

### கவுதமாலா

**1920** - விவசாயிகளின் புரட்சிக்கு எதிராக இராணுவத் தலையீடு

**1954** - அமெரிக்க நிறுவனத்தின் நிலங்களை தேசியமயமாக்கி நிலவிநியோகம் செய்ததற்கு எதிராக ஆக்கிரமிப்பு - குண்டு வீச்சு - அணு ஆயுத மிரட்டல்

**1966-67** - மக்கள் எழுச்சி - இராணுவத் தாக்குதல் 7000 பேர் கொலை - அமெரிக்க ஆதரவு இராணுவ ஆட்சியில் 1,50,000 விவசாயிகள் கொலை - 440 கிராமங்கள் தரைமட்டம்.

### டொமினிகன் குடியரசு

**1903-04** - இராணுவத் தலையீடு

**1914** - இராணுவத் தலையீடு

**1916-24** - 8 ஆண்டு ஆக்கிரமிப்பு 18,000 பேர் கொலை

**1965-66** - குண்டு வீச்சு -பொம்மை ஆட்சியை நிறுவ இராணுவத் தலையீடு

### ஹோண்டுராஸ்

**1903** - புரட்சியை நசுக்க ஆக்கிரமிப்பு

**1907** - நிகராகுவா மீது போர் தொடுக்க இராணுவத் தளமாக

**1911-12** - உள்நாட்டுப் போரில் அமெரிக்க சொத்துக்களைப் பாதுகாக்க இராணுவத் தலையீடு

**1919,1924,1925** - தேர்தலில் பொம்மை ஆட்சியை நிறுவத் தலையீடு

**1983-89** - நிகராகுவா, எல் சால்வடார், புரட்சியை ஒடுக்க இராணுவத் தளமாக

### பனாமா

**1901-14** - பனாமா கால்வாய்க்காக இராணுவத் தலையீடு

**1908, 1912,1918-20** - தேர்தலில் பொம்மை ஆட்சியை நிறுவ இராணுவத் தலையீடு

**1925,1958** - தொழிலாளர் போராட்டத்தை ஒடுக்க துப்பாக்கிச் சூடு

**1964** - பனாமா கால்வாயை விடுவிக்க போராடியவர்கள் மீது துபபாக்கிச் சூடு

**1989-90** - குண்டுவீச்சு - நகரங்கள் தரை மட்டம் - 4000 பேருக்கு மேல் கொலை - அதிபர் நொரிகோ கைது

### கியூபா

**1901** - ஸ்பெயினின் காலனியாதிக்கத்திற்கு எதிரான புரட்சி வெற்றி பெற்றவுடன் அமெரிக்க தலையீடு

**1906-09** - தேர்தலில் பொம்மை ஆட்சி நிறுவத் தலையீடு

**1912** - அமெரிக்கச் சொத்துகளைப் பாதுகாக்கத் தலையீடு

**1917-1934** - மேலே உள்ளபடியே

**1934** - ஆட்சிக் கவிழ்ப்பு - பொம்மை ஆட்சி

**1961** - 1959 புரட்சியில் வென்ற காஸ்டிரோ ஆட்சியைக் கவிழ்க்க படையெடுப்பு - தோல்வி

**1962** - அணு ஆயுத மிரட்டல்

### நிகராகுவா

**1907** - அமெரிக்கச் சொத்துகளைப் பாதுகாக்க தலையீடு

**1910** - ஆக்கிரமிப்பு - பொம்மை ஆட்சி

**1912-33** - அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக சாண்டினோ தலைமையில் தேசிய விடுதலைக்காக 20 ஆண்டுகள் கொரில்லாப் போரின் தோல்வி - 1979 வரை இராணுவப் பொம்மை ஆட்சி.

**1981-90** -1979-இல் வெற்றி பெற்ற சாண்டினிஸ்டா புரட்சியை ஒழிக்க மறைமுகப் போர் - சுமார் 20,000 பேர் கொலை.

### ஹெய்தி

**1914-34** - ஆக்கிரமிப்பு - காலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டத்தின் மீது தொடர்ந்த ஒடுக்கு முறை

**1994-96** - 'ஜனநாயகத்தை' நிலைநாட்ட கடற்படை, இராணுவ ஆக்கிரமிப்பு.

### எல்சால்வடார்

**1932** - விவசாயிகள் புரட்சியை நசுக்க கடற்படை ஆக்கிரமிப்பு - இராணுவ ஆட்சிக்குத் தொடர்ந்து பயிற்சி, ஆயுத சப்ளை

**1981-82** - இடதுசாரி கொரில்லாக்களின் போராட்டத்திற்கெதிராக விமானப்படை தாக்குதல் - 13,000 மக்கள் கொலை.

### போர்ட்டோரிகோ

**1950** - அமெரிக்க காலனியாதிக்கத்திற்கெதிரான மக்கள் எழுச்சியை நசுக்க இராணுவ நடவடிக்கை.

### கிரடை

**1983-84** - ஒரு லட்சம் மக்கள் தொகை மட்டுமே கொண்ட சின்னஞ்சிறிய மத்திய அமெரிக்க நாட்டின் மீது படையெடுப்பு - பல்லாயிரம் மக்கள் மற்றும் பிரதமர் கொலை - ஆக்கிரமிப்புக்குக் காரணம்: இடதுசாரி ஆட்சியால் அமெரிக்க எண்ணெய்க் கப்பல்களுக்கு ஆபத்து என்ற பொய்ப் புகார்.

## ஆப்பிரிக்கா

### சயர் (காங்கோ)

**1961** - சி.ஐ.ஏ. தலையீடு - பிரதமர் பாட்ரிஸ் லுமும்பா கொலை.

**1964** - மக்கள் எழுச்சியை நசுக்க இராணுவத் தலையீடு

**1965** - சி.ஐ.ஏ. நடத்திய ஆட்சிக் கவிழ்ப்பிற்குப் பின் இராணுவ சர்வாதிகாரி மொபுடு அதிபராதல்

**1996-97** - மீண்டும் இராணுவத் தலையீடு

### அங்கோலா

**1976-92** - அமெரிக்காவையும் தெ.ஆ. நிறவெறி அரசையும் தவிர உலக நாடுகள் அனைத்தும் அங்கீகரித்த அங்கோலா மக்கள் குடியரசின் மீது தொடர்ந்த போர் - யூனிடா கூலிப்படைக்கு ஆயுத சப்ளை, நிதி உதவி - பல ஆயிரம் சிவிலியன்கள் படுகொலை.

### லிபியா

**1981** - ரசிய சார்பு கடாபி ஆட்சி - இரண்டு லிபிய விமானங்கள் அமெரிக்க கடற்படையால் சுட்டு வீழ்த்தப்படுதல்.

**1986** - பாலஸ்தீன விடுதலை இயக்க ஆதரவு, ஈரான் - ஈராக் போரில் ஈரான் ஆதரவு நிலை எடுத்ததற்காக விமானப் படைத் தாக்குதல் - கடாபி ஆட்சியைக் கவிழ்க்க முயற்சி - தோல்வி.

படிப்பகம்

www.padippakam.com



1989 - மீண்டும் இரு லிபிய விமானங்கள் கடற்படையால் சுட்டு வீழ்த்தப்படுதல்.

### லைபீரியா

1980 - சி.ஐ.ஏ. - ஆட்சிக் கவிழ்ப்பு

1990 - அமெரிக்க ஆதரவு இராணுவ ஆட்சிக்கெதிராகத் தோன்றிய உள்நாட்டுப் போரில் வெளிநாட்டவர்களைப் பாதுகாப்பது என்ற பெயரில் இராணுவத் தலையீடு.

1997 - மீண்டும் அதே காரணத்திற்காக இராணுவத் தலையீடு.

### சோமாலியா

1992-94 - உள்நாட்டுப் போரில் ஒரு குழுவினருக்கு ஆதரவாக இராணுவத் தலையீடு

### சூடான்

1998 - இசுலாமியப் பயங்கரவாதிகளுக்கு இரசாயன ஆயுதம் தயாரிப்பதாகக் குற்றம் சாட்டி மருந்துத் தொழிற்சாலை மீது ஏவுகணைத் தாக்குதல் - ஏராளமான மக்கள் கொலை - குற்றச்சாட்டு பொய் என்று பிறகு நிரூபிக்கப்பட்டு சி.ஐ.ஏ. ஏற்றுக் கொண்டது - ஐ.நா.வில் பிரச்சினையை எழுப்ப அமெரிக்கா முட்டுக்கட்டை.

### மொசாம்பிக்

1980-90 - தென் ஆப்பிரிக்க நிறவெறி அரசு, அமெரிக்க ஆதரவுடன் ரினாமோ கூலிப்படை பயங்கரவாதம் - பல்லாயிரம் மக்கள் படுகொலை.

### நமீபியா

1957-88 - நமீபியா விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க தென் ஆப்பிரிக்க அரசுக்கு அமெரிக்க உதவி.

## தென் அமெரிக்கா

### மெக்சிகோ

1913 - புரட்சியை ஒட்டி அமெரிக்கப்படைகள் வெளியேற்றம்.

1914-18 - தேசிய அரசுக்கு எதிராகத் தொடர்ந்து ஆக்கிரமிப்புத் தாக்குதல்கள்.

### உருகுவே

1947 - குண்டு வீச்சு விமானங்கள் மற்றும் அணுகுண்டு மிரட்டல்

### சிலி

1973 - தேர்தலில் வெற்றி பெற்ற இடதுசாரி அதிபர் அலண்டே அமெரிக்க முதலாளிகளின் பிடியிலிருந்த செம்புச் சுரங்கங்களை நாட்டுடைமையாக்குதல், நிலச் சீர்திருத்தம் - சி.ஐ.ஏ. சதியின் மூலம் அலண்டே கொலை - பினோசெட் இராணுவ ஆட்சியில் சில மாதங்களில் 40,000 மக்கள் படுகொலை.

### பொலிவியா

1947 - இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு - 30,000 பேர் கொலை.

1986 - போதை மருந்து (கொகெய்ன்) ஒழிப்பு என்ற பெயரில் நேரடி இராணுவத் தலையீடு - விவசாயிகளின் படுகொலை.

### கொலம்பியா

1948-57 - சி.ஐ.ஏ. பின்னணியில் இராணுவ ஆட்சி - கிராமங்கள் மீது நாபாம் குண்டு வீச்சு - 3 லட்சம் மக்கள் கொலை.

### பிரேசில்

1951 - எண்ணெய் வயல்களை தேசியமயமாக்கிய அதிபர் வர்காஸின் ஆட்சி சி.ஐ.ஏ. சதியால் கவிழ்ப்பு - அதிபர் தற்கொலை.

1964 - நிலச்சீர்திருத்தம் கொண்டு வந்த அதிபர் கௌலார்ட்டின் ஆட்சிக் கவிழ்ப்பு - சி.ஐ.ஏ. துணையுடன் இராணுவ ஆட்சி - 2,000 பேர் கொலை - சி.ஐ.ஏ. பயிற்சியில் 1,00,000 பேர் கொண்ட கொரில்லா எதிர்ப்பு இராணுவம்.

## ஆசியா

### கொரியா

1904-05 - கொரியாவுக்கான ஜப்பான் ரசியப் போரில் தலையீடு

1945-48 - தென் கொரியாவில் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகத் தலையீடு - ஆக்கிரமிப்பு - ஆந்த்ராக்ஸ், காலரா கிருமி யுத்தம் - 1 லட்சம் மக்கள் கொலை.

1950-53 - வடகொரியா மீது ஆக்கிரமிப்பு - வீடுகள் நகரங்கள் ஆலைகள் மீது குண்டுவீச்சு - 30 லட்சம் மக்கள் கொலை - இன்றும் தென் கொரியாவில் 40,000 துருப்புகள், 1000 அணு ஆயுதங்கள்.

### சீனா:

1911-41 - கடற்படை, துருப்புகள் தொடர்ந்த ஆக்கிரமிப்பு

1922-27 - காலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டத்தை ஒடுக்க மேலும் கடற்படை துருப்புகள்

1927-34 - நாடு முழுவதும் பரவலாக ஆக்கிரமிப்பு

1948-49 - கம்யூனிஸ்டு புரட்சி வெற்றி - துருப்புகள் வெளியேற்றம்

1958 - தைவானுக்கு ஆதரவாக சீனா மீது அணு ஆயுத மிரட்டல்

### ஜப்பான்

1945 - அமெரிக்க அணுகுண்டு வீச்சு - ஹிரோஷிமா 1,18,661 பேர், நாகசாகி 73,884 பேர் கொலை - சுமார் 1,50,000 பேர் படுகாயம்.

### ஈரான்

1946 - இராணுவத் தலையீடு - இரசியத் தலையீட்டைத் தடுக்க இரசியாவுக்கு எதிராக அணு ஆயுத மிரட்டல்

1953 - நாடாளுமன்ற ஆட்சியைக் கவிழ்த்து 'ஷா'வின் மன்னராட்சியை நிறுவ சி.ஐ.ஏ.யின் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு. ஷாவின் ஆட்சியில் ஆயிரக்கணக்கில் கம்யூனிஸ்டுகள் படுகொலை.

1980 - புரட்சியின் காரணமாக 1979-இல் அமெரிக்காவுக்கு ஓடிப் போன மன்னர் ஷா வை ஒப்படைக்கக் கோரி அமெரிக்க தூதரக ஊழியர்கள் பணயக் கைதிகளாக பிடித்து வைக்கப்படல் - மீட்க இராணுவம், கடற்படை தாக்குதல், அணு ஆயுத மிரட்டல் - இறுதியில் அமெரிக்காவுக்கு தோல்வி.

1984 - ஈரான், ஈராக் போரில் ஈராக்கிற்கு ஆதரவாக ஈரானின் இரண்டு பயணிகள் விமானங்களை அமெரிக்கப் போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தின - நூற்றுக்கணக்கான பயணிகள் சாவு.

1987-88 - போரில் ஈராக்குக்கு ஆதரவாக கடற்படைத் தலையீடு.

### பிலிப்பைன்ஸ்

1948-54 - உள்நாட்டு மக்கள் கிளர்ச்சியை நசுக்க ராணுவத் தலையீடு

1989 - மார்க்கோஸின் ஆட்சி தூக்கியெறியப்பட்டு, ஆட்சிக்கு வந்த அகினோவைக் கவிழ்க்க 5 முறை முயற்சி - விமானப்படை மிரட்டல்.

### வியத்நாம்

1954 - பிரெஞ்சு காலனியாதிக்கத்தை எதிர்த்து கம்யூனிஸ்டுகளின் விடுதலைப் போராட்டம் வெற்றி பெறும் நிலையில் பிரான்சுக்கு இராணுவ உதவி - வியத்நாமுக்கு அணு குண்டு மிரட்டல்

1960-75 - 5.5. லட்சம் துருப்புகள், கடற்படை, விமானப்படை தாக்குதல் - 30 லட்சம் மக்கள் கொலை - இருமுறை அணு ஆயுத மிரட்டல் - மக்கள் மீது ரசாயன ஆயுதங்களால் தாக்குதல்

படிப்பகம்

www.padippakam.com

### லாவோஸ்

1962 - கம்யூனிஸ்டு கொரில்லா போராட்டத்திற்கெதிராக இராணுவத் தலையீடு

1971,1973 - மீண்டும் கம்யூனிஸ்டுகளுக்கெதிராக இராணுவத் தலையீடு - நூற்றுக்கணக்கான கிராமங்கள் மீது குண்டு வீச்சு.

### இந்தோனேசியா

1965 - சி.ஐ.ஏ. சதியால் சுகர்னோ ஆட்சிக் கவிழ்ப்பு - சுகார்த்தோ தலைமை வலதுசாரிகள், முசுலீம் மதவெறியர்கள் ஆட்சி - கம்யூனிஸ்டுகள் மற்றும் தொழிலாளர்கள் 7 லட்சம் பேர் கொலை - அமெரிக்க ஆதரவுடன் கிழக்கு திமோரில் இனப்படுகொலை.

### கம்போடியா

1969-75 - வியத்நாம் கொரில்லாக்களுக்குப் பின்புலமாக இருந்த 'குற்றத்திற்காக' முப்படைகளின் முற்றுகை - நாடு முழுவதும் குண்டுவீச்சு - 20 லட்சம் மக்கள் கொலை.

### ஆப்கானிஸ்தான்

1998 - இசுலாமியத் தீவிரவாதிகளுக்கான முன்னாள் சி.ஐ.ஏ. பயிற்சி முகாம்கள் மீது ஏவுகணைத் தாக்குதல்

2001 - உலக வர்த்தக மையம், பென்டகன் தகர்க்கப்பட்டது பின்லாடன் சதி என்ற குற்றச்சாட்டு - பின்லாடனைப் பிடிப்பதற்கென்ற பெயரில் முப்படைகளின் தாக்குதல் - பயங்கரவாதத்துக்கு எதிரான போர் பல நாடுகளுக்கும் விரிவடையும் என மிரட்டல்.

## ஐரோப்பா

### ரசியா:

1918-22 - கம்யூனிஸ்டு புரட்சியை முறியடிக்க கடற்படைகள் 20,000 துருப்புகளின் ஆக்கிரமிப்பு.

### யூகோஸ்லாவியா

1919 - இத்தாலிக்கு ஆதரவாக ஆக்கிரமிப்பு

1946 - டிட்டோவுக்கு எதிராகக் கடற்படை மிரட்டல்

1992-94 - நேட்டோ படைகளின் கடற்படை முற்றுகை

1999 - நாடு முழுவதும் குண்டு மழை - நகரங்கள் தரைமட்டம் - அணு ஆயுத ஏவுகணைகள் வீச்சு - ஆயிரக்கணக்கான மக்களுக்கு கதிரியக்கப் பாதிப்பு -

### துருக்கி

1922 - மன்னராட்சிக்கு எதிராகவும் கிரீஸின் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் கமால் பாஷா நடத்திய விடுதலைப் போரை நசுக்க இராணுவத் தாக்குதல்.

### ஜெர்மனி

1948 - அணு ஆயுத மிரட்டல் - குண்டுகளுடன் பெர்லினில் விமானங்கள் இறங்குதல்

1961 - கிழக்கு ஜெர்மனிக்கு எதிராக அணு ஆயுத மிரட்டல்

### கிரீஸ்

1947 - கம்யூனிஸ்டுகளுக்கும் பாசிஸ்டுகளுக்கும் இடையிலான உள்நாட்டுப் போரில் பாசிஸ்டுகளை ஆட்சியலமர்த்த இராணுவத் தலையீடு - 1,60,000 பேர் கொலை.

1948 - ரசியாவுக்கு அணு ஆயுத மிரட்டல் - அணுகுண்டு தாங்கிய விமானங்கள் ஜெர்மனியில் குவிப்பு

### அல்பேனியா

1997 - வெளிநாட்டவர்களைப் பாதுகாப்பது என்ற பெயரில் இராணுவத் தலையீடு

### போஸ்னியா

1993-95 - அமைதியை நிலைநாட்டுவது என்ற பெயரில் இராணுவத் தலையீடு - விமானப் படைத் தாக்குதல்

### குரோசியா

1995 - 'அமைதியை நிலைநாட்ட' விமானப்படைத் தாக்குதல்

### மாசிடோனியா

2001 - அல்பேனிய கிளர்ச்சிக்காரர்களை அடக்க இராணுவத் தலையீடு

## மத்திய கிழக்கு நாடுகள்

### ஏமன்

2000 - வளைகுடாப் போரில் ஏமன் ஈராக்கை ஆதரித்ததால் கடற்படை மிரட்டல்.

### லெபனான்

1949 - சி.ஐ.ஏ. நடத்திய இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு

1958 - பொம்மை அரசைப் பாதுகாக்க இராணுவத் தலையீடு

1982-84 - இசுரேல் - அமெரிக்க படையெடுப்பு - பாலஸ்தீன மக்கள் வெளியேற்றம் - பெய்ரூட் நகர் மீது குண்டு வீச்சு - கிறித்தவப் பயங்கரவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து 12,000 பாலஸ்தீனர்கள் கொலை.

### ஓமன்

1970 - ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சியை ஒடுக்க இராணுவத் தலையீடு - ஈரான் ஷாவின் உதவியுடன் மீண்டும் சுல்தான் ஆட்சி.

### எகிப்து

1956 - சூயஸ் கால்வாயை நாட்டுடைமையாக்கிய நாசர் ஆட்சிக்கு எதிராக 'நேட்டோ' படையெடுப்பு - அணுஆயுத மிரட்டல்

1967 - அமெரிக்க ஆதரவுடன் இசுரேல் படையெடுப்பு

### ஈராக்

1958 - எண்ணெய்க் கிணறுகளை நாட்டுடைமையாக்க முயன்றதற்காக அதிபர் மொசாதேவுக்கு எச்சரிக்கை - குவைத்தை ஆக்கிரமிக்க சதி என குற்றம் சாட்டி அணு ஆயுத மிரட்டல் - ஆட்சிக் கவிழ்ப்பு - சி.ஐ.ஏ. அளித்த பட்டியலின் படி பல ஆயிரம் கம்யூனிஸ்டுகள் படுகொலை.

1990 - குவைத் ஆக்கிரமிப்பைக் காரணம் காட்டி தாக்குதல் - 2 லட்சம் பேருக்கு மேல் உடனடி சாவு - சரணடையும் படைகள் மீது குண்டு வீச்சு - பொருளாதாரத் தடைகள் காரணமாக லட்சக்கணக்கில் தொடரும் சாவுகள்.

1992 - அதிபர் புஷ்ஷை கொலை செய்ய சதி செய்ததாகக் கூறி ஏவுகணைத் தாக்குதல்.

1998 - மீண்டும் ஏவுகணைகள், குண்டு வீச்சு

### சவுதி அரேபியா

1990-91 - வளைகுடாப் போரையொட்டி 5,40,000 துருப்புகள் ஓமன், குவைட்டர், பகரைன், ஐக்கிய அரபு எமிரேட்டுகள், இசுரேலில் நிலை கொள்ளுதல்.

### குவைத்

1991 - இராக்கிடமிருந்து பாதுகாக்க இராணுவத் தளம்.

### பாலஸ்தீனம்

1967 முதல் இன்றுவரை - அமெரிக்க ஆதரவுடன் இசுரேலின் ஆக்கிரமிப்பு - ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் இதுவரை கொலை.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி.வல்லபேசன், 3, செகந்நாதபுரம் நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, [illegible], 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
படிப்பகம்
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS
FOR INDIA UNDER NO: 42647/87
Regd. No.TN/Chief PMG - 303/2001
www.padippakam.com

# இதை முன்னரே எதிர்பார்த்தேன்!

அன்பார்ந்த புதிய கலாச்சாரம் ஆசிரியருக்கு,

நீங்கள் இணையத்தளத்தில் வெளியிட்டிருந்த கட்டுரையின் மையக் கருத்துடன் நான் முழுவதும் உடன்படுகிறேன். நான் ஒரு டாக்ஸி டிரைவர் என் குடும்பம் நியூயார்க்கில் இருக்கிறது. இந்தத் தாக்குதலில் எனது மாமனையும், இரண்டு அத்தைகளையும் இழந்துவிட்டேன், வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனால் நான் இதற்கு பயங்கரவாதிகளைக் குற்றம் சொல்லமாட்டேன்.

மேற்குலகில் இருக்கிற எனது சக குடிமக்களைப்போல இந்தத் தாக்குதலைக் கண்டு நான் கடுகளவும் ஆச்சரியப்படவில்லை. இது முன்னமே நடந்திருக்கவேண்டும். இத்தனை தாமதமானதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

நான் ஒரு சலுகை பெற்ற வெள்ளைக்காரனாக தென்னாப்பிரிக்காவில் வளர்ந்தவன். சக மனிதனின் துன்பத்தில் கிடைக்கும் செல்வம் எத்தனை கொடுமையானது என்பதை நான் அனுபவத்தில் உணர்ந்தவன்.

பல இசுலாமிய நாடுகளுக்கும் நான் பயணம் செய்திருக்கிறேன். அவர்களின் ஆழ்ந்த அறிவைக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். அவர்கள் மீது மேற்குலகம் திணித்திருக்கும் அவமானத்தையும் அநீதியையும் எண்ணிக் கூனிக் குறுகியிருக்கிறேன்.

தங்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளை மூடிவிட்டு, உண்மையில் உலகம் எப்படி இருக்கிறது என்பதை அமெரிக்கர்கள் கண்ணால் பார்க்க வேண்டும். சிந்திக்க வேண்டும்.

இல்லையென்றால் எதிர்காலத்தில் அவர்களது பிள்ளைகள் அனுபவிக்கவிருக்கும் துன்பத்திற்கான காரணத்தை அவர்கள் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது.

தம்முடைய டாம்பீக வாழ்க்கையும், தாம் தெரிவுசெய்யும் அரசியல் தலைவர்களும் தான் எண்ணற்ற ஏழை நாட்டுக் குழந்தைகளை துயரத்தில் தள்ளியிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளாத வரை தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியும் அவர்கள் புரிந்துகொள்ள முடியாது.

அமெரிக்காவிடம் எவ்வளவு பொருளாதார ராணுவ வலிமை உள்ளதோ அதற்கு உகந்த அளவு அரசியல் அறிவும் பொறுப்புணர்ச்சியும் அதன் குடிமக்களுக்கு இருக்கவேண்டும். ஆனால் இப்போதைக்கு அது நடக்கிறமாதிரி எனக்குத் தெரியவில்லை.

தான் விரும்புகிற உலக ஒழுங்கை எந்த அளவுக்கு நம்மீது அமெரிக்கா திணிக்கிறதோ, அதே அளவுக்கு இத்தகைய பதிலடிகளும் அதிகரிக்கத் தான் செய்யும்.

இந்த உலக தாதாவின் திமிர்த்தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க நாம்தான் முயல வேண்டும்.

அன்புடன்,
மைக்கேல், ஆஸ்திரேலியா,



நியூயார்க் தாக்குதலையொட்டி இண்டிமீடியா சென்டர் என்ற இணையத்தளத்தில் புதிய கலாச்சாரம் வெளியிட்ட கட்டுரைக்கான பதில் இந்தக் கடிதம். புதிய கலாச்சாரம் கட்டுரை இவ்விதழின் உள்ளே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

படிப்பகம்